ஒக்டோபர் 21 | 24 பக்கங்கள் | ரூபா 14.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

வார மலர்



## தேர்தலும் தமிழ், முஸ்லிம் கட்சிகளும்

## இழுக்கு! கிழக்கு பல்கலைக்கு!

## நாடாளுமன்ற கலைப்பு

# ஓயாத அலைகள்

## வெளிவராத தகவல்கள்



ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வரலாற்று தடம் பதித்த நிகழ்வுகள்

அதி விரைவில் உங்கள் கைகளில் சுடர் ஒளி நாளிதழ்

# பொலிஸ் ஜெயா கையில்! தேர்தலுக்கு இடைஞ்சல்!!

## மத்திய உள்துறை அமைச்சருக்கு கருணாநிதி புகார்

தமிழக உள்ளாட்சித்துறை தேர்தல்கள் உச்சகட்டத்தை அடைந்த போது ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் சட்டத்தைத் தமது கையில் எடுத்துக் கொண்டார்கள். எதிர்க்கட்சியினர் தேர்தல் பிரசாரத்தில் இறங்க முடியாத அளவுக்கு தடையாக இருந்தார்கள்.

அ.தி.மு.க. தேர்தல் கூட்டங்களில் உரை நிகழ்த்தியவர்கள் "பொலிஸார் எங்கள் பக்கம் தான். ஆகவே எதற்கும் பயப்படாதீர்கள். தி.மு.க. வேட்பாளர்களை ஓட ஓட விரட்டுங்கள்" என்று கூக்குரலிட்டனர். இதனால் தி.மு.க. வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரம் செய்ய முடியாமல் போய் விட்டது.

இது தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதி உள்துறை அமைச்சர் அத்வானியிடம் முறையிட்டார். "ஜெயலலிதாவின் பொலிஸ் தர்பார் தொடருகிறது. இது உள்ளாட்சித் தேர்தலுக்கு இடைஞ்சலாக இருக்கிறது" என்று கருணாநிதி குறிப்பிட்டார்.

ஜெயலலிதா உள்ளாட்சித் தேர்தலின் போது ஊரூராகச் சென்று பிரசாரம் செய்ய வில்லை. அவருடைய வழக்கு விசாரணைகள் நடைபெற்றதால் அவருக்கு நேரம் இருக்கவில்லை. நிலக்கரி ஊழல் வழக்கில் அவர் நீதிமன்றம் சென்று சாட்சியம் அளிக்க வேண்டியதாகி விட்டது.

இருப்பினும் ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் எவராலும் அடக்க முடியாத அடக்கு முறையாளர்களாகவே இருக்கிறார்கள்.

தமிழக பொலிஸ் தர்பார் முற்று முழுதாகவே ஜெயலலிதாவின் பிடிக்குள் தான் இருக்கிறது. மத்திய அரசு பிறப்பித்த உத்தரவுகளையும் தூக்கி எறிந்து விட்டு ஜெய லலிதா அட்டகாசமாகத் தனது அட்டூழியங்களைத் தொடரு கிறார். அவரைத் தட்டிக் கேட்க யாருமில்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை மோசம் அடைந்திருக்கிறது.

ஜெயலலிதா தனது சட்டவிரோத ஆட்சியின் போது கருணாநிதி மீது நடத்திய தாக்குதல் மிகவும் மூர்க்கத்தனமாக இருந்தது. அதனை அகில இந்திய ரீதியில் பலரும் கண்டித்தார்கள். மத்திய அரசாங்கமே தலையிட்டது. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்குத் தண்டனை விதிக்கும்படி மத்திய அரசு கேட்டது.

ஜெயலலிதா அதற்குப் பணிந்து விட வில்லை. பெயரளவில் ஒரு விசாரணை கமிஷனை நியமித்தார்.

ஜெயலலிதாவின் பிடிக்குள் தமிழக பொலிஸ் அதிகாரிகள் எவ்வாறு இயங்குகிறார்கள் என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். அது பற்றி அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

ஜெயலலிதாவுக்கு இன்னும் முதலமைச்சருக்குரிய பொலிஸ் பாதுகாப்பு உள்ளது. அதே ராஜதர்பார் நீடிக்கிறது. ஒ.பன்னீர் செல்வம் பெயரளவில்தான் முதலமைச்சர். அதிகாரம் இன்னும் ஜெயலலிதாவிடம்தான் உள்ளது.

முன்னாள் முதலமைச்சர் என்றால் தி.மு.க தலைவர் கருணாநிதியும் முன்னாள் முதலமைச்சர் தான். அரசைப் பொறுத்தவரை இருவருக்கும் ஒரே தகுதி தான். அரசு இருவருக்கும் ஒரே வகை சலுகையைத்தான் அளிக்க வேண்டும். ஆளுங்கட்சியைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சருக்கு ஒரு தகுதி. எதிர்க் கட்சியை சார்ந்த முன்னாள் முதலமைச்சருக்கு ஒரு தகுதி என்று எந்த விதமான வேறுபாடும் கிடையாது.

அது மாத்திரமல்ல தி.மு.க.தலைவர் கருணாநிதியும் அ.தி.மு.க தலைவி ஜெயலலிதாவும் மத்திய அரசின் கண்ணோட்டத்திலே இருவருமே ஒரே பிரிவினைச் சேர்ந்தவர்கள் தான். அந்த வகையில் இருவருக்கும் ஒரே விதமான பாதுகாப்பினைத்தான் மத்திய அரசு அளித்து வருகின்றது. ஆனால் மாநில அரசின் நிலை என்ன?

ஜெயலலிதா ஆட்சியிலே இருந்த போது முதல்வரின் பாதுகாப்புக்காகவே "ஸ்பெஷல் செக்யூரிட்டி குரூப்" என்ற பெயரில் சுமார் 600பேர் கொண்ட ஒரு தனிப்பிரிவையே ஏற்படுத்தியிருந்தார்.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது எந்த அளவிற்கு பாதுகாப்புப் பணிக்காக ஆட்கள் ஒதுக்கப்பட்டிருந்தார்களோ அத்தனை பேரும் தற்போது ஜெயலலிதா முன்னாள் முதல்வராக ஆன பிறகும் தொடர்ந்தும் பணியாற்றி வருகிறார்கள். இதுதான் முறையா என்ற கேள்வி எழுகிறது.

இன்னும் சொல்ல வேண்டுமேயானால் ஜெயலலிதா முதல்வராக இருந்த போது இந்தப் பாதுகாப்பு பிரிவினரெல்லாம் ஒரு பொலிஸ் சுப்ரிண்டன் தலைமையில் பணியாற்றி வந்தார்கள்.

தற்போதும் இதே அதிகாரியின் தலைமையில் தான் அத்தனை பேரும் தொடர்ந்தும் ஜெயலலிதாவிடம் பணியாற்றி வருகிறார்கள்.

இதிலே ஒரு வெட்கக் கேடான விஷயம் முதலமைச்சர் என்று நாமகரணம் சூட்டப் பட்டு பணியாற்றி வருவதாகக் கூறப்படும் பன்னீர்செல்வத்துக்கு ஒரு உதவி பொலிஸ் சுப்ரிண்டன் தலைமையிலேதான் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. அதில் பணியாற்றுவோரும் மிகச் சிலரே.

ஜெயலலிதா வெளியே செல்லும் போது பாதுகாப்பிற்காக வரும் வண்டிகளின் எண்ணிக்கை குறையவில்லை. ஆனால் அதில் பாதி அளவிற்கு கூட தற்போதைய முதல்வர் என்று சொல்லப்படும் பன்னீர் செல்வத்துக்கு வருவதில்லை.

இந்த வேறுபாட்டை நேரில் காணும் பொலிஸார் பதற்றம் அடைகிறார்கள். முதலமைச்சர் என்ற நாமகரணம் தான் பன்னீர்செல்வத்திற்கு சூட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகாரமும் அதற்குரிய அந்தஸ்தும் இன்னமும் ஜெயலலிதாவினால் தான் அனுபவிக்கப்பட்டுவருகின்றன என்கிறார்கள்.

புதிய முதலமைச்சர் பன்னீர்செல்வத்தை ஒரு கருவி யாக வைத்துக் கொண்டு தமது பொலிஸ் தர்பாரை ஜெயலலிதா தொடருவார் என்பது நிச்சயமாகி விட்டது.

இதே நேரத்தில் மத்திய அரசு சேவைக்கு

**பக்கத்து வீடு**

அனுப்பும்படி முத்துக்கருப்பன் தலைமையில் மூன்று பொலிஸ் அதிகாரிகளை வாஜ்பாய் அரசாங்கம் கேட்டிருந்தது.

அவர்களை அனுப்பி வைக்க ஜெயலலிதா தயாராக இல்லை. ஆனால் கருணாநிதி மீது தாக்குதல் நடத்திய பொலிஸ் குழுவுக்குத் தலைமை தாங்கிய மாவட்ட பொலிஸ் ஆணையாளர் ரவீந்திரநாத்தை ஜெயலலிதா பதவி நீக்கம் செய்திருக்கிறார். தமது பதவி பறிபோவதற்கு முன் இறுதியாக ஜெயலலிதா எடுத்த நடவடிக்கை இது.

— கதாசி

# இளைஞர் ஆள்சேர்ப்பின் விளைவை உணர்த்தும் யாழ் துப்பாக்கிச் சூடு!

## வீதிப் போக்குவரத்து கண்காணிப்புத் தொண்டருக்கு வேட்டு

யாழ் நகரப் பகுதியில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன் என்ற 19 வயது இளைஞர் கடந்த 17 ஆம் திகதி புதன்கிழமை காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

வீதி ஒழுங்குப் பணியில் ஈடுபடுவதற்காக இருவரும் வேறு இருவரும் யாழ் நகரில் கஸ்தூரியார் வீதி — நாவலர் வீதிச் சந்திப் பகுதிக்கு வந்து சேர்ந்த சிறிது நேரத்தில் அப்பகுதிக்கு மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தனர் என்று கூறப்படும் இனந்தெரியாத நபர்கள் அந்தத் தொண்டரின் தலையில் பிஸ்டலால் சுட்டு விட்டு விரைந்து தப்பிச் சென்றிருக்கின்றனர்.

சம்பவம் நடந்து சிறிது நேரத்தின் பின் நகரில் முக்கிய வீதிகளில் படையினர் வீதிச் சோதனைகளை நடத்தி மோட்டார் சைக்கிள்களில் சென்றவர்களை வழி மறித்து வைத்து விசாரணை செய்தனர்.

குடாநாட்டில் வீதிப் போக்குவரத்துக்களை ஒழுங்குபடுத்துவதற்காக தொண்டர் அடிப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட இளைஞர்களில் ஒருவரே கொல்லப் பட்டிருக்கிறார்.

அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தலைமையிலான வடக்கு அபிவிருத்தி புனர் வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகார அமைச்சு இந்த இளைஞர் தொண்டர்பிரிவை அண்மையில் ஆரம்பித்திருந்தது.

முதற் கட்டமாக ஒரு தொகுதி இளைஞர்கள் இந்தத் தொண்டர் பிரிவில் சேர்க்கப்பட்டு அவர்களுக்குப் பொலீஸார் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

பொதுவாக நாட்டின் முக்கிய நகரங்கள் உட்பட சகல பொலிஸ் பிரிவுகளிலும் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு இயங்குவது வழக்கம்.

ஆனால் யுத்தப் பிரதேசமான குடாநாட்டில் இந்த சேவையில் ஈடுபடுவதற்குப் போதிய பொலிஸார் இல்லாத நிலையில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள் சீர்கெட்டிருந்தன.

இந்நிலையில் குடாநாட்டு இளைஞர்களைச் சேர்த்து இப்பணியில் அதாவது பொலிஸாரின் கடமையில் ஈடுபடுத்த எடுக்கப்பட்ட இந்த முயற்சி குறித்து ஆரம்பம் முதலே சர்ச்சைகள் எழுந்தன.

ஈ.பி.டி.பி அமைப்பின் ஏற்பாட்டில் சுமார் 25 இளைஞர்களுக்கு யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்துக் கடந்த ஜூலை மாதம் பயிற்சி அளிக்கப்பட்டபோது இந்த சர்ச்சை எழுந்தது.

பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்கள் ஆரம்பத்தில் 'பொலிஸ் உதவியாளர்கள்' என்று அழைக்கப்பட்டபோது சர்ச்சை மேலும் வலுத்தது. பின்னர் அந்தப் பெயர் மாற்றப்பட்டது.

குடாநாட்டில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள் சீர்குலைந்து வீதி விபத்துக்கள் பெருகி வருவதைச் சுட்டிக் காட்டி இத் திட்டத்தைப் பலரும் வரவேற்ற போதும், தொண்டர் சேவை என்ற பெயரில் அப்பாவி இளைஞர்களைப் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சியாக இது அமைந்து விடக்கூடாது என்றும் சில தமிழ்த் தரப்பினர் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

குடாநாட்டு இளைஞர்களை படைகளுக்குத் திரட்டும் மறைமுக நோக்குடன் ஸ்ரீலங்கா அரசு தனக்கு விசுவாசமான அரசியல் கட்சி ஒன்றின் ஊடாகத் தொண்டர் சேவையை ஆரம்பித்து தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத் திட்டமிட்டிருக்கிறதா என்ற சந்தேகத்தையும் தமிழ்த் தரப்புக்கள் அப்போது சுட்டிக் காட்டியிருந்தன.

இது தொடர்பான விவரங்கள் கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி வெளியான 'சுடர் ஒளி' வாரமலரில் இப்பத்தியில் வெளியாகி இருந்தன.

தற்போது — சுமார் மூன்று மாத




காலத்துக்குப் பிறகு — இந்த இளைஞர் ஆட்சேர்ப்பின் விபரீத விளைவை உணர வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கொல்லப்பட்ட விமலேஸ்வரன் தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்த வறிய நிலையில் உள்ள — குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர். வருமானம் கருதி வேலை வாய்ப்புத் தேடியோ அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காகவோ அவர் இந்த சேவையில் இணைந்திருக்கலாம்.

ஆனால் இந்தச் சேவை பொது மக்களின் நலன் கருதியதாக இருந்தாலும் இதனை முன்னெடுத்து நடைமுறைப்படுத்தியதன் பின்னணியில் அரசியல் சார்புச் சக்திகள் இருந்திருக்கின்றன.

பொலிஸார் தமது பாதுகாப்பையே உறுதி செய்து கொள்ள முடியாத நிலையில் தமது கடமைகளில் ஒன்றை அப்பாவி இளைஞர்கள் மூலம் நிறைவு செய்ய முயன்றிருக்கின்றனர்.

தொண்டர்களான இந்த இளைஞர்களுக்கு சீருடைகளையும் சம்பளக் கொடுப்பனவையும் மட்டுமே வழங்குவதாக வடக்கு புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்தபோதும் —

தாங்கள் இந்த இளைஞர்களுக்குப் போக்குவரத்து விதிகள் தொடர்பாக மட்டுமே பயிற்சிகளை வழங்குவதாகப் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டிருந்தாலும் —

இவர்கள் கட்சி ஒன்றின் சார்பாகவே இயங்குகிறார்கள் என்ற சந்தேகம் பலருக்கும் எழவே செய்தது.

படைத்தரப்பு கூட இந்த இளைஞர்களைக் கட்சி ஒன்றின் உறுப்பினர்களாகவே கருதி வந்திருப்பது கடந்த வாரம் விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த ஓர் அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதும் கவனிக்கத் தக்கது.

சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞரின் கொலைக்கு விடுதலைப் புலிகள் மீதே பொறுப்புச் சுமத்தப்பட்டிருக்கிறது. பொலிஸ் உதவியாளர்கள், அபிவிருத்தித் தொண்டர்கள் என்ற பெயரில் குடாநாட்டு இளைஞர்களை தொண்டர் படைகளாகத் திரட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதாக விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை ஏற்கனவே துண்டுப் பிரசுரம் மூலம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

எனவே இத்தகைய முயற்சிகளைத் தடுப்பதற்காக விடுதலைப் புலிகளாலேயே இந்த இளைஞர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் புலிகள் தரப்பு இதனை இன்னமும் (இதனை எழுதும் வரை) உறுதிப்படுத்தவில்லை.

வீதிப்போக்குவரத்துக் கண்காணிப்புத் தொண்டரான இளைஞரின் கொலையைக் கண்டித்திருக்கும் ஈ.பி.டி.பி. அமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே. ஜெகன் 'நிராயுத பாணிகளாகத் தங்களை அடையாளங் காட்டி நாசகாரச் செயல்களில் ஈடுபடும் கொலைகாரர்களின் கொலைக்கரம் மீண்டும் ஒரு தடவை யாழ். நகரில் அரங்கேறி இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

அவரது இந்தக் கூற்று இந்த அப்பாவி இளைஞனின் கொலையில் விடுதலைப் புலிகளைத் தவிர்த்து வேறு ஆயுதக் குழுக்களும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தைக் கிளப்புகிறது.

எது எவ்வாறாயினும் மக்கள் நலனுக்கான சேவைகள் என்ற பெயரில் அப்பாவி இளைஞர்களைத் துப்பாக்கிகளுக்கு முன் நிறுத்தும் செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளைக் கண்காணிக்கும் பணியின் அவசியத்தைக் கருத்திற் கொண்டு அதற்கான பணி அரசியல் சாராத — கட்சி சாராத சுயாதீன அமைப்புகள் மூலம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இது போன்ற விடயங்களில் சம்பந்தப்படுவதை அரசியல் கட்சிகள் தவிர்த்துக் கொள்வது எதிர்காலத்தில் இத்தகைய அவல மரணங்கள் ஏற்படாமல் இருக்க உதவுவதாக அமையும்.

— வலிகாமத்தான்

# புலிகளின் இலக்கில் சிக்கிய விமானப்படை முகாம்

## கட்டுநாயக்காவுக்குப் பின் மற்றொரு இழப்பு

கட்டுநாயக்காவை அடுத்து புலிகளால் இலக்கு வைத்துத் தாக்கப்பட்ட விமானப்படைத் தளம் திருகோணமலை மொறவெவப் பகுதியிலுள்ள வில்வெரிக்குளம் விமானப்படை முகாம் ஆகும்.

புலிகளிடமிருந்து பாரிய தாக்குதல் ஒன்றை எதிர்பார்த்து அநேக பகுதிகளிலும் தமது பாதுகாப்பை பலப்படுத்திக் கொண்ட படைத்தரப்புக்கு புலிகளின் இந்தத் தாக்குதல் அதன் கட்டமைப்பில் கணிசமான பின்னடைவைக் கொடுத்துள்ளது.

வில்வெரிக்குளம் விமானப்படை முகாம், திருகோணமலை நகருக்கு வடமேற்கே திருகோணமலை – அநுராதபுரம் வீதியில் நகரிலிருந்து 12 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. திருகோணமலைக்கான பிரதான நுழைவாயில்களான இரு பெருந்தெருக்களுக்கு இடையில் அமைந்துள்ள நெடுஞ்சாலையில், சுற்றிவர காடு சூழ்ந்த பகுதியிலேயே இந்த முகாம் உள்ளது.

இந்த நெடுஞ்சாலையால் வவுனியாவுக்கான பஸ் மட்டுமே போக்குவரத்தை மேற் கொள்கிறது. இப்பகுதிகளில் தமிழ் மக்கள் பாரிய நிலப்பரப்புகளில் தமது குடியிருப்புக்களை அமைத்து இருந்த போதும் தற்போது அங்கு எவரும் இல்லை என்றே கூறலாம்.

அவ்வளவுக்கு சனசந்தடியற்ற ஒரு சூனியப் பிரதேசத்தில் படையினர் மட்டுமே தமது விநியோக நடவடிக்கைகளை வலுதுணிவாக மேற்கொண்டு வந்தனர்.

புலிகள் நினைத்திருந்தால் இந்த விநியோக வழியை இலக்கு வைத்து தாக்கியிருக்கலாம். என்றாலும் முகாமை முற்றாக அழிக்கும் திட்டத்துடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 10ஆம் திகதி புதன்கிழமை முன்னிரவு முகாமை அண்டிய காட்டுப்பகுதிகளில் புலிகளின் 50க்கும் மேற்பட்டோர் கொண்ட அணி கூடியது. திட்டமிட்டபடி நள்ளிரவை அண்மித்த நேரத்தில் புலிகளின் அணி முகாமை அண்மித்தது. 11.30 மணியளவில் முகாமிலிருந்த படையினர் சற்றும் எதிர்பாராத விதத்தில் புலிகளினால் அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

பாரிய தாக்குதல் ஒன்றுக்கு தேவையான ஆயுதங்கள் இன்றி சிறியரக ஆயுதங்களின் உதவியுடன் புலிகள் மேற்படி தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

முகாமின் முன்னரங்கு நிலைகளில் உள்ள பாதுகாப்பு நிலைகளைப் புலிகள் தாக்கியபோது படையினரில் நால்வர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர்.

முகாமைச் சூழ அமைக்கப்பட்டிருந்த முள்கம்பி வேலிகளையும், கண்ணி வெடி இணைப்புக்களையும் வெட்டி விட்டு புலிகள் முகாமினுள் நுழைந்து தாக்குதல் நடத்தினர்.

புலிகளின் எண்ணிக்கையிலும் கூடுதலாகவே முகாமிலிருந்த விமானப்படையினர் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலினால் உடனடியாகவே முகாமை விட்டுப் பின் வாங்கினர்.

பின் வாங்கிய விமானப்படையினர் ஆயுதங்களை விட்டு விட்டுக் காட்டுப் பகுதிகளினுள் அந்த நடுநிசியில் கால்போன திசைகளில் ஓடினர். இவ்வாறு ஓடியவர்களில் 17 பேரைக் காணவில்லை எனப் படைத்தரப்பு அறிவித்தது. தாக்குதல் தொடங்கிச் சற்று நேரத்திலேயே முகாம் புலிகளின் கைகளில் வீழ்ந்தது.

வெளியிலிருந்து புலிகள் மீது தாக்குதல் நடத்திய படையினர் மீது முகாமிலிருந்து ஆயுதங்களாலேயே புலிகள் திருப்பித் தாக்கியதில் படையினரில் பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

கொண்டு வந்த ஆயுதங்களுடனும், முகாமிலிருந்த மேலதிக ஆயுதங்களுடனும் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் படையினர் முற்றாகவே முகாமை விட்டுப் பின்வாங்கினர்.

சுமார் ஆறு மணித்தியாலங்களுக்கு மேலாக முகாமை முழுமையாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த புலிகள் பின் வாங்கிச் செல்லும் போது முகாமின் மீது சரமாரியான எறிகணைத் தாக்குதல்களை நடத்தி முகாமை தகர்த்து அழித்தனர்.

ஆனால் அங்கு நடந்த வேள்வி பற்றி உண்மையில் அறிந்தவர்கள் விமானப்படையினரும் புலிகளுமே.

தாக்குதல் தொடர்பான இழப்பை இராணுவப் பேச்சாளர் ஒத்துக் கொண்டார். ஆனால் மேலதிக படை அணிகள் சென்று புலிகளை விரட்டியடித்ததாக அவர் கூறினார். அது ஒரு முறியடிப்புச் சமரும் கூட என்றும் தெரிவித்தார்.

புலிகள் தரப்பு இது குறித்து செய்தி வெளியிடுகையில் தமது தரப்பில் மேஜர் பாபு (தெய்வேந்திரன் சிவகுமார் – விசுவமடு) 2ஆம் லெப்ரினெனட் நித்தியன் (சிவகுரு பத்மநாதன் – திருகோணமலை) ஆகியோர் உயிரிழந்தனர் என்று கூறினர். முகாமிலிருந்து பல ஆயுததளவாடங்கள் மீட்கப்பட்டன என்றும் தெரிவித்தனர்.

படைத்தரப்பு ஆயுத தளவாட இழப்புக் குறித்து தகவல் தருகையில் 12.7 விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் இரண்டு, ஜி.பி. எம்.ஜிமூன்று, எல். எம்.ஜி. மூன்று, 60 மில்லி மீற்றர் மோட்டார்கள் என்பன புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. முகாமிலிருந்து பல ஆயுத தளவாடங்கள் முகாமை விட்டுப் பின் வாங்கும்போதே தம்மால் அழிக்கப்பட்டன எனவும் கூறப்பட்டுள்ளது.

எங்கேயோ ஒரு காட்டுப் பகுதியில் தாக்குதல் இடம் பெற்றாலும் கட்டுநாயக்கா அனர்த்தத்துக்கு பின்னர் விமானப்படைக்கு விழுந்துள்ள அடி இது ஆகும்.

தாக்குதல் இடம்பெற்றதை அடுத்து எயார் கொமடோர் லக்சன் சல்கட, விமானப் படை நடவடிக்கைகளுக்கான விங்கொமாண்டர் மொகான் சொய்ஸா, தரைத் தள உத்தியோகத்தர்கள், ஆகியோர் அந்த இடத்துக்கு விரைந்தனர்.

புலிகளின் அணிகள் முகாமினுள் நுழைந்த வழிகள் தாக்குதலுக்கு சாத்தியக்கூறான காரணங்கள் என்பன குறித்து ஆராய்ந்தனர்.

எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி வில்வெரிக் குளம் முகாம் மீதான தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்த கப்டன் கொலித குணதிலக தலைமையிலான குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இந்த விசாரணைக்குழு முகாமிலிருந்த படையினர் உட்பட சில உயர்திகாரிகளிடமிருந்து வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொள்ளும்.

இதே வேளை–

புலிகளின் அடுத்த படை நடவடிக்கை வடக்கில் எந்நேரமும் வெடிக்கலாம் என நம்பப்படுவதாக இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மையும், முல்லைத்தீவுக் கடற்பரப்பில் உள்வாங்கப்பட்ட நவீன ஆயுத தளவாடத் தொகுதியும் புலிகளின் புதிய தாக்குதலுக்கு வழி செய்யும் என நம்பப்படுகிறது.

பூநகரிப் பகுதியில் குடாநாட்டு கடலேரியைக் கடந்து தனங்கிளப்பு உட்பட கேரதீவு வீதியை அண்டிய தச்சன்தோப்பு, அறுகுவெளி, கோவிலாக்கண்டி, பகுதிகளால் மீண்டும் ஒருமுறை ஒரு நடவடிக்கையை ஆரம்பிக்கும் திட்டம் புலிகளுக்கு உண்டு என்றும்–

அதற்கு முன் நாகர்கோயில், மண்டைதீவு பகுதிகளில் புலிகள் ஒரு திசைதிருப்புத் தாக்குதலை நடத்தலாம் என்றும் குடாநாட்டுக்கு அண்மையில் சென்றுபாதுகாப்பு நிலைவரங்களைப் பார்வையிட்டு வந்த மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரிய தலைமையிலான அதிகாரிகள் குழு இராணுவ தலைமையகத்திடம் தெரிவித்துள்ளது.

எது எவ்வாறாயினும் அடுத்த மாதம் வரவுள்ள மாவீரர் தினத்தை ஒட்டி புலிகள் ஒரு தாக்குதலை நடத்துவார்கள் என்ற பாரம்பரிய பயம் படையினரிடம் இருக்கத்தான் செய்கிறது.

– எறியன்




### உறவுகளை அறுக்க வேண்டும்

நாடாளுமன்றம் இரவோடு இரவாக கலைக்கப்பட்ட பின் அடுத்த நாளே அதிகார அம்மணி அடுத்த தேர்தலுக்கு கூட்டணி சேர்க்கும் பணியைத் தொடங்கிவிட்டாராம். அந்தக் கூட்டணிக்கு அவருக்கு முதலில் தேவைப்பட்டவர் தனித்துவத் தலைவர்தானாம்.

இதனால் தனித்துவத்தலைவருக்கு அதிகார அம்மணி தூது அனுப்பினராம். இரண்டு பிரபல முன்னாள் அமைச்சர்கள்தான் அதிகார அம்மணி சார்பில் தூது போனார்கள்.

பழைய சம்பவங்களை மறந்து எதிர் வரும் தேர்தலில் கூட்டுச் சேர்ந்து போட்டியிட வருமாறு அவர்கள் இருவரும் தனித்துவத் தலைவருக்கு அழைப்பு விடுத்தார்களாம்.

''கூட்டுச்சேர்ந்து போட்டியிடுவது பற்றி ஆலோசிக்க நாம் தயார். ஆனால் எமக்கு எதிராகச் செயற்படும் ஒரு தலைவியின் உறவுகளை உங்கள் தலைவி அறுத்துக் கொள்ள வேண்டும்'' என்று தனித்துவத் தலைவர் அடித்துக் கூறிவிட்டாராம்.

ஆனால் அப்படி அத்தலைவியின் உறவை முறித்துக் கொள்ள முடியாது என்று அதிகார அம்மணி தெரிவித்திருக்கிறார்.

அதிகார அம்மணி இப்படி தெரிவித்திருப்பதை அறிந்து கொண்ட தனித்துவத் தலைவருக்கு எதிரான தலைவி தரப்பினர் புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்களாம்.

அதற்கு நன்றிக் கடனாக அதிகார அம்மணியுடன் இணைந்தே போட்டியிடுவது என ஒற்றைக்காலில் நிற்கிறார்களாம்.

### நைல்நதி சுகவாசம் சிக்கலில்

அண்மையில் கட்சி தாவிய குழுவின் தலைவரும், முன்னாள் விளையாட்டுப் பிள்ளையுமான பெரிய புள்ளி அதிகார அம்மணி பற்றிய சில முக்கிய துரும்புகளை வைத்திருக்கிறாராம்.

அதிகார அம்மணி அளவுக்கு அதிகமாக தன்னைத் தாக்கினால் எதிர்த்தாக்குதல்களுக்கு இந்தத் துரும்புகளைப் பயன்படுத்த அவர் திட்டமிட்டிருக்கிறாராம்.

அதிகார அம்மணி கடந்த ஏழு வருடகாலமாக செய்த ஊழல்கள் பற்றிய நீண்ட பட்டியல் இவரிடம் இருக்கிறதாம். எகிப்தின் நைல்நதித் தீரத்திலும் லண்டனிலும் சுகவாசஸ்தலங்களை பெற்றுக் கொண்ட சமாச்சாரங்களும் இவற்றில் அடங்குமாம்.

இந்த விவரங்கள் கட்சி தாவிய குழுவின் தலைவருக்கு நன்கு தெரியும் என்பதால் தான், குழுவின் தலைவர் தாறுமாறாகப் பேசினாலும் அதற்கு எதிராக அதிகார அம்மணி பேசாமல் இருக்கிறாராம்.

கட்சி தாவிய குழுவின் தலைவருக்கு எதிராக அதிகம் எதுவும் பேசவேண்டாம் என்று நீலக்கட்சியின் பிரபலஸ்தர்கள் அதிகார அம்மணிக்கு செய்துள்ள அட்வைஸ்களை அம்மணியும் அப்படியே கடைப்பிடிக்கிறாராம்.

### ஜாலித் தாத்தாவுக்கு வயிற்றில் புளி

அதிகார அம்மணியின் சகோதரம் நீலக் கட்சியின் சார்பில் போட்டியிட விருப்பதாக வெளியாகும் தகவல்கள் அவர் போட்டியிடப்போகும் இடங்களில் உள்ளவர்களுக்கு மட்டுமன்றி 'ஜாலித் தாத்தா'வுக்கும் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறதாம். மழை இல்லா விட்டாலும் உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்திருக்கிறதாம்.

அதிகார அம்மணியின் சகோதரம் கட்சிக்குள் வருவதும், தேர்தலில் போட்டியிடுவதும் உண்மையாக இருக்கக்கூடாது என்று 'ஜாலித் தாத்தா' ஆதங்கப்பட்டிருக்கிறாராம்.

அப்படி நேர்ந்துவிட்டால் அதிகார அம்மணியின் சகோதரத்துக்கு கட்சிக்குள் செல்வாக்கு அதிகரித்துவிடும். அது மட்டுமன்றி எதிர்காலத்தில் நீலக்கட்சி வெற்றி பெற்றால் கட்சிக்குள் இரண்டாவது இடம் கைக்கெட்டாமல் போகக்கூடும்.

இந்த பயம்தான் இந்த ஆதங்கத்துக்குக் காரணமாகும்.


யூகோ
மனதிற்கினிய திருமண அழைப்பிதழ்களைத் தெரிவு செய்து மணவாழ்விலும் மகிழ்ச்சியடையுங்கள்
யூகோ
190,
போதிராஜா மாவத்தை,
கொழும்பு–11
Tel: 075-370019,
Fax: 075-370018


அனைத்து வகை செய்மதி
Dish antennas, T.V. antennas
மற்றும் உதிரிப் பாகங்களின்
இறக்குமதியாளர்களும்
விநியோகஸ்தர்களும்
UKAAYE
SATELLITE SYSTEMS (PVT) LTD.
Showroom:
No. 190, Bodhiraja Mawatha,
Colombo-11.
Tel: 075-370019, Fax: 075-370018
Sole Distributor in Sri Lanka for EUROSTAR


RSL 80%
உங்களுடைய மின்கட்டணத்தில் சேமியுங்கள்!
5W-2U =25 W- 285/-
7W-2U =35 W- 295/-
9W-2U =45 W- 295/-
11W-2U=55 W- 305/-
15W-2U=75 W- 315/-
15W-3U=75 W- 390/-
20W-3U=100W- 430/-
26W-3U=130W- 460/-
55W-4U=275W-1350/-
REIMOO SONS LTD.
88A, Main Street,
Colombo 11.
Tel : 325060, 326643
Fax: 94-1-326643
541218
11, National Housing Scheme, Kiribathgoda
26, Station Road,
Panadura

என்டெனா பொருத்துதல்


Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

அவசர திருத்தங்கள்


Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 – 03 – 1918



மறைவு 24 – 10 – 2000

அமரர் செல்லையா நடேசபிள்ளை

(ஓய்வு பெற்ற பிராந்திய முகாமையாளர், சிங்கர் கம்பனி)

திதி 14–10–2001

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து – வானுறையும்
தெய்வத்துள் ஒன்றான அப்பா!
வையத்துள் நாம் வாழும் வரை – நீங்கள்
தெய்வமாய் வழிகாட்டி நிற்பீர்கள்!

–உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தவர்

60, அருணகிரி வீதி, திருகோணமலை.

சுடர் ஒளி

ஒக்டோபர் 21, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 074- 513112 - 5
E-mail: sudar@uthayan.com

## சுயநல அரசியல்

ஒரு பொதுத் தேர்தல் முடிந்து ஒரு வருடத்தில் மற்றொரு பொதுத் தேர்தல். எதிர்வரும் டிசம்பர் 5ஆம் திகதி நடக்கப் போகிறது.

பொதுத் தேர்தல் என்றால் அதற்குக் கோடிக் கணக்கில் பணம் செலவாகும்.

கொடிய யுத்தத்துக்குப் பணத்தை வாரி இறைத்துக் கொண்டு வெளிநாடுகளில் பல்லைக்காட்டிக் கைநீட்டிப் பிச்சை எடுக்கும் தரித்திர நாடு எமது நாடு.

அப்படியிருக்க வருடத்துக்கு ஒரு பொதுத்தேர்தல் என்றால் அது கட்டுப்படி யாகுமா?

நடக்கப் போகும் பொதுத் தேர்தல் இந்நாட்டுச் சுயநல அரசியலின் வெளிப் பாடு. பெரிய கட்சிகளுடைய தலைவர்க ளின் தலைக்கேறிய அதிகார வெறியின் அடையாளம்.

எப்படி?

கடந்த ஜூலையில் எதிரணியினரின் ஆதரவுடன் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்த அரசின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேறு வது நிச்சயம் என்று தெரிவிந்தும் நாடாளு மன்றக் கூட்டத் தொடரை ஜனாதிபதி இரண்டு மாதங்களுக்கு ஒத்தி வைத்தார்.

அதன் மூலம் தன்னுடைய அரசு கவிழா மல் ஜனாதிபதி பார்த்துக் கொண்டார்.

இப்போது மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை வரவே அதுவும் நிறைவேறும் என்று அறிந்ததும் ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன் றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டு விட்டார்.

தம்முடைய ஆட்சி கவிழ்க்கப்பட்டதாக வரலாறு இருக்கக் கூடாது. தாமே சதா காலமும் ஆட்சி செலுத்த வேண்டும் என்ற முனைப்பிலேயே ஜனாதிபதி செயற்பட்டி ருக்கிறார் என்று தோன்றுகிறது.

எதிரணியும் அதே பாணியில் தான் நடந்திருக்கிறது.

அரசாங்கத் தலைமை மீது அதிருப்தி கொண்ட அமைச்சர்கள் சிலரும் அவர்களு டைய ஆதரவாளர்களும் அரசை விட்டுத் தம்மிடம் வருகிறார்கள் என்றதும் அவர்கள் மனம் மாறுவதற்கு இடமளிக்காமல் ஐ.தே.க திடுதிப்பென்று அரசின் மீது நம்பிக்கை யில்லாப் பிரேரணை கொண்டுவந்து விட்டது.

இந்தப் பிரேரணை நிறைவேற்றபடு வதைத் தவிர்ப்பதற்காக ஜனாதிபதி நாடாளு மன்றத்தைக் கலைக்கக் கூடும் என்று தெரிந்தும் ஐ.தே.க நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரவே செய்தது.

நாடாளுமன்றத்தைக் கலைத்தால் பிறகென்ன? பொதுத் தேர்தல் தானே!

தில்லு முல்லுகளையும் முறைகேடு களையும் செய்தே தேர்தல்களில் அரசாங்கக் கட்சி வெற்றி பெற்று வருகிறது என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் குற்றச்சாட்டு.

தேர்தல் கமிஷன் உட்பட நான்கு கமிஷன்களை அமைக்க வேண்டும் என்று விடாப் பிடியாக நின்ற கட்சி ஐக்கிய தேசியக் கட்சி.

கமிஷன்களை அமைப்பதற்கு வழி செய்யும் 17 ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு விட்டது.

கமிஷன்களை அமைக்கும் அதிகாரமு டைய அரசமைப்புக் கவுன்சிலுக்கு உறுப்பி னர்களை நியமிக்கும் கட்டத்தில் அரசின் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணை கார ணமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது. தேர்தலுக்கும் உத்தரவிடப்பட்டு விட்டது.

ஆட்சி அதிகாரத்துக்கு வர முயற்சி செய்து பார்க்கலாம் என்ற சுயநல நோக்கில் ஊழல் தேர்தலுக்கு இடமளிக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி.

அரசாங்கக் கட்சி என்ன செய்கிறது? அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று பிரேரணை நிறைவேற்றி ஐ.தே.க புதிய ஆட்சியை அமைப்பதற்கு விடக்கூடாது என்று நாடாளுமன்றத்தையே கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்துகிறது. அதன்மூலம் நாட்டுக்கு நட்டத்தை ஏற்படுத்துகிறது.

நாடு எக்கேடு கெட்டால் என்ன, மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டால் என்ன தாம் ஆட்சி அதிகாரத்தில் குந்திவிட்டால் போதும் என்று இரு தரப்பினரும் நினைக்கிறார்கள்.

இங்கே அரசியல் இப்படி இருந்தால் நாடு எப்படி உருப்படும்?

# தேர்தலில் தமிழ்க் கட்சிகள் தனித்துப் போட்டியிட்டால்...!

## எல்லாளன் படை கடும் எச்சரிக்கை

திடீர் நாடாளுமன்றக் கலைப்பும் பொதுத்தேர்தல் அறிவிப்பும் எம்.பிக்களாக இருந்தவர்களில் பலருக்குத் தலையில் இடி விழுந்த மாதிரி ஆகிவிட்டது.

குறிப்பாக கடந்த வருடப் பொதுத் தேர்தலில் முதன் முதலாகத் தெரிவாகி எம்.பிக் களாக வந்தவர்கள் கலங்கிப் போய் அழாக் குறையாக இருக்கிறார்கள்.

மாதாந்தம் மிகக் குறைந்த தொகைப் பணம் செலுத்தும் அடிப்படையில் புத்தம் புதிய இறக்குமதிக்கார்கள் கிடைக்க இருந்தன. கார்கள் வந்து சேர்வதற்கு முன்னரே பதவிகள் பறிபோய்விட்டன.

ஐந்து வருடங்கள் நாடாளுமன்றத்தில் இருந்தால் ஓய்வூதியம் கிடைக்கும் என்று மகிழ்ச்சி அடைந்தார்கள். அந்தச் சந்தர்ப்பமும் நழுவிப்போய்விட்டது.

மாதாந்தம் கொழுத்த சம்பளம், அந்த அலவன்ஸ், இந்த அலவன்ஸ் என்று கை நிறைய வருமானம். அதுவும் நின்று விட்டது.

வீட்டு வசதி, டெலிபோன் வசதி என்று பல்வேறு வசதிகள், வெளிநாட்டு உல்லாசப் பயணங்கள் எல்லாம் முடிந்த கதையாகி விட்டன.

இனி அடுத்த தேர்தலில் போட்டியிடுவது

**காண்டீபம்**

என்றால் என்ன செய்வது? முந்திய தேர்த லில் செலவழித்த பணத்தையே இன்னமும் உழைத்துக்கொள்ளவில்லையே!

போட்டியிடப் பழைய கட்சி டிக்கட் தருமா? தந்தாலும் மக்கள் தங்கள் வாக்கு களை அளித்துத் தெரிவுசெய்வார்களா? இப்படியெல்லாம் சிந்தனை அலைகள்.

ஜொத்தத்தில் மக்கள் சேவைக்கு என்று இல்லாமல் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, அதாவது பிழைப்புக்காக அரசியலில் நுழைந்து தேர்தலில் போட்டியிட்டு எம்.பி.பதவி பெற்றவர்கள் செய்வது என்ன என்று அறியாமல் திகைத்துப் போய் இருக்கிறார்கள்.

இவர்களின் பட்டியலில் தமிழ் எம்.பிக் களில்ஒரு பகுதியினரும் அடங்குகிறார்கள்.

கடந்த பொதுத்தேர்தலில் முதன் முதலாக மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களைப் போலவே பழையவர்களும் குறிப்பிடத்தக்க வகையில் எதையும் செய்யவில்லை.

கொடிய போர் தொடர்கிறது. மக்களின் அகதி வாழ்வும் அவலங்களும் நீங்கும் என்பதற்கான அறிகுறிகள் இல்லை.

தமிழ் எம்.பிமார் என்ன சொல்கிறார் கள்? ''யுத்த நிறுத்தம், இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளுக்கான பொருளாதாரத் தடைநீக்கம், நோர்வேயின் அனுசரணை யுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு— இவற்றைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்'' என்கிறார்கள்.

''நாய் குரைக்கும்; வண்டியும் சென்று கொண்டே இருக்கும்'' இந்த முதுமொழி யின்படி தான் காரியம் நடக்கிறது.

வாய் வீச்சு உண்டு; செயல்திறன் மட்டும் இல்லை.

இன்றைய அரசியல் நிலைவரப்படி தமிழ் எம்.பிக்கள் தத்தமது கட்சிகளின் நலன்களையும் சுய ஆதாயங்களையும் கருத்தில் கொள்ளாமல் இன உணர்வுடன் தமிழ் மக்களின் நல்வாழ்வின் அடிப் படையில் ஒன்றுபட்டு உரிமைக் கோரிக் கைகளை முன் வைத்தால் எந்த அரசாங் கமும் அவற்றை நிறைவேற்றாமல் இருக்க முடியாது.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. ஆயின் எம்.பிக்கள் பிரிந்து சிதறிப்போய் நிற்காமல் ஒன்றுபட்டு ஒரே அணியில் இருந்து செயற்பட்டால் நிச்சயமாகச் செயற்கரியன செய்யலாம்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் இருந்த 225 எம்.பிக்களில் 26 பேர் தமிழர் கள். இவர்களில் 11 பேர் அரசாங்கத்தை ஆதரித்து வந்தார்கள். 15 பேர் எதிர்க் கட்சியில் இருந்தார்கள். இவர்கள் எட்டுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

கட்சிகள் எத்தனையாக இருந்தாலும் பொதுவேலைத் திட்டத்தின் அடிப்படை யில் ஒரே அணியில் நின்று தம்மைத் தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய மக்களின் கஷ்டங்களைப் போக்க ஆவன செய்திருக்கலாம் அல்லவா? கூட இருந்து காட்டிக் கொடுப் பவர்கள், தூர இருந்து சலுகைகள் பெறுபவர்கள் எப்படி ஒன்று சேர்வார்கள்?

தமிழ்க்கட்சிகள் ஒன்றோடு ஒன்று முட்டி மோதிப் போட்டி போட்டதன் விளைவாகத் தான் கடந்த பொதுத் தேர்தலில் திருகோண மலையில் தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதித் துவத்தை முற்றாக இழந்தார்கள்.

பல கட்சிகளிலிருந்து தமிழ் வேட்பாளர் கள் போட்டியிட்டதால் தமிழ் வாக்காளர்களின் வாக்குகள் சிதறிப் போயின. ஒரு தமிழர் கூட அங்கு தெரிவாக முடியாமல் போயிற்று.

வடக்குகிழக்கில் உள்ள ஐந்து தமிழ் மாவட்டங்களிலும் தமிழ்க்கட்சிகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன.

(மலையகம் பற்றிய நிலைமை மலையகக் கண்ணோட்டப் பகுதியில்) இந்த நிலைமை இனி வரப்போகும் பொதுத் தேர்தலிலும் நீடித்தால் தமிழ் மக்களுக்கு விடிவே இல்லை.

இது பற்றி எல்லாளன் படையின் பெயரில் மட்டக்களப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டிருக்கின்றன.

அதில் தமிழ் அரசியல் கட்சித்தலைவர் களுக்குப் பின்வருமாறு வேண்டுகோளும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருக்கிறது:—

1. தமிழரின் உரிமைக்காக போராடுகி றோம், குரல் கொடுக்கிறோம் என்று கூறும் உங்களின் உண்மையான உணர்வை நாடாளுமன்றத் தேர்தலில் ஒற்றுமையுடன் ஓரணியில் திரண்டு தேசிய சக்தியாக தமிழ் இனத்தை தலைநிமிர வைப்பதன் மூலம் உங்களை உண்மையான தமிழர்களாக நிரூபியுங்கள்.
2. தமிழ் மக்களின் ஏகோபித்த குரலுக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து கொள் கையளவில் ஒன்றுபட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ், ரெலோ என்பன ஒன்றிணைந்து மேலும் அமைப்புக்களையும் இணைத்து தன்மானத் தமிழர்கள் அணியாக ஒரு குடையின் கீழ் தேர்தலைச் சந்தித்து உரிமைக்காக ஒன்றுபட்டு குரல் கொடுக்கும் சக்தியாக மாற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.
3. அகில இலங்கை தமிழ் காங்கிரஸாரின் தனித்துப் போட்டியிடும் முடிவை வன் மையாக கண்டிப்பதுடன் இம்முடிவை மாற்றி தன்மானத் தமிழர் அணியில் இணையுமாறு கேட்டுக் கொள்கிறோம். ஒன்று சேர்வதன் மூலம் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் கொள்கைகளையும் உணர்வுகளையும் நிலைநிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
4. சுயநலநோக்குடன் பிளவுபட்டு தனித் துப் போட்டியிடும் கட்சி எதுவானாலும் அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பிரசார நேரங்களில் பாரதூரமான விளைவுகளையும் எதிர்கொள்ள நேரிடும் என்பதையும் தெரியப் படுத்துகின்றோம்.

புத்தி ஜீவிகள் பல்கலைக்கழக அமைப் புக்கள் சுதந்திர மாணவர் முன்னணியினர் சமூக அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து தன் மானத் தமிழர் அணி உருவாக அழுத்தம் வழங்க வேண்டும் என்று தமிழ் மக்களுக் கும் துண்டுப் பிரசுரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, தமிழர் காங்கிரஸ் ,ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) ஆகியன ஒரே அணியாக நின்று தேர் தலில் போட்டியிடுவதற்கான ஒழுங்குகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன என்று அறியவருகிறது.

இந்த அணியில் வேறு எந்தக்கட்சிகள் சேரும் என்பது பற்றி இது வரை தகவல் இல்லை.

ஈ.பி.டி.பி தனித்துப் போட்டியிடுவது என்று முடிவு செய்திருக்கிறது.

### முஸ்லிம் காங்கிரஸும் தேசிய ஐக்கிய முன்னணியும்

ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் சில மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தும் மற்றும் சில மாவட்டங்களில் தனித்தும் போட்டியிட இருக்கிறது.

கிழக்கு மாகாணத்திலும் (குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில்) வடக்கு கிழக் கிற்கு வெளியே உள்ள ஒரு சில மாவட்டங் களிலும் முஸ்லிம் காங்கிரஸ் தனது மரச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடும்.

திருகோணமலை, வன்னி, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி யின் தேசிய முன்னணியில் இணைந்து ஐ.தே.கவின் யானைச் சின்னத்தில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடும்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் தலை மையிலான தேசிய ஐக்கிய முன்னணியும் முஸ்லிம் காங்கிரஸைப் போலவே தனித்தும் கூட்டுச் சேர்ந்தும் போட்டியிடவிருக்கிறது.

தேசிய ஐக்கிய முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் பேரியல் அஷ்ரப் தலைமையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஹிஸ்புல்லா தலைமையிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்படுகிறார்கள்.

# ஆப்கானிஸ்தானில் ஹெலி குண்டுமாரி அமெரிக்கா-பிரிட்டனில் பதிலடி எச்சரிக்கை

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக் காவின் குண்டுத்தாக்குதல் ஓயவில்லை. இவ்வேளை யில் பின்லேடனின் அல்குவைதா அமைப்பு பதிலடி கொடுக்கத் தயாரானது. அமெரிக் காவிலும் பிரிட்டனிலும் தாக்குதல் நடத்தப் படும் என்று எச்சரிக்கை விடுத்தது.

போர் விமானங்களை ஏவி ஆப்கானிஸ் தானில் அல்—குவைதா அமைப்பின் முகாம் களைப் பெருமளவில் அழித்து விட்டதாக அமெரிக்கா கருதுகிறது. போர் விமானங் களின் இலக்குகளில் சிக்காத முகாம்களைத் தேடி அழிப்பதற்காக ஹெலிகொப்டரிலிருந்து குண்டு வீசப்படும் என்று அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான்களின் எதிர்ப்புத் தளங்கள் அனைத்தையும் அமெரிக்க போர் விமானங்கள் தாக்கி அழித்துவிட்டன. இதைத் தொடர்ந்து தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களை முற்றிலுமாக அழிக்க, தாழ்வாக பறந்து சென்று தாக்கும் ஹெலிகொப்டர்களை பயன்படுத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இந்த தாக்குதலுக்கு அமெரிக்க விமானப் படையின் யூ.எச்.60 பிளாக்ஹாக் எனப்படும் ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படும். இந்த வகை ஹெலிகொப்டர்கள் சிறப்பு அதிரடி படையினர் பயன்படுத்துவதற்கு என்றே மாறுபட்ட வடிவமைப்பில் தயாரிக்கப்பட்டுள்ளன.

இது தவிர ஏ.எச்.64 அபாச்சி எனப்படும் ஹெலிகொப்டர்களும் தாக்குதலுக்கு தயார் நிலையில் உள்ளன. இந்த வகை ஹெலி கொப்டர்கள் குறிப்பிட்ட அளவுக்கு தாழ்வாகப் பறந்து ரொக்கெட்களையும், ஏவுகணைகளையும் வீசும். இந்த இரு வகை ஹெலிகொப்டர்களின் தாக்குதல் காரணமாக ஒசாமா பின்லேடனின் முகாம்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் தரைமட்ட மாக்கப்பட்டுவிடும் என்று அமெரிக்கா தெரிவிக்கிறது.

அதன் பிறகு ஹெலிகொப்டர்கள் மூலம் ஆப்கான் விமான தளங்களுக்குள் சிறப்பு அதிரடி படையினர் தரை இறக்கப்படுவார்கள். அவர்கள் தலிபான் படையினருடன் நேருக்கு நேர் போரிடுவார்கள் என்று அமெரிக்க செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை —

அல்குவைதா அமைப்பின் செய்தித் தொடர் பாளர் சுலைமான் அபுகாயித்— கட்டாரிலிருந்து ஒளிபரப்பாகும் அல்—ஜெசிரா தொலைக் காட்சிக்கு பேட்டி அளித்தார்.

அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் உள்ள முஸ்லிம்கள் வான்வெளி பயணத்தை மேற் கொள்ள வேண்டாம். மிக உயர்ந்த கட்டடங்கள் மற்றும் கோபுரங்களில் தங்கவேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்— இவ்வாறு அந்த பேட்டியில் அவர் கூறியுள்ளார்.

இந்த அச்சுறுத்தலை அமெரிக்க வெள்ளை மாளிகை நிராகரித்திருக்கிறது. அமெரிக்கர் களை பாதுகாக்க அரசு அனைத்து வலுவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத் துள்ளது. எனவே பயங்கரவாதத் தாக்குதல் எச்சரிக்கை குறித்து கருத்தில் கொள்ள வேண் டாம் என்று ஜனாதிபதி புஷ் தெரிவித்திருக் கிறார்.

# அரசியல் நெருக்கடிகளும் நாடாளுமன்றக் கலைப்புகளும்



டி.எஸ்.சேனநாயக்க

இலங்கையின் பதினொராவது நாடாளுமன்றம் கடந்த பத்தாம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டு விட்டது.

இலங்கையில் இப்படி நாடாளுமன்றம் திடீரென்று கலைக்கப்படுவதும் பொதுத் தேர்தல் நடத்தப்படுவதும் புதிதல்ல.

நாடாளுமன்றத்தை முன் கூட்டியே கலைத்துவிட்டு பொதுத் தேர்தல் நடத்திய வரலாறும் உண்டு.

1948 – இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. 1947 – ஆம் ஆண்டில் நடை பெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் பல கட்சிகளையும் இணைத்து ஐக்கிய தேசியக் கட்சி என்ற பெயரில் டி.எஸ். சேனநாயக்கா தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டது.

எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டார நாயக்காவின் சிங்கள மகாஜன சபா, ஏ.ஈ. குணசிங்காவின் தொழிலாளர் கட்சி என்பன அப்பொழுது ஆட்சியில் அங்கம் வகித்த சில கட்சிகள் ஆகும்.

பெரும்பான்மைப் பலத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தபோதிலும் 1950 ஆம் ஆண்டில் அதன் தலைவர் டி.எஸ். சேனநாயக்கா குதிரையிலிருந்து விழுந்து மரண மானதும் அக்கட்சி சில சிறு சோதனைகளைச் சந்திக்க நேர்ந்தது.

ஆனாலும் தந்தையின் அமைச்சரவையில் விவசாய அமைச்சராக இருந்த டி.எஸ்ஸின் மகன் டட்லி சேனநாயகா பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து சோதனைகள் நீங்கி ஆட்சி தொடர்ந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியில் தாம் தொடர்ந்திருந்தாலும் டி.எஸ். ஸுக்குப் பின்பு ஆட்சி பீடத்தில் அமரும் வாய்ப்பு தமக்குக் கிடைப்பது சுலபமல்ல என்பதை உணர்ந்தார் எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா. அரசாங்கத்திலிருந்தும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் விலகி புதிய அரசியல் கட்சி ஒன்றை அவர் தொடங்கினார்.



எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா

ஆட்சிப் பொறுப்பை டட்லி சேனநாயக்க ஏற்ற பின் 1952 ஆம் ஆண்டில் இரண்டாவது நாடாளுமன்றத்துக்குப் பொதுத் தேர்தல் நடந்தது.


எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா புதிய கட்சியில் தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் டட்லி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியே மீண்டும் தேர்தலில் வென்றது.

டட்லியின் அரசில் அப்பொழுது நிதி அமைச்சராக இருந்தவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன.

தனது முதலாவது வரவு – செலவுத் திட்டத்தில் இவர் அரிசி விலையை கொத்து இருபத்தைந்து சதத்திலிருந்து எழுபத்தைந்து சதமாக உயர்த்தினார்.

அப்பொழுது பண்டாரநாயக்கா, என்.எம். பெரேரா ஆகியோர் அரிசி விலை உயர்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்புக்களை ஏற்பாடு செய்தனர். 1953ஆம் ஆண்டு நடந்த இந்த அரிசி ஹர்த்தால் இலங்கையின் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது.

அரிசி ஹர்த்தாலை சமாளிக்க அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. கொழும்பிலும் மற்றும் சில பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.



சிறிமாவோ

இச்சம்பவங்களில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டொருவர் கொல்லப்பட்டனர். இது டட்லி சேனநாயக்காவை வெகுவாகப்பாதித்தது. அமைச்சரவைக்குள்ளும் இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

வேறு வழியின்றி டட்லி சேனநாயக்கா பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தார். டி.எஸ். சேனநாயக்கா மரணமானதைத் தொடர்ந்து தமக்கே பிரதமர் பதவி வருமென்பதை எதிர்பார்த்திருந்த சேர். ஜோன் கொத்தலாவலை பிரதமராகப் பதவி ஏற்றார். அரசியலிலிருந்து டட்லி சிறிது காலம் ஒதுங்கி இருந்தார்.

சேர் ஜோன் கொத்தலாவலை பிரதமரானபின் ஆட்சியை சுலபமாகப் பிடிப்பதற்கு ஆட்சி மொழியாகச் சிங்களத்தைக் கொண்டுவருவதே ஒரே வழி என்று கருதினார் பண்டார நாயக்கா.

தாம் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவதாக வாக்குறுதியளித்துப் பிரசாரம் செய்யத் தொடங்கினார்.

இச்சமயம் யாழ்ப்பாணம் சென்றிருந்த பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலைக்கு யாழ்ப்பாணத்தில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அங்கு காந்திய வாதியான ஹண்டி பேரின்பநாயகம் ஆட்சி மொழி பற்றி அரசினது கொள்கையைத் தெளிவுபடுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். சிங்களத்துடன் தமிழுக்கு சம அந்தஸ்து தொடர்ந்து இருக்குமென சேர் ஜோன் அப்பொழுது உறுதிபடத் தெரிவித்தார்.

சேர் ஜோன் யாழ்ப்பாணத்தில் தமிழுக்கு சம அந்தஸ்து என்று கூறியது கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் அரசியல்வாதிகள் மத்தியிலும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

தமிழுக்கு சம அந்தஸ்து வழங்குவதாக தாம் யாழ்ப்பாணத்தில் ஒரு போதும் சொல்லவில்லை என்று கொழும்பு திரும்பியதும் சேர் ஜோன் கூறிவிட்டார்.

இதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு மாநாடு களனியில் கூட்டப்பட்டது. சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழி என்னும் மொழிக் கொள்கையை வெளியிட்டு அங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிங்களம் மட்டுமே என்ற கொள்கை தேர்தலில் வெற்றியீட்டித் தரும் என்ற நம்பிக்கையில் இரண்டாவது நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு சில மாதங்கள் இருக்கையிலேயே சேர் ஜோன் நாடாளு மன்றத்தைக் கலைத்தார். புதிய தேர்தல் நடத்துவதற்கு ஆளுநருக்குச் சிபார்சு செய்தார்.

மூன்றாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் 1956 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது.

24 மணி நேரத்தில் சிங்களத்தை அரியாசனத்தில் அமர்த்தும் பண்டார நாயக்காவின் பிரசாரத்துக்கு அமோக ஆதரவு கிடைத்தது.

மொழிக் கொள்கையில் மாற்றம் செய்த ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு அப்போது தேர்தலில் எட்டு ஆசனங்களே கிடைத்தன

பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தார். சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமிழுக்கு சம உரிமை கோரியும், சமஷ்டி ஆட்சி கோரியும் வடக்கு கிழக்கில் தேர்தலில் போட்டியிட்ட தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், சுயேச்சைகள் வெற்றியீட்டின.

1957 ஆம் ஆண்டில் தமிழரசுக் கட்சியின் போராட்டத்தைச் சமாளிக்க, செல்வநாயகத்துடன் பண்டாரநாயக்கா ஒரு ஒப்பந்தம் செய்தார். இதை எதிர்த்து ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் கண்டிக்கு யாத்திரை சென்றனர்.

நாட்டில் கலவரம் தோன்றும் நிலை ஏற்பட்டது. ஆளும் கட்சிக்குள்ளும் பண்டா – செல்வா ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியது.

பண்டா – செல்வா ஒப்பந்தத்தை பண்டாரநாயக்காவே கிழித்தெறிந்தார்.

இதன்பின் 1958ஆம் ஆண்டில் வவுனியாவில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆண்டு மாநாடு நடைபெறவிருந்த சமயத்தில் பேரினவாதிகள் நன்கு திட்டமிட்டு நாடுமுழுவதும் தமிழ் மக்களுக்கு எதிராக இனக் கலவரத்தைத் தூண்டி விட்டனர்.



ஆர்.பிரேமதாச

தென்னிலங்கையில் தமிழர் பலர் கொல்லப்பட்டனர்; சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தமிழர்கள் பெருமளவில் அகதிகளாயினர். இக்கால கட்டங்களில் இவர்கள் தமிழர் தாயகமான வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

1959 ஆம் ஆண்டு செப்டம்பர் 25ஆம் திகதி பிரதமர் பண்டாரநாயக்கா தமது இல்லத்தில் வைத்து பௌத்த பிக்கு ஒருவரால் சுடப்பட்டார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. செப்டெம்பர் 26ஆம் திகதி அவர் மரணமானார்.

இதனைத் தொடர்ந்து காபந்துப் பிரதமராகப் பதவி ஏற்றார் டாக்டர் தஹநாயக்கா.

சி.பி.டி சில்வா, மைத்திரிபால சேனநாயக்கா முதலிய அமைச்சர்களை தஹநாயக்கா பதவி நீக்கம் செய்தார். அவசர காலச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து ஆட்சியிலிருந்த தஹநாயக்கா பத்திரிகைத் தணிக்கையையும் கடுமையாக அமுல் செய்தார்.

தஹநாயக்கா அலரி மாளிகைக்குள் இருந்தவாறே லங்கா பிரஜாதந்திரக் கட்சி என்ற புதிய அரசியல் கட்சியைத் தொடங்கினார். தஹநாயக்காவின் சிபார்சில் நாடாளுமன்றம் உரிய நேரத்தில் கலைக்கப்பட்டு 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தேர்தல் நடந்தது.

இத் தேர்தலில் டட்லி சேனநாயகா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியும் சி.பி.டி சில்வா, மைத்திரிபால சேனநாயக்கா போன்ற சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களின் கூட்டுத் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் போட்டியிட்டன.

தேர்தலில் தஹநாயக்கா உட்பட அவரது கட்சியினர் அனைவரும் தோல்வியடைந்தனர். வடக்கு கிழக்கில் தமிழரசுக் கட்சியினர் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகினர்.

ஆட்சி பீடத்துக்குப் போட்டியிட்ட இரு பிரதான கட்சிகளில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மைப்பலம் கிடைக்கவில்லை.

தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் டட்லி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. அரசின் கொள்கைப் பிரகடனமான முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்தை ஆளுநர் நிகழ்த்தினார்.

இந்த உரை மீதான விவாதம் நடை பெற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது உடன்பாடு ஏற்பட்டபடி அரசு செயற்படவில்லை என்று கூறி அதை எதிர்த்து தமிழரசுக் கட்சியினர் வாக்களித்தனர். ஆட்சி கவிழ்ந்தது. நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய பொதுத் தேர்தல் நடத்துவதற்கு பிரத மர் டட்லி பரிந்துரைத்தார்.

1960 – மார்ச் மாதம் நடந்த தேர்தலின் பின் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு சிறிமா பண்டாரநாயக்கா தலைமை வகித்தார். இத் தேர்தலில் மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றி பெற்று சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தது.

1961 ஆம் ஆண்டில் வடக்கு – கிழக்கில் நடந்த சத்தியாக்கிரகத்தை ஆயுதப் படைகளின் பலம் கொண்டு சிறிமா அடக்கி ஒடுக்கினார். இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியுடன் நாடற்றவர் பிரச் சினை பற்றி ஒரு உடன்படிக்கை செய்தார். 1964 ஆம் ஆண்டுக் கடைசியில் பத்திரிகைத் தணிக்கைச் சட்டம் கொண்டுவர எடுத்த முயற்சியில் தோல்வி கண்டார்.



டட்லி சேனநாயக்க

இன்றுபோல் அன்றும் சி.பி. டி சில்வா, பி.எச். வில்லியம் சில்வா முதலிய அமைச்சர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறி எதிர்க்கட்சியில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தனர். சிறிமா ஆட்சி கவிழ்ந்தது.

1965 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் டட்லி தலைமையிலான முன்னணி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சி பீடத்துக்குத் தெரிவானது. தமிழ ரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்துடன் டட்லி பேச்சு நடத்தி இரகசியமாகச் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி அமைச்சரவையில் தமிழ் அரசுக் கட்சிக்கும் ஒரு இடமளிக்கப்பட்டது. மற்றும் கூட்டணிக் கட்சிகளையும் சேர்த்து தேசிய அரசாங்கம் என்ற பெயரில் டட்லி ஆட்சியேறினார்.

நான்கு வருடங்கள் அரசுக்கு ஒத்து ழைப்பளித்த பின் இரகசிய உடன்படிக் கையை டாக்டர் என். எம். பெரேரா நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தியதைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சி தேசிய அரசிலிருந்து வெளியேறியது.

ஐந்து ஆண்டுகள் டட்லி அரசு ஆட்சி பீடத்திலிருந்த பின் 1970 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடந்தது.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்டு இலங்கையை சோஷலி ஸக் குடியரசாகப் பிரகடனப் படுத்தும் புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்கு மக்களிடம் ஆணை கோரிப் போட்டியிட்ட சிறிமா தலை மையிலான கூட்டணி அமோக வெற்றியீட்டி யது. புதிய அரசமைப்பைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்பதை வலியுறுத்து முகமாக தமது காங்கேசன்துறை எம்.பி. பதவியை செல்வநாயகம் துறந்து மீண் டும் இடைத் தேர்தலில் போட்டியிட்டார். கூட்டணி அரசுக்குள் இழுபறி ஏற்பட்ட நிலை யில் நாடாளுமன்றம் 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்காக கலைக்கப்பட்டது.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டு மிகப் பெரும் பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்தது.

தேர்தல் முடிவுகள் முற்றாக வெளிவர முன்பே தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரம் பொலி ஸாரால் தூண்டி விடப்பட்டு நாடு முழுவதும் பரவியது.

புதிய அரசமைப்பைத் தயாரித்து ஜே.ஆர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

அவசர காலச் சட்டத்தின் கீழ் கடுமையான விதிகள் கொண்டு வரப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் தீவிரவாதிகளைத் தேடி அழிப்பதற்காக பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்காவை ஜே.ஆர். அனுப்பினார்.

1981 ஆம் ஆண்டில் மாவட்ட சபைகளை நிறுவி அவற்றுக்குத் தேர்தலும் நடத்தினார். மாவட்ட சபைத் தேர்தலைத் தொடர்ந்து யாழ் நூலகம், தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம் எனப் பல கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

1987 ஆம் ஆண்டில் இறுதியாக பிரதமர் ராஜீவுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக ஒப்பந்தம் ஒன்றை ஜே.ஆர். செய்தார்.



ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

1989 ஆம் ஆண்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட இரண்டாவது ஜனாதிபதியாக வந்த ஆர்.பிரேமதாச விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தினார். இந்தியப் படைகளை இலங்கையிலிருந்து இந்தியாவிற்குத் திருப்பி அனுப்ப வழி செய்தார்.

பிரேமதாசவுக்கு எதிராக ஆளும் கட்சியில் அவரது அமைச்சரவையில் இருந்த காமினி திஸ நாயக்காவும் லலித் அத்துலத் முதலியும் நாடாளுமன்றத் தில் கண்டனத் தீர்மானம் கொண்டுவரவும் முயற்சிகள் மேற்கொண்டனர். எனினும் இது முறியடிக்கப்பட்டது.

தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கையில் லலித் அத்துலத்முதலி சுட்டுக் கொல்லப்பட்டார். பிரேமதாச மீது இதற்கு பழி சுமத்தப்பட்டது. பின்னர் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டப்பட்டது. தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே காமினிதிஸ்ஸ நாயக்காவும் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.

பிரேமதாசவும் 1993ஆம் ஆண்டில் மேதின ஊர்வலத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலினால் கொல்லப்பட்டார்.

இதன் பின் 1994 ஆம் ஆண்டு தேர்தலில் சந்திரிக்கா தமிழ் மக்களின் வாக்குகளையும் பெருமளவில் பெற்று அமோக வெற்றிபெற்றார்.

கடந்த வருடம் இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டினார்.

இப்பொழுது அமைச்சரவையிலும் ஆளும் கட்சியிலும் மோதல் ஏற்பட்டு, எதிர்க்கட்சியினர் கொண்டு வரவிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெற்று ஆட்சி கவிழாமல் தவிர்த்துக் கொள்ள நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய பொதுத் தேர்தலுக்கு ஜனாதிபதி சந்திரிக்கா உத்தரவிட்டிருக்கிறார். இலங்கை அரசியலில் இது ஒன்றும் புதியவரலாறு அல்ல!

– கோபு



# கடலில் எண்ணெய் சிந்தி உயிரினங்களுக்கு அழிவு

அத்திலாந்திக் ஆழ்கடல்களின் மத்தியிலுள்ள கலபாகோஸ் தீவுகளில் மக்கள் நடமாட்டம் இல்லை. ஆனால் உயிரினங்கள் அங்கு ஏராளம். அண்மையில் ஒரு எண்ணெய்க் கப்பல் இந்தத் தீவின் கரையில் விபத்துக்குள்ளானது. எங்கும் எண்ணெய் மயம்தான். இதனால் உயிரினங்கள் அழிந்தன. ஒரு இராட்சத ஓணான் எண்ணெயினால் குளிப்பாட்டப்பட்டுள்ள காட்சி இது.



# குப்பைக்கு வந்தாலும் கணினிக்கு மதிப்புதான்!

உலகம் முழுவதுமே இன்று கம்பியூட்டர் மயம் தான். வறிய நாடுகளும் கம்பியூட்டர் தொழில் நுட்பத்தைப் பின் பற்றத் தொடங்கியிருக்கின்றன. இருப்பினும் முன்னேற்றம் அடைந்த சில நாடுகள் கம்பியூட்டர் யுகத்தின் இரண்டாம் தலைமுறையைக் கண்டுவிட்டன. அந்த நாடுகள் பழைய பாணியிலான கம்பியூட்டர்களை குப்பையில் வீசி விட்டுப் புதியரகக் கணினிகளைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றன. சில நாடுகளில் குப்பைக்கு வந்து விட்ட கணினிகள் வேறு நாடுகளில் மதிப்புடன் பயன்படுத்தப் படுகின்றன. சிங்கப்பூரில் குப்பையில் வீசப்பட்ட சில கம்பியூட்டர் களை ஒருவர் அள்ளி எடுத்துச் செல்லும் காட்சி இது.

# குடி தண்ணீருக்காக எத்தனை அலைச்சல்



வரட்சிக் காலத்தில் குடி தண்ணீருக்காக சிலர் அலையும் காட்சி உள்ளத்தை உருக வைத்து விடும். சிலர் வரண்டு போன நிலத்தை தோண்டி நீரூற்றுகளில் தண்ணீர் கசியச் செய்வார்கள். டென்மார்க் நாட்டில் வரட்சிக் கொடுமை இல்லை. இருப்பினும் இவர்கள் கிணறு தோண்டி தண்ணீரை ஊற்றெடுக்கச் செய்கிறார்கள். உப்புக் கடல் அருகே கிணறு தோண்டினால் அதில் நல்ல தண்ணீரே ஊற்றெடுக்கும் என்பதை இவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார் கள் போலும். சென்னையில் மெரினா கடற்கரையில் இவ்வாறு கிணறு தோண்டி தண்ணீர் எடுக்கும் வழக்கம் இருக்கிறது.



# செடில் காவடி பக்திரசம் சிங்கை நகரில் உச்சம்

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடமே என்று ஆன்றோர் கூறுவர். முருகனுக்கு விழா எடுக்கும் போது அங்கு காவடி ஆட்டம் இல்லாமல் போய்விடாது. உலகில் எந்த மூலையிலும் சைவக் கோயில்களில் காவடி ஆட்டம் நடைபெறத் தவறுவதில்லை. சிங்கப்பூரில் பல்லின மக்கள் வாழ்கின்றனர். ஆயினும் தைப்பூசத் திருவிழாவின்போது மலைக் கோட்டை முருகனுக்கு காவடி எடுக்கப் பக்தர்கள் தவறுவதில்லை. சீனர்களும் காவடி எடுப்பார்கள். செடில் காவடி எடுத்து பக்தி ரசத்தில் ஆழ்ந்து போய்விட்ட சிங்கைநகர் பக்தர் ஒருவரை இங்கு காணலாம்.

## மசாலா மிக்ஸ்



# ஒளிந்திருக்கும் முகம் எது?

**ஒளிந்திருக்கும் முகம் எது?.**

ஒக்டோபர் 07, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை ஸ்நேகாவினுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. ரா. சேகர், கம்பளை.
2. எம். எஸ். மஸாஹிம், காத்தான்குடி.
3. டானியல் டேவிட், மஸ்கெலியா.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (14.10.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? திடீர் திருமணம் செய்ததால் படவாய்ப்புகளை இழந்த தேவ நடிகை. மீண்டும் படிப்படியாக மார்க்கெட்டைப் பிடித்து வருகிறார்.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**'சுடர் ஒளி'**
**36/2, பிரெட்ரிக்கா வீதி**
**கொழும்பு – 06.**





# வீதியோர மரங்களுக்கு அழிவு காலம் வரலாமா?

வீதியோரங்களில் புளிய மரங்களை நட்டு வளர்த்து ஊர் மக்களுக்கு ஆதரவு தந்தார்கள் முன்னாள் மன்னர்கள். வீதியில் நடந்து செல்பவர்களுக்கு நிழல் கிடைக்கும். ஊர் மக்களுக்கு புளியம்பழம் கிடைக்கிறது. பிரெஞ்சு நாட்டிலும் கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக பிளேன் என்னும் நிழல் தரும் மரங்கள் வீதியோரங்களை அழகுபடுத்தி வருகின்றன. ரம்மியமான காட்சியைத் தரும் இந்த மரங்களால் வீதி விபத்துகள் அங்கு அதிகரித்திருக்கின்றன. இதனால் சுமார் 4 லட்சம் மரங்களை வெட்டிச் சரிக்க பிரெஞ்சு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதனால் சூழல் பாதிப்பு ஏற்பட்டால் என்ன செய்வது?

# முல்லை: ஓயாத அலைகள் வெளிவராத தகவல்கள்

தாக்குதல் சம்பவம் பற்றி அறிவதற்கு முன்னர் முல்லைத் தீவு முகாம் பற்றிய சில அடிப்படை விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

முல்லைத்தீவு முகாமை அரசு நீண்டகாலம் வைத்திருந்தது ஏன்? முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலைப் புலிகள் 1996 ஜூலை வரை தள்ளிப்போட்டிருந்தது ஏன்? விடை காண்போம்.

முல்லைத்தீவு படை முகாம் 1970 ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்தது.

1985 ஆம் ஆண்டு சுமார் நான்கு சதுர கிலோ மீற்றர்கள் பிரதேசத்துக்கு விஸ்தரிக்கப்பட்ட இந்த முகாம், இரண்டாம் ஈழப்போர் காலத்திலிருந்து அடிக்கடி விடுதலைப்புலிகளின் சிறிய அளவிலான தாக்குதல்களுக்கு அவ்வப்போது இலக்காகி வந்தது.

எனினும் அந்தத் தாக்குதல்கள் அங்கு நிலைகொண்டிருந்த படையினரால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டு வந்தன.

1995 இல் பிரிகேடியர் கும்பன் பொஹ்ரன் இந்த முகாமில் நிலை கொண்டிருந்த பிரிக்கேட் அணிக்கு கட்டளைத் தளபதியாக இருந்தார். அப்போது தான் அதன் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் கடைசித் தடவையாக மறுசீரமைக்கப்பட்டிருந்தன.

திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து அறுபது கிலோமீற்றர் தொலைவில் தீவின் வடகிழக்கு முனையில் — ஏகாந்தமாக — வேறு தொடர்புகளற்ற சூழலில் — தனித்து விடப்பட்டுள்ள நிலையில் — இந்த முகாம் இருந்தது.

இவ்வளவு காலமும் இந்த முகாம் புலிகளுக்கு இரையாகாமல் 1996 நடுப்பகுதி வரை தப்பிப் பிழைத்தது எப்படி?

ஓர் ஒதுக்குப்புறமாக இருந்த இந்த முகாமை தொடர்ந்து அங்கு பேண வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது?

கடந்த பல வருடங்களாக முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து புறப்பட்டு எந்த ஓர் இராணுவ நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

அப்படி இருக்க, அங்கு முகாமை வைத்திருந்தது ஏன்? புலிகளின் பாய்ச்சலுக்கு இலக்காகவா? முல்லைத்தீவு முகாம் தகர்ப்புக்குப் பின் இவ்வாறு ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் கேள்வி எழுப்பி இருந்தன.

முல்லைத்தீவு முகாமையும், பூநகரி முகாமையும் மூடி விட்டு, அங்கிருக்கும் துருப்புக்களை யாழ் குடாநாட்டுச் சண்டையில் பயன்படுத்தலாம் என்று 1995 முதலே இராணுவத் தலைமைப்பீடம் அரசை வற்புறுத்தி வந்தது.

ஆனால் வட — கிழக்கு கடற் பிரதேசத்தில் புலிகளின் படகுகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க முல்லைத்தீவு முகாம் அவசியமானது என கடற்படை வலியுறுத்தியதனாலும் —

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் கடற்படைத் தொடர் அணிகளுக்கு அவசர உதவி தேவைப்படும் பட்சத்தில் அதனை வழங்க இடை நடுவில் உள்ள முல்லைத்தீவு முகாம் உதவும் என்று கருதப்பட்டதாலும் —

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக கிழக்கில் பல முகாம்களை அரசு மூடிவிட்டது என்ற குற்றச்சாட்டு அரசுக்கு எதிராகத் தெற்கில் ஒலிக்கும் என்று கருதப்பட்டதால் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கும் இந்த ஒரேயொரு முகாமையும் மூடி, மேலும் எதிர்ப்பைத் தேட அரசு விரும்பாததாலும் —

இந்த முகாமைத் தொடர்ந்து பேணுவதற்கு அப்பொழுது முடிவு செய்யப்பட்டது.

விடுதலைப்புலிகளும் குடாநாட்டைத் தமது



## கட்டுரை பற்றி

ஈழப்போர் வரலாற்றில் முல்லைத்தீவு இராணுவ முகாமைப் புலிகள் தாக்கி நிர்மூலமாக்கியது குறிப்பிடத்தக்க ஒரு சம்பவம்.

முல்லைத்தீவு வெற்றி புலிகளின் ஆயுத பலத்தையும் மனோதிடத்தையும் பன்மடங்கு ஆக்கியது. போராளிகள் தமது ஆற்றலைத் தாமே அறிந்து அதை மேலும் வளர்த்துக் கொள்ளவும் உதவியது என்பது போரியல் ஆய்வாளர்களின் கருத்து.

1996 ஜூலை 18 ஆம் திகதி அதிகாலை ஆரம்பித்த 'ஓயாத அலைகள்' அதிரடிப் பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையினால் முல்லைத்தீவு இராணுவ முகாம் தகர்த்து அழிக்கப்பட்டது.

அப்போது பத்திரிகைத் தணிக்கை நடைமுறையில் இருந்ததால் விவரங்கள் சரியாக வெளிவரவில்லை. தணிக்கை நீக்கப்பட்ட பின்னரும் கூடச் சம்பவம் பற்றிய முழு விவரம் வெளியிடப்படவில்லை.

வரலாற்றுத் தடம் பதித்த நிகழ்வுகள் பற்றி இதுவரை வெளிவராத தகவல்களை இங்கு தருகிறோம்.

முழுக்கட்டுப்பாட்டில் அப்பொழுது வைத்திருந்ததால் முல்லைத்தீவு முகாம் குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.



ஒதுக்குப்புறமாக இருந்த இந்த முகாம் அவர்களுக்கு அதிக இடைஞ்சலைத் தரவில்லை. அத்தோடு அந்த முகாம் மீது பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுக்கக்கூடிய ஆள்பலமும் அப்போது முல்லைத்தீவில் புலிகளுக்கு இருக்கவில்லை.

அவர்களது ஆளணியில் பெரும் பகுதி அப்போது யாழ் குடாநாட்டில் பல்வேறு தேவைகளில் — வேலைகளில் — ஈடுபடுத்தப்பட்டிருந்ததும் இந்த ஆட்பற்றாக்குறைக்கு ஒரு காரணம் எனலாம்.

ஆனால் யாழ் குடாநாட்டின் கணிசமான பகுதிகளை 1995 இறுதிப் பகுதியில் அரசுப் படைகள் கைப்பற்றியமை இந்த சம நிலையை அப்படியே குழப்பி, மாற்றிவிட்டது;

குடாநாட்டில் தாங்கள் பேணிய கட்டமைப்பை அப்படியே வன்னிக்கு மாற்றவேண்டிய கட்டாய நிலை புலிகளுக்கு ஏற்பட்டது.

யாழ் குடாநாட்டில் தங்கள் ஆளணியைப் பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்திய புலிகளுக்கு, வன்னிப் பெரு நிலப்பரப்பிற்கு நகர்ந்ததும் அங்கு அத்தகைய நானாவிதப் பணிகளும் இல்லாமற்போனதால் — அல்லது அவர்களது கவனம் இராணுவத் தாக்குதல் தவிர்த்து வேறு அரசியல் வேலைகளின் பக்கம் அதிகம் சிதறாமல்போனதால் — அங்கு அவர்களின் ஆள் பலத் தாக்குதல் வலு திடீரென உயர்ந்தது.

அத்தோடு வன்னிப் பெருநிலப்பரப்பே தங்களுக்கு இனி 'சரணாலயம்' அல்லது 'புகலிடம்' என்பது புலிகளுக்குப் புரிந்ததால் அதனைத் துப்புரவு செய்ய வேண்டிய தேவையும் அவர்களுக்கு ஏற்பட்டது.

மேலும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இந்திய அமைதிப்படை காலத்தில் பாதுகாப்பாக இருந்த முல்லைத்தீவு '1 — 4 தளம்' முகாமிற்கு சில மைல் தூரமே தள்ளி இருந்தது.

தங்களதும், தலைமைப் பீடத்தினதும் பாதுகாப்புக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் இந்தத் தளத்துக்கு நெருக்கமாக ஒரு படைமுகாம் இருக்கும் என்பதும் புலிகளுக்கு நன்கு தெரியும்.

அது தவிர யாழ். குடா நாட்டு கடலோரப் பகுதியின் கட்டுப்பாட்டை இழந்துள்ள விடுதலைப்புலிகளுக்கு தொடர்ந்தும் வெளியுலகுடன் போக்குவரத்துத் தொடர்பு வைத்திருப்பதற்கு வன்னி பெருநிலப்பரப்புடன் சம்பந்தப்பட்ட கிழக்கு கடலோரப்பகுதி மிகவும் அத்தியாவசியமானதாகும்.

அப்பிரதேசத்தில் முழு ஆட்சி செய்வதற்கு முல்லைத்தீவு கடலோர முகாம் புலிகளுக்கு ஓர் இடைஞ்சலாகவே இருந்தது.

மேலும் வன்னிப் பகுதியிலிருந்து எல்லைப்புற பகுதிகளான கொக்கிளாய், புல்மோட்டை மற்றும் ஜானகபுர, பதவியா போன்ற இடங்களுக்கும் தரைவழித் தொடர்பை இலகுவாக்குவதற்கு முல்லைத்தீவு முகாமை அகற்றுவது அவசியமாகியது.

இன்னோரன்ன காரணங்களுக்காக முல்லைத்தீவு முகாம் மீது விடுதலைப்புலிகள் கண் வைத்தார்கள்.

அந்த முயற்சியை புலிகள் கனகச்சிதமாக நிறைவேற்றியது எப்படி என்பதைப் பார்ப்பதற்கு முன்னர் —

யாழ். குடாநாட்டைக் கைவிட்ட பின்பும் இத்தகையதோர் தாக்குதலை நடத்தப் புலிகள் சுமார் ஏழு மாத காலம் காத்திருந்தது ஏன்?

இத்தாக்குதலுக்குத் தேவையான ஆயுதங்களைப் புலிகள் பெறுவதில் அவர்களுக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் என்ன? ஆயுதங்களை ஏற்றி வந்த புலிகளின் கப்பலை அரசுப்படைகள் கோட்டை விட்டது எங்ஙனம்? முல்லைத்தீவுத் தாக்குதலை தயார் பண்ணிக் கொண்டு வேறு இடத்தில் தாக்குதல் நடத்துவது போல் புலிகள் அரசுப்படைகளுக்கு பாசாங்கு காட்டியது எப்படி? முல்லைத்தீவுப் பெரும் தாக்குதலை ஜூலையில் நடத்துவதற்கு புலிகள் முடிவு செய்தது ஏன்? — போன்ற விவரங்களை இக்கட்டுரைத் தொடரில் தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் பார்ப்போம்.

(வளரும்)



# மிளகாயை அரைக்கத் தலையை கொடுக்கும் பழகின பரம்பரை!

## மீண்டும் ஏமாந்து போகத் தயாராகிறதா?

''நந்தவனத்திலோர் ஆண்டி, அவன் நாலாறு மாதமாய் குயவனை வேண்டி, கொண்டு வந்தான் ஒரு தோண்டி, அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி'' இராகம் போட்டுப் பாடினார் விநாசியர்.

''என்ன அண்ணன் பாட்டிலை இறங்கி விட்டியள்'' கேட்டபடி டானியலுடன் தேரடியில் வந்து அமர்ந்தான் லோகன்.

''பாட்டுப் பாடுவதையும் ஜனநாயகத்துக்கு நடக்கிற கொலைகளைப் பார்க்கிறதையும் தவிர எங்களாலை என்ன செய்ய முடியும்'' சலிப்புடன் கேட்டார் மாஸ்டர்.

''எவ்வளவோ, செய்ய முடியும். ஆனால் மற்றவை உயிரைக் கொடுத்து தேவையானதைப் பெற்றால், அதிலை சுகத்தை அனுபவிக்க மட்டும் நாங்கள் முன்னுக்கு நின்றால் தொடர்ந்து துன்பத்துக்குள் கிடக்கிறதைத் தவிர வேற வழி என்ன இருக்கு' என்றாள் சின்னாச்சி.

''கவிழப் போகும் அரசை தூக்கி நிறுத்த இவ்வளவு கேவலமான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டதும், இறுதியில் வேறு வழியின்றி அரசுக்கெதிரான நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றியடையும் சூழ்நிலையில் — நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும், உலகிலேயே இங்கு தான் நடந்திருக்கு என்று நினைக்கிறேன்'' கோபத்துடன் வெளிவந்தன டானியலின் சொற்கள்.

''இனத்துடைய உரிமைகளுக்காக போராடினால் பயங்கரவாதம் என்று வாய் கிழியக் கத்தும் நாடுகள் எல்லாம், ஜன நாயகத்தை — அதன் அடிப்படையிலான மக்களின் உரிமைகளை — காலில் போட்டு மிதிக்கும் அயோக்கியத்தனத்தை மட்டும் பாராமுகமாக இருந்து விடுகின்றன.'' விசனித்தார் விநாசியர்.

''ஜனநாயகத்தை நம்பிக் கெட்ட படியால் தானே, மாற்றுவழியை கையிலெடுக்க வேண்டிய அவசியம் ஈழத்தமிழருக்கு ஏற்பட்டது. இப்போது எதிர்க்கட்சிகளின் ஜனநாயக உரிமைகளையே உதாசீனப்படுத்தி தமது அதிகாரத்தைக் காப்பாற்றத் துடிப்பவர்கள், நாளைக்கே, தமிழரின் உரிமைகளை தங்கத் தாம்பாளத்தில் வைத்து நீட்டப் போவதாக கதை விடுகினம். அதை எங்கடை ஆட்களில் சிலரும் உண்மை தான் என்று ஒத்துப் பாடுகினம்'' என்றான் லோகன்.

''போன தேர்தலின் போது, நீதி விசாரணையின்றி சிறைகளில் வாடும் எம்மவர்களை உடனடியாக விடுதலை செய்ய அல்லது விசாரணை செய்ய, அநாவசியப் பாதுகாப்புக் கெடுபிடிகளை உடனே தடுத்து நிறுத்த எங்களுக்கு வாக்களியுங்கள் என்று தானே அவை வாக்குக் கேட்டவை. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும் பான்மையெல்லாம் தேவையில்லை — ஆனால் அரசுக்கு கண்மூடிக் கொண்டு ஆதரவளித்த போதும், இவற்றை நிறைவேற்ற அவர்களால் முடியவில்லை. இந்த முறையும் எதையாவது சொல்லி வாக்குக் கேட்க வரப்போகினம்'' என்றாள் சின்னாச்சி.

''ஏன் அம்மா மட்டும் போன தேர்தலில் என்ன சொன்னவ? அவவின் சுதந்திரக் கட்சிக்காரரும் யாழ்ப்பாணத்திலை சுயேச்சையாகப் போட்டியிட்ட போது, இதைச் சொல்லி வாக்குக் கேட்டவையெல்லே?'' நினைவுபடுத்தினார் விநாசியர்.

''தாங்கள் ஜனாதிபதியை சந்தித்தபோது, தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் 90 நாள்களுக்குள் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி தம்மிடம் உறுதியளித்ததாக கட்சி ஒன்றின் யாழ். மாவட்ட பிரமுகர் ஒருவர் போன தேர்தலின் போது தெரிவித்திருந்தார். அதோடு நிற்காமல், ஜனாதிபதி இந்த வாக்குறுதியை நிறைவேற்றாது



தேரடி அரட்டை

விட்டால், தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்வதாகவும் அவர் கூறினவர்'' தமிழர்கள் பழசை இலகுவில் மறப்பதில்லை என்பதைக் காட்டுவது போல், கூறினார் மாஸ்டர்.

''வெல்லமாட்டம் என்று தெரிந்தால் ராஜினாமா செய்வம் என்று சொல்வது வழக்கம் தானே'' இது சின்னாச்சியின் குரல்,

''ஓம், அது சரிதான், ஆனால் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசமைத்து 90 நாள்களுக்குள் பிரச்சினையைத் தீர்ப்பேனென்ற ஜனாதிபதி, கடைசியாக 'நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாட்டு' என்று யுத்தமும், சமாதானமும் ஒன்றாகத் தொடரும் என எங்கும் நடக்காத அதிசயமான நிலைப்பாட்டை எடுத்ததை தமிழர் மறக்கவில்லையே?'' என்றான் டானியல்.

''அதில் மட்டுமே நாக்குப் புரண்டது. தேர்தலுக்குப் பின்னர், நாடாளுமன்றத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து சுமார் 80 நிமிடங்கள் மூச்சைப் பிடித்து உரையாற்றிய ஜனாதிபதி, விடுதலைப் புலிகளுடன் பேச அரசு தயார். பேச்சுக்கான நிபந்தனைகளை விடுதலைப் புலிகளே அறிவிக்கட்டும் என்று குறிப்பிட்டதும், பின்னர் விடுதலைப் புலிகள் — நிபந்தனைகளாகக் கூட இன்றி — பேச்சுக்கான சுமுக நிலையை ஏற்படுத்த சில விடயங்களைக் கூறியதும், 'ஐயோ, அம்மா, புலிகள் நிபந்தனை விதிக்கிறார்கள்' என்று பிலாக்கணம் பாடியதும், பேச்சுக்கு மத்தியஸ்தம் செய்ய வந்த நோர்வே விசேட தூதர் சொல்ஹெய்மை வரவேற்பது போல் வரவேற்று, அந்த ஆளை அலைஞ்சுதிரிய விட்டுப் போட்டு, கடைசியிலை முகத்திலை கரியைப் பூசி, முதுகிலை குத்தினதையும் தேர்தலுக்கு வாக்களிக்கப் போற, யுத்தம் நிற்க வேண்டும் என்று விரும்புற எல்லா இன, மதமக்களும் மனதில் வைத்துக் கொண்டால் நல்லது நடக்கும்'' நீண்ட விளக்கமளித்த மாஸ்டர் பெருமூச்சு விட்டார்.

''எங்கே மாஸ்டர், ஒவ்வொரு முறையும் ஏமாந்து போனாலும், மறுபடியும், மிளகாய் அரைக்க நல்லாக் குனிஞ்சு தலையைக் கொடுக்குது சனம். இதிலை நாங்கள் என்னத்தைக் கதைக்கிறது'' சலித்துக் கொண்டார் விநாசியர்.

''தமிழருக்கு நல்லது நடக்க வேணுமென்றால், இந்தத் தேர்தலில் உறுதியான ஒரு முடிவை தமிழ்க் கட்சிகளும், தமிழரும் எடுத்தே ஆக வேண்டும். இப்போது அப்படி ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கத் தவறினால், பிறகு முடிவைப் பற்றி யோசிக்கக் கூட நாங்கள் இருக்க மாட்டம்'' எதிர்காலம் பற்றிய நியாயமான அச்சத்தை வெளிப்படுத்தினான் லோகன்.

''தம்பி சொல்வது நியாயந்தான்'' என்று பாராட்டிய சின்னாச்சி, மேலும் கூறினாள்.

''உரிமையுடன் பெற வேண்டியவற்றைக் கூட, அடிமைகளாக, பிச்சையாகப் பெற்றுக்கொண்டு — எங்கடை கண்முன்னேயே, எங்கடை பெண் சகோதரங்களையும், பெஞ்சாதி பிள்ளைகளையும் பகிடி பண்ணினாலும் ஒன்றும் செய்ய முடியாமல் — திரைப்படங்களில், பொழுது போக்குவதே வாழ்க்கை என்று இளைய தலைமுறை சீரழியவும் — 50 வருடங்கள் பின் தங்கிய நிலையில் ஈழத்தமிழர் தொடர்ந்தும் வாழ்வதா? அல்லது குறைந்தது மனிதர்களாகவாவது வாழ்வதா? என்ற முடிவை இந்தத் தேர்தலில் ஜனநாயகத்தை நம்பும் தமிழர்கள் தீர்மானிக்க வேண்டும்.''

தேரடி கலைந்தது.

— ஏகலைவன்

# கல்முனையிலிருந்து ஒரு மறுப்புக் கடிதம்

''பொறுமை காக்க வேண்டியவர்கள் சாத்தான்களாக மாறும் அவலம்'' என்ற தலைப்பில் 30.09.2001 இல் தேரடி அரட்டையில் வெளியான தகவல் தொடர்பாக ஒரு மறுப்புக் கடிதம் சுடர் ஒளிக்கு வந்திருக்கிறது.

கடிதத்தை எழுதியவர் கல்முனை ஆதார வைத்தியசாலையில் உள்ள மாவட்ட வைத்திய அதிகாரி. அந்தக் கடிதத்தில் மேற்படி வைத்தியசாலையில் கடமையாற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ரி. ருத்திராவும் கையொப்பமிட்டிருக்கிறார்.

கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருப்பதாவது:—

சம்பந்தப்பட்ட தினத்தன்று சம்பந்தப்பட்ட நோயாளிக்கு மாலை 7 மணிக்கு சத்திர சிகிச்சை செய்வதாக தீர்மானிக்கப்பட்டது.

மகப்பேற்று சத்திர சிகிச்சைக்காக மயக்க மருந்து கொடுக்கும் வைத்திய உத்தியோகத்தரை அழைத்துவர மாலை 6.15 க்குச் சென்ற அம்புலன்ஸ் வண்டி கல்முனை தெற்கு ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களை விட்டு விட்டு வந்தமையால் மயக்கமருந்து கொடுக்கும் வைத்திய உத்தியோகத்தரை அழைத்துவரத் தாமதமாகியது.

உத்தியோகத்தர் வரத் தாமதமாகியமையால் அவர் வந்த பிற்பாடு அறிவிக்குமாறு கூறி தனது அருகிலுள்ள இருப்பிடத்திற்குச் சென்றார் மகப்பேற்று வைத்திய நிபுணர். மயக்க மருந்து வழங்கும் வைத்தியர் வந்ததும், நோயாளியின் மாமனார் மகப்பேற்று வைத்திய நிபுணரை அழைத்துவரச் சென்றார். இந்த மாமனார் கல்முனை வடக்கு ஆதார வைத்திய சாலை சிற்றூழியர் மேற்பார்வையாளர் ஆவர். மகப்பேற்று வைத்திய நிபுணர் உள்ளே இருந்தமையால் அவரது மனைவியிடம் வைத்திய நிபுணர் வரவேண்டும் என்று கேட்டுள்ளார். அதற்கு அவர் ''ஐயா வருவார்'' எனக் கூறி உள்ளார். சிறிது நேரத்தின் பின் மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய சாலைக்கு வந்தார். எதுவித பிரச்சினையுமின்றி சத்திர சிகிச்சை நடைபெற்றது. தாயும் சேயும் நலமாக இருந்தனர்.

சுடர் ஒளிச் செய்தியில் மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தவிர, மற்றைய விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவையாக உள்ளன. இவை மகப்பேற்று வைத்திய நிபுணரையும் மாவட்ட வைத்திய அதிகாரியாகிய என்னையும் மிகவும் பாதித்துள்ளன என்பதை அறியத்தருகிறேன். சுடர் ஒளி இப்படிப் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதால் தமிழ்பேசும் வைத்திய நிபுணர்கள் இப்பிரதேசங்களில் கடமையாற்ற வருவது தடைப்படுகின்றது. ஆதலால் தகவலைத் தெரிவித்தவர் இச்சுடர் ஒளியில் மறுப்பை வெளியிட்டு மன்னிப்புக் கோர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுடர் ஒளியில் வெளிவந்த தகவல் இதுதான்:

''மருத்துவ சேவையை 'நோபல் சேவிஸ்' என்று புகழ்வது வழக்கம், அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும், பொறுமையுடனும் பணியாற்ற வேண்டிய மருத்துவர்கள் சிலர் இதற்கு விதிவிலக்காக நடப்பதால் அந்தப் புனிதமான சேவையையே கொச்சைப்படுத்தி விடுகிறார்கள்.'' சோகக் கதையுடன் அரட்டையை ஆரம்பித்தார் விநாசியர்.

''ஏன் விநாசியர், என்ன நடந்தது?'' வினாவினார் மாஸ்டர்.

''கிழக்கு மாகாணத்தில் சில மருத்துவர்கள், நோயாளிகள் வேறு மருத்துவரிடம் காட்டி விட்டு வந்தால், ''அவனிடம் மருத்துவம் பார்த்து விட்டு வந்த உனக்கு, நான் வைத்தியம் பார்க்கமாட்டேன்'' என்று மறுத்து விடுகிறார்களாம்,

''ஏதேச்சையாகவோ, அல்லது அவசர நிலைமை காரணமாகவோ, அருகிலிருக்கும் மருத்துவர்களிடம் காட்டி விட்டு, பின்னர் மருத்துவ மனைகளுக்குச் சென்றால் நோயாளி பாடு அதோ கதிதானாம்'' நிலைமையை விளக்கினார் விநாசியர்.

''அப்படி தன்னிடம் மட்டும் வைத்தியம் பார்க்க வேணும் என்று நினைக்கிறவை தொழிலைச் செய்ய வேண்டியது தானே. பொது இடங்களிலை சம்பளம் வாங்கிக் கொண்டு, இப்படி எரிந்து விழுந்து, தான் தோன்றித் தனமாக நடந்து கொள்வது மனிதத் தன்மையோ?'' விசனித்தான் டானியல்,

''அதுவும் மகப்பேற்று மருத்துவ நிபுணர் ஒருவரின் அட்டகாசம் தாங்க முடிய வில்லையாம்''

''ஒரு உயிர் பூமிக்கு வர உதவுபவர்கள் மகப்பேற்று மருத்துவர்கள். பொறுமையின் சிகரங்களாக திகழ வேண்டியவர்களே அவர்கள் தான்'' என்றான் லோகன்.

'பிரசவத்துக்கு குறிக்கப்பட்ட திகதியையும் தாண்டி 11 நாட்கள் ஆகிவிட்ட நிலையில் ஒரு பெண்ணை சிசேரியனுக்காக சத்திரசிகிச்சை அறைக்கு கொண்டு போயிருக்கினம் மயக்க மருந்து கொடுப்பவர் மற்ற மருத்துவமனையிலிருந்து வர கொஞ்சம் தாமதமாகிவிட்டதாம். அவ்வளவுதான் மருத்துவர் ருத்திரதாண்டவம் ஆடிவிட்டாராம்.

''என்னால் இப்போது சத்திரசிகிச்சை செய்ய முடியாது'' என்று கூறிவிட்டு வீட்டுக்குப் போய் விட்டாராம் அந்த மருத்துவர்.

அதற்குப் பிறகு, அந்த மருத்துவரின் மனைவியிடம், பெண்ணின் உறவினர்கள் கெஞ்சிக் கூத்தாடிய பின்னர்தான் மருத்துவர் வந்து சத்திரசிகிச்சை செய்தாராம் இத்தனைக்கும் மருத்துவமனை சிரேஷ்ட ஊழியர் ஒருவரின் மருமகளாம் அந்தப் பெண். அவருக்கே இந்தக் கதி என்றால், சாதாரண பொது மக்களின் கதி என்னாகும்? என்று கேட்கின்றனராம் கிழக்கு மாகாண மக்கள். கூறி முடித்தார் விநாசியர்.

**குறிப்பு:**
**சுடர் ஒளி தேரடி அரட்டையில் வெளியான தகவல்களையும் கல்முனை ஆதார வைத்திய சாலையிலிருந்து வந்திருக்கும் மறுப்புக் கடிதத்தையும் ஒன்று சேரப்படித்துப்பார்த்து முடிவெடுக்கும் பொறுப்பை வாசகர்களிடமே விட்டு விடுகிறோம்.**

— ஆசிரியர்



# வாழுங்காலத்திலேயே வாழ்த்துக் கூறுங்கள்


ஆர்.விக்டர்

"அன்றைய தயாரிப்பாளர் வி. ஏ. சிவஞானம் காலத்திலிருந்து இன்றைய தயாரிப்பாளர் கலைமகள் மகேந்திரன் காலம்வரை இன்னமும் நிலைத்திருக்கிறேன்.... இதுதான் எனது சாதனை..."

இவ்வாறு கூறுகிறார், இலங்கை வானொலியில் சுமார் 46 வருடங்களுக்கு மேலாக சிறந்த நாடகக் கலைஞராகவும் உரைச் சித்திரக் கலைஞராகவும் தடம் பதித்து வரும் ஆர். விக்டர்.

ஆரம்பத்தில் "சிறுவர்மலர்" மூலம் அறிமுகமாகி, இன்றுவரை தொடர்ந்து வானொலி நாடகங்கள் — உரைச்சித்திரங்கள் கதம்பம்... போன்ற பல நிகழ்ச்சிகளில் இவர் பங்கு பற்றி வருகின்றார்.

நாடகக் கலைஞர் ஆர். விக்டருடனான நேர்முகத்தை இங்கே தருகிறோம். படித்துப் பாருங்கள்!

**நீண்டகால வானொலிக் கலைஞர் விக்டரின் நேர்காணல்**

கே : இலங்கை வானொலியில் கொடிகட்டிப் பறப்பவர்களில் அநேகர் ஆரம்பத்தில் சிறுவர் மலர் மூலமே அறிமுகமானவர்கள். நீங்களும் அவ்வாறுதான் அறிமுகமானீர்களா?

ப : ஆமாம் பாடசாலையில் படிக்கும் போதே எனது நண்பர் கே. இராமச்சந்திரனின் உந்துதலால் சிறுவர் மலரில் அறிமுகமானேன்.

கே : இலங்கை வானொலியில் ஒரு கலைஞராக நீங்கள் அங்கீகாரம் பெற்றது எப்போது? வானொலிக் கலைஞராக நீங்கள் நடித்த முதல் நாடகம் எது?

ப : 1957 இல் இடம்பெற்ற நாடகக் கலைஞர் தேர்வில் கலந்து கொண்டு அதில் கலைஞராக தெரிவு செய்யப்பட்டேன். இந்த வகையில் வானொலிக் கலைஞர் என்ற அங்கீகாரத்துடன் நான் நடித்த முதல் நாடகம் "இதயக்கல்" இதனைத் தயாரித்தளித்தவர் சானா. இதில் பிலோமினா சொலமனுடன் நடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

கே : இலங்கை வானொலியின் நாடகத்துறை உங்கள் பார்வையில் அன்றும் இன்றும் எப்படி உள்ளது?

ப : இன்று இளைய தலைமுறைக் கலைஞர்களுடன் இரண்டறக்கலந்து பணியாற்றும் வாய்ப்பு உள்ளது. அன்று 30 நிமிடநேர நாடகமொன்றுக்கு இரு நாட்கள் எடுக்கும். முதல் நாள் ஒத்திகை, மறுநாள் ஒலிப் பதிவு. தற்போது குறுகிய காலத்திற்குள்ளேயே கதையையும் எழுதி ஒத்திகையும் பார்த்து ஒலிப்பதிவு செய்து முடிக்கும் அளவுக்கு தொழில்நுட்பம் முன்னேறியுள்ளது.

கே : வானொலி நாடகங்களில் நடிப்பதுடன் மட்டும் நில்லாது நாடகப்பிரதிகளையும் நீங்கள் எழுதியுள்ளீர்கள்; இது பற்றி சற்று கூறுவீர்களா?

ப : இதுவரை 15க்கும் மேற்பட்ட நாடகப் பிரதிகள் எழுதியுள்ளேன். அமரர் எஸ்.பி. மயில்வாகனன் கடமையாற்றிய காலத்தில் இலங்கை வானொலி வர்த்தக சேவையில் "சிலை சமைப்போம் வாரீர்" என்ற 6 வார நாடகத் தொடரினை எழுதி அதில் நடித்தேன். நேயர்கள் மத்தியில் இந்நாடகத் தொடர் அமோக வரவேற்பினை பெற்றிருந்தது.

கே : சுமார் 46 வருடங்களாக இலங்கை வானொலிக் கலைஞராக இருந்து வருகின்றீர்கள்; வானொலிக் கலைஞராக இருந்து நீங்கள் சாதித்தது என்ன?

ப : வானொலி நாடகத்துறையில் நான் பெரிதாகச் சாதித்தது ஒன்றுமேயில்லை. ஆனால் ஒன்று, அன்றைய தயாரிப்பாளர் வி.ஏ. சிவஞானம் காலத்திலிருந்து இன்றைய தயாரிப்பாளர் கலைமகள் மகேந்திரன் காலம்வரை இன்னமும் இலங்கை வானொலியில் நான் நிலைத்திருக்கிறேன். இது தான் எனது சாதனை!

கே : வானொலி நாடகத்துறையில் நீங்கள் நினைவு கூருவோர் யார்?

ப : கே.இராமச்சந்திரன், வி.ஏ.சிவஞானம், ராஜேஸ்வரி சண்முகம் தம்பதியினர், திருமதி பொன்மணி குலசிங்கம் எஸ்.வி.ராஜசுந்தரம், எஸ். சண்முகநாதன் (சானா) இவர்களுடன் எனக்கு கல்வி புகட்டிய ஆசான்களான செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பராசக்தி நவரத்தினம், வித்துவான் எஸ். ஈ. கமலநாதன் ஆகியோர்.

கே : உங்களால் மறக்க முடியாதது...?

ப : ஆங்கில உரைச்சித்திர நிகழ்ச்சி ஒன்றில் தமிழ் மந்திரவாதியாகக் கலந்து கொண்டு நடித்தது. என் உடன் பிறந்த சகோதரன் மரணமுற்று பிரேதம் வீட்டில் வைக்கப்பட்டிருந்த வேளையில் "தேன்கூடு" தொடர் நாடகத்தின் ஒலிப் பதிவில் கலந்து கொண்டது. ஒரே நேரத்தில் இரண்டு நிகழ்ச்சிகளில் கால் பதிக்கப் போய் நிகழ்ச்சியிலிருந்து 6 மாதம் இடை நிறுத்தப்பட்டது... இவற்றினை மறக்கவே முடியாது.

கே : இந் நேர்காணலின் வாயிலாக இறுதியாக கூற விரும்புவது என்ன?

ப : ஒரு கலைஞனை அவன் வாழும் காலத்திலேயே வாழ்த்துங்கள். அவன் இறந்த பிறகு இரங்கலுரை நிகழ்த்துவதையோ — எல்லோருமாய் கூடி பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு பண உதவி செய்கிறோம் என தம்பட்டம் அடிப்பதையோ தவிருங்கள். ஏனென்றால் எந்தக் கலைஞனும் அவன் இறந்த பின் பயன் பெற்றதாக எனக்குத் தெரியவில்லை. எழுத்துருவில் கலைஞர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் தங்களுக்கும், "சுடர் ஒளி" பத்திரிகைக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

பேட்டி கண்டவர்:— ரமேஷ்காந்த் ஜெயசீலன்

# அறுவடை போதாத ஈழத்து சிறுவர் இலக்கியங்கள்

ஈழத்து இலக்கியப் பரப்பில் போதிய அறுவடையைக் காணாத பகுதி சிறுவர் இலக்கியப் பகுதி என்று குறிப்பிட்டுச் சொல்லலாம். சிறுவர்களுக்கான கதைகள், கவிதைகள், பாடல்கள், நாடகங்கள் என்று சிறுவர்களுக்கான ஆக்கப் படைப்புகளின் தேவை கருதியே இன்று சிறுவர்கள் சம்பந்தமான ஒரு நூலும் சிறுவர்களுக்கான நூலுமாக இரு நூல்கள் வெளிவருகின்றன.

இப்படிக் கூறினார் டாக்டர். எம்.கே.முருகானந்தன்.

மூன்றாவது மனிதன் பதிப்பகத்தின் ஏற்பாட்டில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டில் கலந்து கொண்டு தலைமை தாங்கிப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

"ஊஞ்சல் ஆடுவோம்" என்னும் மு.பொன்னம்பலத்


நூல் வெளியீட்டு விழாவில் இளையதம்பி தயானந்தா விமர்சன உரை நிகழ்த்துகிறார். எஸ்.கே. விக்னேஸ்வரன், பேராசிரியர், கா. சிவத்தம்பி, எம்.கே. முருகானந்தம், மு. பொன்னம்பலம் ஆகியோர் மேடையில் காணப்படுகின்றனர்.
படம்: ஆர்.பிரதீப்குமார்

தின் சிறுவர்களுக்கான கவிதை நூலும், "குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே" எனும் குழந்தை வளர்ப்பு முறை பற்றியதான எஸ்.கே.விக்னேஸ்வரனுடைய மொழிபெயர்ப்பு நூலுமே மேற்படி நிகழ்வில் வெளியிடப்பட்ட இரு நூல்களுமாகும்.

மு.பொன்னம்பலத்தின் "ஊஞ்சலாடுவோம்" என்னும் கவிதை நூல் களித்தல், கற்றல், வியத்தல், என முப்பிரிவுகளையும் கொண்டு அழகிய தரமான கவிதைகளைத் தாங்கி வெளிவந்திருக்கிறது.

மற்றைய நூல் 1964 ஆம் ஆண்டு டொக்டர் ஹேய்ம் ஜி இன்டே எழுதிய "Between parents and child" என்னும் நூலின் மொழிபெயர்ப்பான குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே என்னும் எஸ்.கே.விக்னேஸ்வரனுடைய நூல்.

இந்த நூல் குழந்தைகளுடன் நாம் எப்படி உறவாடுகின்றோம், உரையாடுகின்றோம், தொடர்பு கொள்ளுகின்றோம் என்பவை பற்றிய அடிப்படைத் தேவை குறித்த ஒரு சீரான தகவலை வழங்குகின்றது.

"குழந்தை வளர்ப்பு முறையென்பது அக்கறையோடு செய்யப்பட வேண்டிய ஒரு கல்வி முறையாக மேலை நாடுகளில் பேணப்பட்டு வருகிறது. எமது நாட்டில் நெருக்கடியான சூழ்நிலை காரணமாக குழந்தைகளின் வாழ்க்கை முறை மிக மோசமாக மாறியதோடு மட்டுமல்லாமல் சிறுவர் துஷ்பிரயோகங்களும் மலிந்து வருகின்றன" இவ்வாறு பேசினார் விழாவில் கலந்து கொண்டு விமர்சன உரையாற்றிய பேராசிரியர் கா.சிவத்தம்பி.

இதனை அடுத்து சிறந்ததோர் விமர்சன உரை வழங்கினார் இளையதம்பி தயானந்தா. இவரின் விமர்சன உரையோடும், நூலாசிரியர்களின் உரையோடும் வெளியீட்டு நிகழ்வுகள் நிறைவுச் சாளரத்தை எட்டித் தொட்டன.

—கருடன்

## கண்ணதாசன் நினைவு தினவிழா

கவியரசு கண்ணதாசன் நினைவுதின விழா 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும்.

இந்த விழாவில் யாழ் — மருதனார் மடம் இசைக் கல்லூரியின் உயர் வகுப்பு மாணவியான கொக்குவில் நந்தாவிலைச் சேர்ந்த செல்வி சண்முகநாதன் ஜெகனியின் பக்திப் பாடல்கள் அடங்கிய "ஒலி வட்டு" ஒலிநாடா வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

அதேவேளை செல்வி சண்முகநாதன் ஜெகனியின் பக்திப் பாடல் நிகழ்வும் அன்றைய தினம் இடம் பெறும்.

இந்த நிகழ்வுக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் கலாசூரி ஆர். சிவகுருநாதன் தலைமை வகிப்பார்.

# சினிமாவை அசைப்போடும் "அசையும் படிமங்கள்"

கே.எஸ். சிவகுமாரன் எழுதிய "அசையும் படிமங்கள்" என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த 7ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பத்தி எழுத்தாளன் எனத் தன்னை இனம் காட்டிக் கொள்ளவே பெரிதும் விரும்பும் கே.எஸ்.


வெளியீட்டு நிகழ்வில் தலைவர் எம்.கே. முருகானந்தத்திடமிருந்து புரவலர் ஹாஷிம் ஓமர் முதல் பிரதியைப் பெறுகிறார். அருகில் நூலாசிரியர் கே.எஸ். சிவகுமாரன் காணப்படுகிறார்.
படம்: ஆர். பிரதீப்குமார்

சிவகுமாரனின் பதின் மூன்றாவது நூல்தான் "அசையும் படிமங்கள்." சினிமா பற்றியதான ஒரு அறிமுக நூலாக இது வெளிவந்திருக்கிறது.

மீரா பதிப்பகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் வரவேற்புரை நிகழ்த்தினார். "அசையும் படிமங்கள்" என்ற இந்த நூலோடு மீரா பதிப்பகம் தனது இருபத்தைந்தாவது நூல் வெளியீட்டைக் கடந்திருக்கிறது, என்று அவர் கூறினார்.

திரைப்படத் துறை சம்பந்தமாக வெளிவந்திருக்கும். இந்த நூல் ஈழத்து தமிழ் இலக்கியப் படைப்புக்களுக்கு புதிய துறை ஒன்றைத் தோற்றுவித்திருக்கிறது. இந்த நூல் திரைப்படக் கலையின் உலகளாவிய வளர்ச்சியை அழகுறச் சித்திரிக்கிறது, என்றார் வெளியீட்டு நிகழ்வுக்கு தலைமை வகித்துப் பேசிய வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தம்.

அவருடைய தொடர்ச்சியான உரையில் இன்றுவரை தமிழ் சினிமாத் துறை நாடகப் பாணியில் இருந்து விடுபடவில்லை என்ற ஆதங்கத்தைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

மனத்திரை என்ற பத்தி எழுத்துக்குச் சொந்தக்காரரான கே.எஸ். சிவகுமாரன் வாசகர் நெஞ்சங்களை வசீகரித்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ஓர் எழுத்தாளன்.

இவருடைய 13 நூல்களில் இரு நூல்கள் தேசிய சாகித்திய விருதுகளைப் பெற்றிருக்கின்றன என்று இன்னும் பல தகவல்களைத் தந்தார் "எழுத்துலகில் கே.எஸ். சிவகுமாரனின் திரைப்படத்துறைப் பங்களிப்பு" என்ற தலைப்பில் கணிப்புரை நிகழ்த்திய செ. யோகநாதன்.

கார்முகில் சொரிந்த புகழ் மாரியில் சட்டைக் கொலரை இழுத்து விட்டபடி நன்றாகவே நனைந்து கொண்டிருந்தார் நூலின் கதாநாயகர்.

பொழிந்தது புகழ்மாரி என்பதால் கூதல் எடுக்க வில்லை. குதூகலம் தான் ஏற்பட்டிருக்கும் அவருக்கு.

புகழாரப் புராணத்தால் சந்தோஷப்பட்டவர் நூலாசிரியர் சங்கடப்பட்டவர்கள் பார்வையாளர்கள். சுழன்று சுழன்று படம் எடுத்துக் கொண்டிருந்த கமராக்களையும் கலகலப்பாக இருந்த சனக் கூட்டத்தையும் பொருட்படுத்தாமல் கொட்டாவி விட்டு கண்மூடித் தூங்கிய சிலரைப் பார்த்ததில் இருந்து இது தெரிய வந்தது.

முதற்பிரதி சாதனையாளன் என்று பலராலும் போற்றப்படும் புரவலர் ஹாஷிம் ஓமர், நூலின் முதற் பிரதியை பெற்றுக் கொண்டார்.

மின்சாரம் நின்று போனதால் எஸ்.கே. விக்னேஸ்வரனின் கணிப்புரையை தெளிவாக விளங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது.

திருமதி அனுஷியாதேவி சுரேந்திரன் நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் தொகுத்து வழங்கினார்.

— இலக்கியன்

# சிறந்ததோர் தமிழ் விழாவில் பாரதி இலக்கிய அரங்கு






திருகோணமலை திருமறைக் கலாமன்றம் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடத்திய தமிழ் விழாவின் போது பிடிக்கப்பட்ட படங்கள்.

இந்த விழாவில் ஓர் அம்சமாக பாரதி இலக்கிய அரங்கும் இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் சி. தண்டாயுதபாணி விளக்கேற்றுவதையும் அரங்குக்குத் தலைமை வகித்த இலங்கை கலைக்கழக முன்னாள் தலைவரும் சட்டத்தரணியுமான கா. சிவபாலன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் கு. திலகரத்தினம் (மாலையுடன்) ஆகியோர் அருகில் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

விழாவில் மற்றொரு நிகழ்ச்சியாக இடம் பெற்ற 'எந்தையும் தாயும்' என்னும் இசைச் சித்திரத்தை இரண்டாவது படத்தில் காணலாம். செல்வி யோ. சுடர்மதியின் நட்டுவாங்கத்தில் இந்த இசைச் சித்திரம் தயாரிக்கப்பட்டது.

— தங்கம்

கலையமுதம்

# பந்தலிலே பாகற்காய் பார்க்கும் தமிழ்க் கட்சிகள்!

"... பந்தலிலே பாகற்காய்,
பந்தலிலே பாகற் காய்"
"போகும் போது பார்த்துக்கலாம்
போகும் போது பார்த்துக்கலாம்"
"விதைக்கெல்லோ விட்டிருக்கு –
அது
விதைக்கெல்லோ விட்டிருக்கு"

ஒரு மரண வீட்டுக்குச் சென்ற பெண்களில் இருவரும் மரணமானவரின் நெருங்கிய உறவினரான வீட்டுப் பெண்ணும் ஒப்பாரி மூலம் இப்படித் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டனராம் இப்படியொரு கிண்டல் நாடோடிக்கதையாகச் சொல்லப் படுவதுண்டு.

அதாவது இழவு வீட்டுக்குச் சென்ற பெண்களில் ஒருவர் ஒப்பாரி சொல்லி அழும்பொழுது தன்னுடன் கூட வந்த பெண்ணிடம்; அந்த வீட்டு வாசலிலிருந்த பாகற்காய் பந்தலில் அழகான பெரிய பாகற்காய் காய்த்துத் தொங்குவதைக் கவனித்தாயா? என்று ஒப்பாரி மூலம் கேட்டாளாம்.

இதற்குப் பதிலாக அந்தப் பெண்ணும் இழவு வீட்டிலிருந்து போகும் போது அதை ஆய்ந்து கொண்டு போய் விடலாம் என்ற தொனியில் "போகும் போது பார்த்துக்கலாம்" என்று ஒப்பாரி மூலமே பதிலளித்தாளாம்.

இந்த இரண்டு பெண்களும் தன் வீட்டுப் பாகற்காயை அடித்துக் கொண்டு போகமுயற்சிக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்ட வீட்டுக்காரப் பெண்ணும் ஒப்பாரி மூலமாகவே அந்த இரண்டு பெண்களுக்கும் "அது விதைக்கு விட்டிருக்கு" என்று பதிலளித்தாளாம்.

இந்தக்கதை மாதிரித்தான் நமது தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அரசமைப்புச் சபைக்கு ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்யும் கதையும் இருக்கிறது.

தமிழ் மக்கள் இன்று எல்லாவற்றையும் இழந்து வாழ்வா சாவா என்ற நிலையிலிருக்கின்றனர். தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் எந்தக் காரணமுமில்லாமல் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி சிறைகளிலும் முகாம்களிலும் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் படும் அல்லல் சொல்லி முடியாது.

காணாமல் போகும் தமிழ் இளைஞர்கள் யுவதிகளின் கதையும் தொகையும் தொடர்ந்து கொண்டே போகின்றன.

அழிவைத் தொடரும் அநியாயப் போரை நிறுத்த வேண்டுமென்ற குரல் சில இடங்களிலிருந்து சில நேரங்களில் ஒலித்தாலும் அது அமுக்கப்பட்டு விடுகிறது.

சமாதானப் பேச்சு என்ற பேச்சே இன்று இல்லாமல் தொலைந்து போயிருக்கிறது. அமெரிக்காவில் தாக்குதல் நடந்தது. அந்தப் பயங்கர வாதத்தை எதிர்த்து உலகில் பயங்கர வாதத்தை ஒழிக்கப் போவதாக அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் அறிவித்து பயங்கர வாதத்தை ஒழிக்க உலக நாடுகள் ஒன்று சேர வேண்டுமென அழைப்பு விடுத்ததும், "இதோ நாங்கள் தயார்" என்று குரல் கொடுத்தவர்களில் இலங்கையும் ஒன்று.

தங்கள் நாட்டில் அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் விழித்தெழுந்து குமுறத் தொடங்கி விடுதலைக்குப் போராடுவதை எதிர்த்து அந்த இனத்தையே அழிப்பதற்குப் பேரினவாதிகள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முன்வந்துள்ளனர்.

இலங்கையில் விடுதலைக்குப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள், இந்தியாவில் காஷ்மீர் விடுதலைக்குப் போரா டும் காஷ்மீர் போராளிகள் இப்படி மற்றும் பகுதிகளிலுள்ள விடுதலைப் போராளிகளையும் அழித்தொழிப்பதற்கு அமெரிக்காவின் ஆத்திரத்தைப் பயன்படுத்த முனைகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் அவல நிலையை இலங்கையின் நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்தின் மூலம் உலக நாடுகளுக்கும் எடுத்துச் செல்வதற்கும் எடுத்துக் காட்டுவதற்கும் நாடாளுமன்றத்திலுள்ள தமிழ்ப் பிரதிநிதிகளுக்குத் தான் வாய்ப்பிருக்கிறது.

இவர்கள் நாடாளுமன்றத்துக்குச் சென்ற போதே இதைச் சொல்லித்தான் சென்றார்கள்.

இப்பொழுது மூன்றாவது தடவையாகவும் இலங்கைக்குப் புதிதாக ஓர் அரசமைப்பை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கென அரசமைப்புச்சபை அல்லது அரசியல் சாசனப் பேரவை ஒன்று நிறுவப்படவிருக்கிறது. இச்சபைக்கு அரசியல் கட்சிகளில் அங்கம் பெறாத அறிவு ஜீவிகளான பொது மக்கள் பத்துப் பேரை விகிதாசார முறை யில் அரசியல் கட்சிகள் தேர்ந்தெடுக்கவேண்டும்.

எல்லாக்கட்சிகளும், தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து விட்டன. இலங்கைத் தமிழரும் இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழரும் தான் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முடியாமல் தமக்குள் குடுமிப்பிடிச் சண்டை போட்டு, இலங்கையில் தமிழர் எந்த நிலையில் எதற்காகப் போராடுகிறார்கள் என்பதை வெளி உலகத்துக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசமைப்புச்சபை தமிழ்ப் பிரதிநிதிகள் சொல்வதைக் கேட்டுப் புதிய அரசமைப்பில் தமிழ் மக்கள் சுதந்திரமாகச் சுயநிர்ணய உரிமையுடன் பாதுகாப்பாக வாழக் கூடிய முறையில் விதிகளை இணைத்து தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் வழங்கிவிடப் போவதாகத் தமிழ் அரசியல் கட்சிகள் நினைத்து விட்டன போல் தோன்றுகிறது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அரசமைப்புச் சபையை சந்திரிகா அம்மையாரின் அம்மா சிறிமா கூட்டி புதிய குடியரசு அரசமைப்பைத் தயாரித்த போதே தமிழ் மக்கள் அளித்த ஆணைப்படி தமிழ் மக்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படைப் பிரேரணைகள் விவாதிக்கப்படாமலேயே நிராகரிக்கப்பட்டன.

இப்பொழுது ஜே.வி.பியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட பின் அமைக்கப்படும் அரசமைப்புச்சபை தமிழ்ப் பிரதிநிதிகள் முன் வைக்கும் யோசனைகளை, பிரேரணைகளை ஏற்று நிறைவேற்றுமா?

நிறைவேற முடியாத வெறும் பம்மாத்து வேலைகளுக்காக தமிழ்க் கட்சிகள் தமக்குள் சண்டை போட்டுக்கொள்கின்றன. அரும்பெரும் தியாகங்கள் செய்து தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை உலக நாடுகள் அறிந்து ஆதரவு தெரிவிக்கும் கட்டத்தில் தமிழ் மக்களின் போராட்டத்தைத் திசை திருப்புவதற்கு தமிழ்க் கட்சிகள் காரணமாக இருக்க வேண்டுமா?

இந்த அரசமைப்புச் சபைக்கு நீங்கள் விரும்பியவர்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.

ஆனால் புதிய அரசமைப்பு தயாரிக்கப் படுவதற்கு முன் னர் இன்று தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து நடத்தி நாட்டின் நலன் கருதி ஓர் உடன்பாட்டுக்கு வந்த பின் நாட்டுக்குப் புதிய அரசமைப்பை உருவாக்குங்கள் என்பதை ஆளும் அரசுக்கும் ஆட்சிக்கு வருவ தற்குக் காத்திருக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் எடுத்துச் சொல்லி விட்டு தமிழ்க்கட்சிகள் இதிலிருந்து ஒதுங்கிக் கொள்வதே புத்திசாலித்தனம்.

எந்த முடிவுக்கும் வர முடியாமல் புதிய அரசமைப்பினால் தமிழ் மக்களுக்கு விடிவு பிறக்கும் என்ற ஒரு மாயையை ஏற் படுத்தி அதற்காகத் தமக்குள் அரசியல் கட்சிகள் சண்டை போடு வது "பந்தலிலே பாகற்காய்" பார்த்தகதையாகவே இருக்கும்.

— எஸ்.எம்.ஜி

## புலம்பல் ...

இளம் மொட்டுகளே.....
இது உங்களுக்கான
விண்ணப்பம்.......!
என் பசுமையான....
நினைவுகளைப் பறித்த.....
'கல்லறை'—நிச்சயம்
கண்ணீர் விடும்.
என் வாழ்வுப் பொதிகை.....
நீறுபூத்த நெருப்பில்.......
தத்தளித்தால்— நான்
நிஜமாகவே
எரிந்து விட்டேன்.......!
நீங்களாவது....!
நந்தவனத்தில்
வாழுங்கள்.....!

எஸ்.தமிழாம்பிகை ஜெகன்,
நானாட்டான்.

## கைதியின் டயறி

மௌனமாகிப் போன.....
மனதின் நிசப்தங்கள்
என்னை மெல்ல வருட
உருக்குலைந்த தேசத்தின்
கைதியாய்......
கலங்கிய கண்களுடன்
என் காத்திருப்பு.......
விலங்குகள் பூட்டிய .....
கம்பிக்குள்ளும்
கம்பீரமாக.....
என் ஆன்மா......
புயலொடு பூகம்பமாய்
வீறு கொண்டெழும் .....
விழிகள் சிவக்க .......
முகவரியைத் தொலைக்கும்
என் முடிவிலும்
ஒரு வரலாறு பிரசவிக்கும்
பூபாள விடியலை
நோக்கி........

க. நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

## கற்பனை

இளமை வரும் போது
முதுமையும் வருகிறது
இன்பம் சேரும் போது
துன்பமும் சேருகிறது
உறவு வரும் போது
பிரிவும் வருகிறது
கவிதை எழுதும் போது
கற்பனையும் வருகிறது

மு. வாசுதேவன், கிளிநொச்சி

கவிதைப் பூங்கா

# கவிதைச் சமர்

## பாடும், சுதந்திரத்தின் பலன்!

(சி.சத்தியகுமாரனின் கவிதைக்குப் பதில் கவிதை)

பெண்ணிடைக் கவிபாடல் பிழையென்று சொன்னால்
பேய்க்கதைதான் என்றெனக்கு நல்லாவே தெரியும்!
கண்ணினமையை மூடிடவா கடவுளிதைப் படைத்தான்?
கற்புநிலை களவுநிலை இரண்டெனவும் சமைத்தான்?

அழகுமுகங் கொண்டவொரு அணங்கவளின் பார்வை
அன்பு எழும் தன்மையிலே எந்தனிலே விழுந்தால்
உலகுபெறும் வன்மையுடன் உண்மைக் கவிபாடி
ஊரறிந்த காதலனாய் உயர்வுபெற வாழ்வேன்!

பெண்களினால் இன்பமுண்டு, பேதையவள் பார்வை
பிணிதீர்க்கும் மருந்தென்று பொய்யா மொழி புகலும்
அண்மைநிலை கண்டார்கள் திருக்குறளின் ஆழம்
அளவில்லா முடிவிலியாய் ஆகுவதை உணர்வார்!

கொவ்வையிதழ் கன்னத்திலே கொஞ்சுவதில் இன்பம்
கோபித்த பார்வை அந்தக் கோலமொரு இன்பம்
செங்கனிகள் என்று சொல்லித் திசை தேடும் மார்பைச்
சேர்ந்திருந்தால் பூவுலகு சொர்க்கமாகும் இன்பம்!

தமிழ் வாயில் சுழல்கின்ற அழகென்ன அழகு—சேலை
தடக்கவொரு நடைபயிலு மழகென்ன அழகு!
அமிழ்தாகும் உமிழ்நீரின் சுவையென்ன சுவையோ?!
அடபோடா, உனக்கொன்றும் தெரியாது இவையே!

காதலுடன் வீரமது கலந்து நின்ற வாழ்வு
காண்பதற்கு சங்கமுதல் இற்றைவரை நூறுகதையுண்டு
மோதல் வேண்டாம், பெண்ணழகை முற்றெனவே பாடும்,
முழு உரிமை உமக்கிருக்கு; இது சுதந்திரத்தின் ஈழம்!

— வாயுபுத்திரன், யாழ்ப்பாணம்.

23.09.2001 சுடர் ஒளியில் கவிதைச் சமரைத் தொடக்கிய நாவடி லோ.துஷிகரனின் "விழியசைவால் பிறந்த கவி"க்கு பதில்

## வேண்டாம் ஐயா புறக்காதல்

தேன் தமிழைக் கிண்டிக் கிளறி
தேன் கூடாய்ச் சொல் கோத்து
தெரு வீதி செல்பவளைத்
தோத்தரிக்கும் பாவலனே
படர்க்கையில் மொழியும் பாவில்
படர்கிறதே முன்னிலையும் (இக்கவி)
ஏற்பாடொருத்திக் கென்று
ஏற்றிடத்தான் முடியவில்லை
தூக்கம் கெட்ட தென்றாய்
துயர் மிஞ்சிப் போன தென்றாய்
கண் மறைக்கும் காமத் தீயால்
கண்டபடி பாடி விட்டாய்
உடலழகைக் கூறும் காதல்
உடலழுகுக் கூறு வந்தால்
செல்லாத காசாய் எண்ணி
சொல்லாமல் ஓடிப் போகும்
லட்சத்தோடு பெண் வேண்டும்
லட்சியம் உன் அம்மாவுக்கு
பணமெத்தை கண்டவுடன்
பணிந்திடுவாய் முந்தானைக்குள்
(அம்மாவின்)
பாரந் தந்து நெஞ்சில் நின்ற
பல்குழல் சுடு கணையும்
வெடிக்காமல் விலகிவிடும்
வெறும் நெஞ்சு மிஞ்சி விடும்
காதலும் மறந்து விடும்— உன்
பாடலும் பறந்து விடும்
காதலினை நம்பி வந்தால்
பேதலித்துப் போவதுண்மை
அமைதியின்றி நாம் நாட்டில்
அவதிப் படுகையிலே
கடமைகள் உணர்ந்து நீ
கருத்தினை மாற்றிக்கொள்

ரி.லக்கி, மல்லாகம்.

## பழியசையப் பாடல்

வான்மதி தொட்டு வலம்வரும் கற்பனையில்
ஏன் மதி கெட்டீர் உயர்ந்திடும் சிந்தனைகள்
காண்பதில் இன்னும் தயக்கமும் ஏன் கவியே!
நான் பதில் தந்தால் விளங்கிடும் உம் நிலையே:

பெண்ணை வீணையாய் போகப் பொருளுமாய்
கண்ணை மானுமாய் காதலின் தேருமாய்
முன்னைப் பாவலர் பாடிய போது மேன்
இன்னும் பாடுநீர் சலிப்பதும் இல்லையோ?

மண்டையோடுகள் சேலையின் மீதிகள்
கிண்டும் போதினில் வெளிவரும் மண்ணிலே
சண்டை தொடருது சனங்களும் சாகையில்
கெ(ா)ண்டை வண்ணத்தைக் கவிசெய்யக் காலமோ?

கால மழையின்றிக் கதிரவன் வெறிகொண்டு
வாழ வழியின்றி வறுமையின் கொடுங்கோலில்
ஞாலம் கருகுண்டு நெறிகெட்ட மனிதர்க்குள்
வாலைக் கனவுகளில் கவிசெய்யக் காலமுண்டோ?
கப்பலேறியே கடல் தாண்டி அகதியாய்
உப்புக் காற்றிலும் உறைபனிக் குளிரிலும் துப்புக்
கெட்டுப் பணந்தேடி மாள்கையில்
சப்பைக் கொட்டிடும் சரசக் கவி ஏனையா?

திட்ட மிட்டுமே தமிழர் குடிகளை
ஒட்டக் கருக்கியே உணர்வுகள் அடக்கியே
வெட்ட வெளிச்சமாய் குழியிட்டுப் புதைக்கையில்
சட்டம் புதைவதும் அறிவீரோ கவிவேளோய்!?

சிருங்காரக் கவிசொல்ல ஒரு காலம் வருமட்டும்
பெரும் போரின் அனர்த்தங்கள் பொருள் செய்து பாடுவீர்!
வருங்காலம் உமக்கென்று விருதோடு வருமட்டும்
அருங்காலம் உணர்ந்துங்கள் எழுதுங்கோல் ஏந்துவீர்!

—மாவை செங்கோன், உரும்பராய்.

# உறவுப் பாலங்கள்

சு.சிவராசா

கைதடிப் பாலத்திற்கு அண்மையிலிருக்கும் கைதடிப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் பலர் சுருண்டு படுத்திருக்கிறார்கள். ஓயாத அலைகள் மூன்றும் தென்மராட்சிக்குள் புகுந்து ஒரு சுழட்டு சுழட்டி, கலக்கி அடித்த பின்னர், எங்கோ ஓரிடத்திற் போய் மையம் கொண்டு இருக்கிறது.

படையினர் தரப்பில் அது மீண்டும் எப்போது தன் ஊழிக்கூத்தை ஆரம்பிக்கப் போகிறது என்ற கேள்வியும், பீதியும் எழுந்து கொண்டிருந்தன. அதேவேளை, புயல் கடந்த பூமியில் மக்கள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தார்கள். தூரத்திலிருந்து வந்து விழும் ஷெல்கள், வீடுகளைப் பதம் பார்த்தவாறு இருந்தன. போராளிகள், மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தியவாறு இருந்தனர்.

ஆனால், உயிர்களைப் பலி கொள்ளும் கலையில் கை தேர்ந்த கூற்றுவன் இவர்களுக்குக் கண்ணா மூச்சி காட்டி விட்டு, நூற்றுக்கணக்கான மக்களைப் பலி கொண்டுவிட்டான். எங்கும் பயமும் பீதியுமாக இருந்தன. தென்மராட்சி பொறி கலங்கிப் போயிருந்தது.

கடந்த மூன்று மாதங்களாக பொன்னையர் தனது மனைவி வள்ளிப் பிள்ளையோடும், மகள் சரசுவோடும் நாவற்குழிப் பாடசாலை கட்டடத்தின் உறுதியில் நம்பிக்கை வைத்து உயிர்களை காவாந்து பண்ணிக் கொண்டிருந்தார். சண்டை பெரிதாக வெடிக்கு முன்னரே சரசு கணவனையும் பிள்ளைகளையும் வலிகாமத்திற்கு அனுப்பி விட்டாள்.



பொன்னையரின் கைவசம், பிள்ளைகளுக்கு எழுதிக் கொடுக்கப்படாத சொத்துக்கள் கொஞ்சம் இருக்கின்றன. எப்படியும் கிழவன் மண்டையை போடுவதற்குள் தான் அதைச் சுருட்டிக் கொள்ள வேண்டும் என்று அவள் நினைத்திருப்பது வேறு விடயம்.

பாடசாலையில் இருந்த பல குடும்பங்கள் இனியும் தாக்குப் பிடிக்க முடியாது என்ற நிலையில் வன்னிக்கும் வலிகாமத்திற்கும் நகர்ந்து கொண்டிருந்தன. செஞ்சிலுவைச் சங்கத்தினைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் வருகிறவர்களை அழைத்துச் சென்றனர்.

பொன்னையரையும் மனைவியையும் நான்கு மாதமாக வைத்துப் பராமரித்த மகள் சரசு அலுத்துப் போனாள். பொன்னையரின் கையில் மடியிலே கிடந்தவைகளும், புளியை கடலிற் கரைத்தாற் போல ஆகிவிட்டன. கையைக் கடிக்கத் தொடங்கியதால் வயிற்றில் அடி விழத் தொடங்கி விட்டது.

சரசுவின் மூளை தீவிரமாக வேலை செய்தது. ''சண்டை முடிய எத்தனை மாதமோ...'' ''எத்தனை வருஷமோ'' தெரியாது. நான் உங்க போற சனங்களோடு வலிகாமம் போகப் போகிறேன். நீங்கள் என்ன செய்யப் போறியள். இருந்த வீடு வாசலும் உடைஞ்சு போச்சு. ''இனி இஞ்சை இருக்கிறது நல்லதில்லை'' என்று அவள் பொன்னையருக்குச் சொன்னாள். அவர் இந்த விஷயத்தை வள்ளிப் பிள்ளையிடம் பரிசீலனைக்கு வைத்தார்.

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேலிடத்திலிருந்து சம்மதமும் கிடைத்தது. ஊரை விட்டுப் போவதில் பொன்னையருக்கு சம்மதமில்லை தன்னுடைய இத்தனை வருட வாழ்க்கையை இந்த மண்ணில் தான் அவர் செலவிட்டு இருக்கிறார். நாலைந்து வருடத்திற்கு முன்பு வரை தன்னுடைய தோட்டத்தைச் செய்து கொண்டிருந்தார்.

இனப்பிரச்சினையும், வயதின் மூப்பும் சேர்ந்து தோட்டச் செய்கையினை நிறுத்திவிட்டன. இருந்தாலும் பொன்னையர் கெட்டிக்காரர். தன்னுடைய பின்னடிக்கென்று தன் கையிருப்பில் கொஞ்சம் வைத்திருந்தார். இந்தக் காலத்திலை நாட்டு நிலைமைகளையும் நம்பேலாது. பிள்ளை குட்டிகளையும் நம்பேலாது என்பது அவருடைய சித்தாந்தம். பொன்னையர் மீண்டும் மறுப்புத் தெரிவித்து வள்ளிப் பிள்ளையிடம் அப்பீல் செய்தார்.

ஆனால் மேலிடம் தன் முடிவில் உறுதியாகவே இருந்தது. பொன்னையர் வேறு வழியின்றி அப்பீலை வாபஸ் வாங்கிக் கொண்டார். ''நீங்கள் இரண்டு பேரும் நல்லா வலிகாமம் போங்கோ. இல்லாட்டி வெளிநாட்டுக்கெண்டாலும் போங்கோ. நான் இங்குதான் இருப்பேன். ஆக ஏலாட்டி வன்னிக்குப் போறவையோட கூடிக்கொண்டு வன்னிக்குத்தான் போவன். உங்காலை மீண்டும் ஆமியிட்டை வர நான் தயாரில்லை என்று தளர்ந்த நரம்புகள் சூடேற வீரவசனம் பேசினார். கடைசியில் பொன்னையரின் பிடிவாதத்தை மாற்ற முடியாமல் வள்ளிப்பிள்ளையும், சரசுவும் வலிகாமம் போய் விட்டார்கள்.

இப்போது பள்ளிக் கூடமும் வெறிச்சோடி விட்டது. எல்லோரும் அந்த இடத்தைக் காலி செய்து விட்டார்கள். பொன்னையர் ஒரு கிழமை சமாளித்து விட்டார்.

பொன்னையரால் சரிக்கட்ட முடியவில்லை. றொபின்சன் குருசோ தனித் தீவில் வாழ்ந்தது போல் பொன்னையர் தவித்தார். கைதடிப் பிள்ளையார் கோயிலில் ஆட்கள் இன்னும் தங்கியிருப்பதாகக் கேள்விப்பட்டார். இறைவன் மகனாக வந்து, ''காதற்ற ஊசியும் வாராது காண் உன் கடை வழிக்கே'' எனப் பட்டினத்தாருக்கு உபதேசித்து மறைந்தான். இங்கே பொன்னையருக்கு ஓயாத அலைகள் புகட்டா உபதேசம் புகட்டி தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டின.

பொன்னையருக்கு எங்கிருந்துதான் இத்தனை வேகம் வந்ததோ. மிச்சம் மீதியாக இருந்த கொஞ்சச் சில்லறையை வேட்டியில் வைத்து முடிந்து செருகினார். இரண்டு வேட்டிகளையும், ஒரு சால்வையையும், ஒரு சொப்பிங் பாக்கில் வைத்து எடுத்துக் கொண்டார். தமது ஊன்று கோலையும் தூக்கினார்.

மகாத்மாவின் தண்டி யாத்திரை ஒன்று, எங்கள் மண்ணில் நடந்தது. விறுவிறு என்று தன் காலடிகளை முன்னோக்கி வைத்துக் கொண்டு போனார். கோயிலை அடைவதற்கு இன்னும் இரண்டு அல்லது மூன்று யார்களே இருந்தன. வீதியின் அந்த முடக்கில திரும்பிவிட்டால், இந்த கிராய் வெளியைத் தாண்டி விடுவார். பிறகு மெயின் றோட்டு வரை பனங் கூடல் என்பதாற் பயம் இல்லை.

பிள்ளையாரே.......... பிள்ளையாரே........ என்று பொக்கை வாயிற் சொற்களை குதப்பிக் கொண்டு கால்களை எட்டி வைத்தார். அந்த நேரம் இரண்டு ஷெல்கள் ஒன்றன் பின் ஒன்றாக கூவிக் கொண்டு வந்தன.

பொன்னையர் பிள்ளையாரை அழைப்பதற்கு வாயைப் பெரிதாகப் பிளந்தார். அந்த வார்த்தை அவருக்கு முன்னால் விழுந்து வெடித்த ஷெல் சத்தத்தோடு சங்கமித்துக் கரைந்து போனது.

கிராய் வெளித் தொங்கலில் வீதியோரமாய் கிழவரின் உடல் கிடந்தது. தளர்ந்து போன உடலில சிந்துவதற்கு சில துளிகள் இரத்தத்தை அவர் வைத்திருந்தார். ஒரு மாவீரனைப் போல தான் பிறந்த மண்ணிற்கு தன்னுடைய கடைசிச் சொட்டு இரத்தத்தை கொடுத்த திருப்தியோடு அவரது உடல் மண்ணை முத்தமிட்டபடி குப்புறக் கிடந்தது. பொன்னையரின் சிந்திய வியர்வையை ஏற்று மண்மாதா அவரை ஏந்திக் கொண்டாள். அவரது உடலில் ஓடுவது அவள் கொடுத்த இரத்தம். அவரது முடிவிலே தான் பட்ட கடனைத் தீர்த்து விட்டார். கடன் தீர்த்த களிப்பு அவர் முகத்தில் புன்னகையாக மலர்ந்திருந்தது.

(யாவும் கற்பனை)

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 10.00–10.30 | சாட் ஷோ | ஆனந்தபவன் | ஆலோசனை நேரம் | பஞ்சவர்ணம் | இப்படிக்கு நீங்கள் | | |
| 10.30–11.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | | |
| 11.00–11.30 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி... | இப்படிக்கு தென்றல் | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30–12.00 | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் | தேனமுது | சப்தஸ்வரங்கள் | திரை இசை | | |
| 12.00–12.30 | கொண்டாட்டம் | பில்லர் | நம்ம நேரம் | பில்லர் | திரை விமர்சனம் | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30–13.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | | |
| 13.00–13.15 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.15–13.30 | | | | | | | |
| 13.30–14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00–14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30–15.00 | | | | | | | |
| 15.30–16.00 | | | | | | இளையகானம் | ரிலாக்ஸ் |
| 16.00–16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | டைம் |
| 16.30–17.00 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | ஜனனி |
| 17.00–17.30 | பூஞ்சோலை | தில்லானாதில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டு | தமிழ் கார்ட்டூன் | இயந்திரப் பறவை | சனிதபதனி |
| 17.30–18.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் |
| 18.00–18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள்... | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30–19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாட் ஷோ | ஆனந்தபவன் |
| 19.00–19.30 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | சப்தஸ்வரம் |
| 19.30–20.00 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி ... | இப்படிக்கு தென்றல் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00–20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30–21.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# நீச்சல் உடையில் தோன்றுவதற்கு கூச்சப்படுகிறார் நடிகை ஷமீதா



சிலருக்கு படங்களை இயக்குவது பொழுதுபோக்கு சிலருக்கு, இது தொழில் ஆனால் சிலருக்கு, இது ஒரு தவம். இந்த வகையில் இயக்குநர் சேரன் மூன்றாவது வகையைச் சேர்ந்தவர்.

இம்முறை கருத்தான கதையோடு களமிறங்கி இருப்பது, பாண்டவர் பூமிக்காக.

சமீபத்தில் வெளியான 'பாண்டவர்பூமி' நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. அதில் கதாநாயகியாக நடித்திருப்பவர் ஷமீதா.

முதல்படம் என்றாலும் அசத்திவிட்டார்! என்று படம் பார்த்தவர்களைப் பாராட்ட வைத்திருக்கிறார்.

பார்வைக்கு சுமாரான அழகுடன் தோன்றும் ஷமீதா நடிப்பில் திறமை காட்டுவார் என்ற நம்பிக்கையுடன் களமிறங்கியிருக்கிறார். இந்தப் புதுக்கவிதையுடன் உரையாடிய போது,

கே: முதலில் உங்களைப் பற்றி எமது ரசிகர்களுக்குக் கூறி விடுங்களேன்!

ப:எனது அக்கா ஏற்கனவே நடிகையாயிருப்பதினால் சினிமா மீது அதிக பற்று வைத்திருக்கிறேன்.

சென்னை எஸ்.ஐ.இ.டி கல்லூரியில் பி.ஏ சைக்காலொஜி இரண் டாம் வருடம் படித்துக் கொண்டிருந்த போது 'பொற்காலம்' படத்தின் பிரிவியூ காட்சிக்கு எனது சகோதரியுடன் சென்றிருந்தேன். அப்போதுதான் சேரன் ஸாரின் கண்களில் பட்டு சினிமாவில் நடிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

கே: சகோதரியின் பெயரைச் சொல்லலாமே!

ப:'ராஜேஸ்வரி', 'பொற்காலம்', 'மூவேந்தர்', 'சின்னத்தாயி' போன்ற படங்களில் நடித்திருக்கிறார். இப்போது பல சின்னத் திரைத் தொடர்களில் நடித்து வருகிறார்.

கே:'பொற்காலம்' பட பிரிவியூ விழாவில் வைத்து சேரன் ஸாருக்கு அறிமுகமானீர்கள் என்று கூறினீர்கள். முதல் படம் இத்தனை தாமதமாக வெளிவந்தது ஏன்?

ப:எனது முதல் படம் 'விண்ணோடும் முகிலோடும்' பிரசாந்த் ஸார் ஜோடியாக நடிப்பதாக இருந்தது. என்ன காரணத்தினாலோ படம் வெளிவரவில்லை. அதனால்தான் இத்தனை தாமதம்.

கே: தங்களுடைய சொந்தப்பெயரே ஷமீதா தானா?

ப:இல்லை. பவானி! 'விண்ணோடும் முகிலோடும்' படத்திற்காக ஷிவானி என்று மாற்றி வைத்தார் இயக்குநர்.

அந்தப்படம் வெளியாகாததினால் 'ஷமீதா' வாக அறிமுகமாகியிருக்கிறேன்.

கே:'விண்ணோடும் முகிலோடும்' கைவிடப்பட்டு ஏறக்குறைய ஒன்றரை வருடத்திற்கும் மேலான இடைவெளி, எப்படிச் சமாளித்தீர்கள்?

ப:மிகுந்த சிரமமாகத்தான் போய்விட்டது. நடிக்கப்போகிறோம் என்று படிப்பையும் இடைநிறுத்தி விட்டேன்.

தொடர்ந்து நடிக்கவும் வாய்ப்பு வரவில்லை. படிக்கவும் முடியாத நிலையில் இருந்தேன்.

கே:'விண்ணோடும் முகிலோடும்' படத்தினையும் இயக்குநர் சேரன்தானே இயக்கினார்.

ப:ஆமாம். தன்னால் என்படிப்பு இடைநிறுத்தப்பட்டு விட்டதை அறிந்த சேரன் ஸார் எப்படியாவது என்னை சினிமாவில் அறிமுகப்படுத்தி ஜெயித்துக் காட்டுவேன் என்று வாக்குறுதி தந்திருந்தார்.

நானும் காத்திருந்தேன். சேரன் ஸாரும் வாக்குறுதியை மறக்காது 'பாண்டவர் பூமி' படத்திற்கு ஸ்கிரீன் டெஸ்ட் எடுத்துப் பார்த்தார். அதில் தெரிவு செய்யப்பட்டேன்.

கே: அறிமுக படத்திலேயே இரட்டை வேடங்களில் ஜமாய்த்திருக்கிறீர்கள். இதைப்பற்றி!

ப: சந்தோஷமாக இருக்கின்றது. புதிய அனுபவம் என்றாலும் டைரக்டர், சக நடிகர்கள் கொடுத்த உற்சாகத்தினால் தான் என்னால் திறமையாக நடிக்க முடிந்தது.

படத்தைப் பார்த்த பலரும் பாராட்டு தெரிவித்தார்கள்.

கே:அறிமுகப் படுத்திய டைரக்டர் சேரன் பற்றி சில வரிகள்?'

ப : ஒரு ஆசானுக்குரிய பொறுமையோடு ஒவ்வொரு காட்சியையும் விளக்கினார். ''யாரையும் முன் மாதிரியாகக் கொள்ளாமல் இயல்பாக உனக்குள் உள்ள திறமைகளை மட்டும் வெளிக்காட்டு'' என்று கூறினார்.

கே:கவர்ச்சிப் போட்டி நிலவும் இக்கால கட்டத்திலே திறமையை மட்டும் வைத்துக்கொண்டு நீங்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்.

ப: எந்த நிலையிலும் அதிக கவர்ச்சி காட்ட மாட்டேன். நீச்சல் உடைகள் போன்றவற்றை அணிவதற்கு எனக்கே கூச்சமாக இருக்கும். அப்படியிருக்க இவற்றை அணிந்து திரையில் தோன்றுவதென்றால்...நினைத்துப்பார்க்கவே முடியாது.

கே:அப்படியென்றால் மொடர்ன் கரெக்டரில் நடிக்கவே மாட்டீர்களா?

ப:அப்படியில்லை. மிக நாகரீகமான முறையில் மொடர்ன் கரெக்டர்களைத் தெரிவு செய்து கவர்ச்சியுடன் கூடிய நடிப்பை வெளிப்படுத்தி நடிப்பேன்.

-ஷாம்

## ஸ்ரீ படத்தில் புதிய நடிகை

'காதல் மன்னன்', 'அமர்க்களம்' போன்ற படங்களைத் தயாரித்த வெங்கடேஸ்வராலயம் நிறுவனம் சார்பில் வி.சத்யநாராயணா, வி.சுதிர் குமார், வி.சுமந்த்குமார், வி.அன்ன பூர்ணா இணைந்து தயாரிக்கும் படம் 'ஸ்ரீ'. இதில் சூர்யா கதாநாயகனாக நடிக்கிறார். இவருடன் ஜோடி சேர்ப வர்கள் புதுமுகம் ஸ்ருதிகா, காயத்ரி ஜெயராம். காயத்ரி ஜெயராமுக்கு பாலே நடனம் கற்றுக் கொடுக்கும் ஆசிரியை வேடமாம். உண்மையிலேயே காயத்ரி ஜெயராம் பாலே நடனத்தைக் கற்றுத் தேர்ந்திருப்பதனால் அவர் சம்பந்தப்பட்ட பாடல் காட்சிகள் வித்தியாசமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாம்.



மும்தாஜ்

சென்ற இதழில் மும்தாஜ் 'குயின்' படத்தின் கதாநாயகியாக நடிப்பதாகவும் இப்படம் மூலம் தனக்கு பெண்களின் ஆதரவு கிடைக்குமென்று எதிர்பார்ப்பதாகவும் கூறினார் அல்லவா! ஒரு பக்கம் இவர் இப்படிக் கூறிக்கொண்டிருக்க மறுபக்கத்தில் நடந்திருப்பதுவோ அவரது கருத்துக்கு மாறுபட்டிருக்கின்றது. 'குயின்' படம் உண்மையிலேயே நேரடித் தமிழ் படம் இல்லையாம். இப்போது கோடம்பாக்கத்தின் காதல் வைரசாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் மும்தாஜ் முன்னொரு காலத்தில் 'மலபார் பொலீஸ்' படத்தில் மட்டும் நடித்துக் கொண்டிருந்த போது,வேறு மொழிப் படங்களில் வாய்ப்புத் தேடினார். அப்படி வந்ததுதான் 'பூந்'(Bhoond) படம். சந்தோஷத்தோடு ஒப்புக் கொண்டார். ஆனால் கதையைக் கேட்டவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. காரணம் அந்தப் படத்தின் கதை கேட்பதற்கு நன்றாய் இருந்தாலும் காட்சிகள் பயங்கர கவர்ச்சியாகப் படமாக்கப்பட இருந்ததாம். ஆனால் படத்தின் தயாரிப்பாளரோ, ''தமிழ்நாட்டில் பெரிய நடிகையா வரணும்னு தான் அங்க போன, ஆனா இப்ப என்னாச்சு. பேசாம சம்பாதிக்கிற வழியைப்பாரு'' என்று ஆசை காட்டி 'பூந்' படத்தில் நடிக்க வைத்தார். பொதுவாக இந்திப்படங்களின் படப்பிடிப்பு பூஜை தொடங்கி படப்பிடிப்பு முடிய இரண்டு வருடங்கள் ஆகிவிடும். சாவகாசமாக இந்தப் படத்தில் நடித்து முடித்து விட்டு தமிழ்நாட்டிற்கு வந்தவர் விஜய்யுடன் ஒரு பாடலுக்கு ஆடினார்.

அம்மணியை அதிஷ்டதேவதை அரவணைக்கத் தொடங்கினாள். எகிறிவிட்டது மார்க்கெட். இப்போது தமிழ் ரசிகர்களிடையே மும்தாஜ் காய்ச்சல் பரவியிருக்கிறது. இதனால் அம்மணிக்கும் ஏறுமுகம்.

'பூந்' படத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட பிரபல தமிழ் டப்பிங் படத்தயாரிப்பாளர் ஷங்கர், அதனை தனக்குச் சாதகமாக பயன்படுத்த எண்ணினார். மும்பைக்கு சென்று தமிழில் வெளியிடும் உரிமையை வாங்கினார். தமிழில் வசனப் பதிவு, பாடல் பதிவு செய்யப்பட்டது. பூந்திற்கு 'குயின்' என்று நாகரீகமாகப் பெயர் வைத்த ஷங்கர் ''இந்தியாவின் கிளியோபட்ரா மும்தாஜ் நடிக்கும்.... '' என்ற வாசகங்களோடு வெளியிடும் வேலையில் மும்முரமாக இறங்கினார். இந்த விஷயம் மும்தாஜிற்குத் தெரியவந்ததும் அதிர்ச்சியடைந்தவராக ஷங்கரைச் சந்தித்தார். இப்போது தான் முன்னணியில் இருக்கும் தருணத்தில் இந்தப் படம் தனது இமேஜைக் குறைத்துவிடும் என்று பயந்தாராம்.

ஷங்கர் மசியாததினால் தானே தமிழில் வெளியிடுவதாகவும் ஷங்கருக்கு பெரிய தொகையைக் கொடுத்து விடுவதாகவும் பேரம் பேசினார். ஆனால் ஷங்கர் விட்டுக் கொடுக்காததினால் மும்தாஜ் 'பூந்' படத்தைத் தயாரித்த இனியாத் என்றழைக்கப்படும் ஐ. எச் பாபுவையும் வேறு சில முக்கியமானவர்களையும் சென்னைக்கு வரவழைத்து விஷயத்தைச் சொல்லியிருக்கிறார். அவர்களும் ஷங்கரைச் சந்தித்து ,

'பூந்' படத்தை மேடமே தமிழில் வெளியிட விரும்புகிறார்கள். டப்பிங் செய்வதை விட ரீமேக் செய்யுங்கள். படத்தை நீங்களே தயாரியுங்கள் அவங்க கால்ஷீட் தருவாங்க'' என்று கூறியிருக்கிறார்கள்.

ஆனால் ஷங்கர் சம்மதிக்கவில்லையாம். இது பற்றி ஷங்கரை விசாரித்த போது,

''இந்தப் படத்தின் உரிமையை எட்டே முக்கால் லட்சத்திற்கு வாங்கினேன். வசனப்பதிவு, பாடல் பதிவு, போஸ்டர் டிசைன் என்று மொத்தம் 15 லட்சமாகி விட்டது.ஏற்பட்ட செலவுடன் மேலதிகமாக 5 லட்சம் தருவதாக மும்தாஜ் தரப்பினர் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இது எனக்கு இரட்டை லாபம்தான்.

பணமும் கிடைப்பதோடு மும்தாஜின் நட்பும் கிடைக்கும். ஆனால் என்ன செய்வது படத்தை முழுவதும் விநியோகம் செய்து விட்டேன். விநியோகஸ்தர்களுடன் ஒப்பந்தத் திலும் கைச்சாத்திட்டு விட்டேன். அதனால் தான் மும்தாஜின் வேண்டுகோளையும் மீறி 'குயின்' படத்தை ரிலீஸ் செய்யப்போகிறோம் என்று தன்நிலை வாதத்தை முன்வைக்கிறார் ஷங்கர்.

இது இப்படியிருக்க, மும்தாஜின் பெயரிலேயே உருவாகும் அடிதடிப்படத்தின் டைரக்டர் நடிகைக்கு கொலை மிரட்டல் விடுத்திருக் கிறாராம். காரணம், அந்தப் படத்தில் நடிப்பதற்கு ஒப்புக் கொண்ட மும்தாஜ் டைரக்டரின் பெயரைக் கேட்டதும் நடிக்க மறுத்து விட்டாராம். அதனால் தான் இந்த மிரட்டலாம்.

ஒரு பக்கம் 'குயின்' படம், மறுபக்கம் கொலை மிரட்டல் என முழிபிதுங்கிப் போயிருக்கிறார் மும்தாஜ்.

## குயின் படம் தந்த அதிர்ச்சி மறுபக்கம் கொலை மிரட்டல்

## முழி பிதுங்குகிறார் மும்தாஜ்

## பெண்கள் கூட்டணி ஜெயிக்குமா இனி!

தேன் மொழி, இந்துமதி, குஷ்பு, ரோஜாவென்று பெண்களின் கூட்டணியுடன் மீண்டும் களமிறங்கி இருக்கிறார் ஆபாவாணன்.இம்முறை அவர் கையில் எடுத்துள்ள படம் 'இரண்டு பேர்'. படத்தின் கதையை இந்துமதி எழுத ஆபாவாணனின் மனைவி தேன்மொழி தயாரிக்கின்றார். கதாநாயகனாக ராம்கி நடிக்க அவர் மனைவியாக குஷ்புவும் பழி வாங்கும் வெறி கொண்ட பெண்ணாக ரோஜாவும் நடிக்கிறார்கள். ஆரவாரமில்லாமல் அரைக் கால்வாசிப் படத்தை முடித்துவிட்ட இந்தப் பெண்கள் கூட்டணி ஜெயிக்குமா இனி..!

'அய்யப்பா நீ தான் மெய்யப்பா' பக்திமணம் கமழும் மற்றொரு அய்யப்ப படமாக தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளில் தயாராகின்றது.வி.எஸ்.என். புரொடக்ஷன் தயாரிக்கின்றது.

ரெட் படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் அஜித் அடுத்து நடிக்கும் 'வாமன்' படத்தில் இரட்டைவேடங்களில் நடிக்கிறார். ஜோடிகள் ரீமா சென், ஸ்நேகா.

**

நகைச்சுவை நடிகர் வையாபுரி ''வீட்டோட மாப்பிள்ளை''க்குப் பிறகு தனது சம்பளத்தை உயர்த்தி விட்டார்.

**

இராமநாராயணனின் இயக்கத்தில் 'கோட்டை மாரியம்மன்' என்ற பக்தி ப்படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் தேவயானி.

**

கன்னட முன்னணி லிவிங்ஸ்டனின் நடிகை பார்வதி ஷில்பா என்ற பெயரில் படமொன்றில் அறிமுகமாகிறார்.

**



அஜய்—ரஞ்சனா
படம்—'லவ் மேரேஜ்'

புதிய ஜோடி. அஜய்—ரஞ்சனா நடிப்பில் உருவான 'லவ் மேரேஜ்' விரைவில் வெளியாகப்போகின்றது.


திவ்யா உன்னி

# திவ்யா உன்னியின் கிளாமர் தத்துவம்

''ஓவர் கிளாமராக நடிக்கிறேனா. இதை நான் ஒப்புக் கொள்ளவே மாட்டேன்'' உண்மையைச் சொல்வதானால் அப்படி நடிக்க வேண்டிய அவசியமோ அவசரமோ எனக்கு இல்லை. இப்படி மறுப்பறிக்கை விடுத்திருப்பவர் யார் தெரியுமா? நடிகை திவ்யா உன்னி தான்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

''நான் மலையாளத்தில் நம்பர்வன் நடிகை. அங்கு நான் ஏற்றதெல்லாம் குடும்பப்பாங்கான வேடங்கள். மொடர்ன் டிரஸ்களைக் கிளாமர் டிரஸ்கள் என்று சொன்னால் இப்போதைய கல்லூரிப் பெண்களில் பெரும்பாலானவர்கள் மொடர்னாகத்தானே டிரஸ் செய்கிறார்கள்.

மலையாளத்தில் கிளாமர், ஹோம்லி என்று பிரித்துப் பார்ப்பதில்லை. ஆனால் தமிழில் கிளாமர் என்றால் வேறு அர்த்தத்துடன் அல்லவா பார்க்கிறார்கள். அதனால் கிளாமரின் கருத்தும் பார்ப்பவர்களின் எண்ணத்தைப் பொறுத்து அமைகிறது என்றே நினைக்கிறேன்''.

மனதைத் திருடி விட்டாய் படத்தைச் சென்ஸாருக்கு அனுப்பினால் காட்சிகளை வெட்டியதில் சென்ஸார் குழுவினரின் கையே வலித்து விட்டதாம். காட்சிக்குக்காட்சி நாயகியை கைக்குட்டையளவு துணியோடு அலைய விட்டிருக்கிறார்களாம். இது போலவே விவேக் தோன்றும் காட்சி ஒன்றிலும் சென்ஸார் கை வைக்க வேண்டியிருந்ததாம்.

# ஆளவந்தானா! அழிக்க வந்தானா!!

ரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் 'ஆளவந்தான்' படத்தின் பாடல்கள் வெளியிடப்பட்டுள்ளதோடு படமும் சென்ஸாருக்குப் போய் வந்திருக்கின்றது.

படம் முழுவதும் கமல் இரத்த வெறிகொண்டு கத்தியுடன் வருபவராகக் கதை அமைவதினால் சென்ஸார் பல இடங்களில் காட்சிகளை வெட்டிப் போட்டு விடுவார்கள். ஆளவந்தான் என்று பெயர் வைத்து விட்டு படம் முழுதும் அழிக்க வந்தானாக மாற்றியிருக்கிறீர்கள் என்று கேட்பார்கள் என்று எதிர்பார்த்தாராம். ஆனால் ஓரிரு காட்சிகள் சென்ஸார் செய்ததோடு தப்பித்திருக்கின்றது 'ஆளவந்தான்'. படம் எப்படியும் தீபாவளிப் பரிசாக ரசிகர்களுக்குக் கிடைக்குமாம்.


ஜோதிகா

# தன்னந்தனியே ஒரு ரோஜா

பளபளக்கும் பத்திரிகை சகிதம் ''த்ரீ ரோஸஸ்'' படத்திற்காகத் தடல்புடலாக விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. பத்திரிகையின் ஸ்டில்களில் ரம்பா, லைலாவுடன் மிக நெருக்கமாக ஜொலித்துக் கொண்டிருக்க, மூன்றாவது ரோஜாவான ஜோதிகா மட்டும் தனி ஆவர்த்தனமாகத் தெரிந்தார். மூன்று ரோஜாக்களில் ஒரு ரோஜா மட்டும் விலகி இருந்ததற்கான காரணத்தைத் தேடினால், சொந்தப் படம் என்பதினால் லைலா, ஜோதிகா இருவரிடமும் ரம்பாவே நேரடியாகப் பேசி நடிக்கக் கேட்டிருந்தார். ஆரம்பத்தில் இருவரும் சம்மதித்திருக்கின்றனர்.

அதை நம்பி பட வேலைகளை ஆரம்பித்துவிட்ட ரம்பா அண்ணன் வாசுவை அனுப்பி கால்ஷீட் கேட்டிருந்தார். தனது சம்பளத்தைக் கூட்டிக் கேட்டிருக்கிறார் ஜோதிகா. வாசு ரம்பா விடம் வந்து விஷயத்தைக் கூற, கோபமடைந்த ரம்பா நம்ம கிட்டேயே வாலாட்டுகிறாரா! என்று எகிற அண்ணன் வாசு அட்வைஸ் செய்திருக்கிறார். அதன் பிறகு தான் இறங்கி வந்து ஜோதிகாவின் சம்பள விஷயத்தில் அட்ஜஸ்ட் செய்தாராம் ரம்பா. இடைப்பட்ட நாளில் போட்டோ செஷன் நடத்தப்பட்டது. ஜோதிகா அதில் கலந்துகொள்ளவில்லை.

இப்போது சம்பளச் சிக்கல் தீர்ந்து விட்டதனால் ஜோதிகா 'த்ரீ ரோஸஸ்'' படத்திற்குக் கால்ஷீட் வழங்கியிருக்கிறார். அதன் பின்னரே ஜோதிகாவைத் தனியாக படம் பிடித்து இணைத்திருக்கின்றனர். அதனால் தான் இந்த ரோஜா தனித்துத் தெரிந்திருக்கின்றது.


அஜித்குமார்

# குளிர்ச்சிக் காதலே இந்த வாசம்

'நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்' இந்த நீண்ட தலைப்புக் கொண்ட படத்தில் லிவிங்ஸ்டன், இஷாக் உஷைனி இணைந்து நடிக்கிறார்கள். நாயகியாக கன்னட நடிகை அறிமுகமாகிறார். இவர்களுடன் விசு, பாண்டு, சண்முக சுந்தரம், சந்துரு, அல்போன்ஸா ஆகியோரும் நடிப்பில் கூட்டணி சேர்க்கின்றனர்.

அமர்க்களத்திற்குப் பின்னர் தீனா, சிட்டிசன் என்று அடிதடிப் படங்களாகத் தந்து கொண்டிருந்தார் அஜித். சமீபத்தில் வெளியான 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தில் காதல் ஹீரோவாக நடித்திருந்தார். ரொமான்ட்டிக்காக நடிப்பதற்கு மற்ற ஹீரோக்கள் இருக்கிறார்கள். வித்தியாசமாகச் செய்ய வேண்டும் என்பதற்காகவே சிட்டிசன் படத்தைத் தந்தேன். என்று பரபரப்பாக பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தவர் தானும் ரொமான்ட்டிக் ஹீரோவாக நடித்தது ஏன் என்று கேட்டால், ''பூவெல்லாம் உன் வாசம்'' படத்தைப் பார்த்த அனைவரும் கேட்கும் கேள்விதான் இது. அதிரடியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த ரசிகர்களுக்கு ''இந்தாப்பா மனசைக் கொஞ்சம் குளிர்ச்சி பண்ணிக்குங்க'' என்று கொடுத்த படம் தான் ''பூவெல்லாம் உன் வாசம்'' இந்த மாதிரியான படங்கள் என் மனசையும் இலேசாக்குகிறது'' என்கிறார்.


கமல்ஹாசன்—ரவீனா
படம்—'ஆளவந்தான்'


மோனல்

# முத்த எல்லை! மோனலுக்கு இல்லை!!

'பார்வை ஒன்றே போதுமே' படத்தில் அறிமுகமாகி கவர்ச்சிக் கதாநாயகியாக ஓரிரண்டு படங்களில் தலைகாட்டிக் கொண்டிருக்கிறார் மோனல். ''கவர்ச்சியை நம்பி களத்தில் இறங்கியிருக்கிறாரே கவர்ச்சி நிரந்தரமில்லையே'' என்று கேட்டால், ''முதலில் கிளாமர் கரெக்டர்களில் நடித்த ஆர்ட்டிஸ்டுகள் பின்னர் மெல்ல மெல்ல பெர்போமென்ஸ் ஓரியண்டட் கரெக்டரில் நடிக்க ஆரம்பித்தார்கள். இதனை மக்களும் ஏற்றுக் கொண்டார்கள். என்னுடைய திட்டமும் இதுதான். கிளாமருக்கு என்று ஒரு வரையறை இருக்கின்றது. அந்த வரையறையை நானும் தாண்டமாட்டேன்.

ஆனால் முத்தக்காட்சிகளில் நடிப்பதில் எனக்கு ஆட்சேபணையுமில்லை. கதைக்குத் தேவையாயின் அந்தக் காட்சியில் நடித்துத்தானே ஆகவேண்டும். முதலில் தமிழ்த்திரையுலகில் காலூன்ற வேண்டும். அதற்குப்பின்னர் கரெக்டரில் கவனம் செலுத்த முயற்சிப்பேன்'' என்று கூறுகிறார்.

'விவரமான ஆளு', 'என்னம்மா —கண்ணு', 'லூட்டி', 'லவ்லி' போன்ற படங்களைத் தயாரித்த எவர்கிரீன் மூவி இன்டர் நேசனல் நிறுவனம் தயாரிக்கும் படம். கதாநாயகனாக சத்யராஜ் நடிக்க அவருக்கு ஜோடியாக தேவயானி மும்தாஜ் நடிக்கிறார்கள். இவர்களுடன் விவேக், பிரதாப் போத்தன், வினுச்சக்கரவர்த்தி, செந்தில், பொன்னம்பலம், வையாபுரி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

மஜ்னுவின் காதலி நடிகையின் சம்பளம் முப்பது லகரமாம். முப்பத்தைந்தில் ஆரம்பித்து முப்பதில் முடித்துக் கொள்வாராம்.

ஒளிமயமான நடிகையின் சம்பளம் 65 லகரம். இதனைக் கேள்விப்பட்டதும் இப்போதைக்கு இது போதும். 'நந்தா' வரட்டும் அப்போ பாருங்கள் என்ரேட்டை'' என்று சவால் விட்டிருக்கிறார்.

**

கடல் படம் ஆர்ப்பரிக்காமல் அமைதியாக ஓடிக்கொண்டிருப்பதனால் டைரக்டர் உட்பட நாயகன் நடிகர்கள் அனைவரும் ஆடிப்போய்விட்டார்கள். 'தோஸ்த்' நாயகர் தன் கரெக்டரை சீர்தூக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறாராம். (எத்தனை நாளுக்கு தான் அரைச்ச மாவையே அரைச்சுக் கொண்டிருப்பீங்க.. கதையைக் கொஞ்சம் கவனிங்கப்பா...)

**

'வாளிப்பான' நடிகைக்குப் படங்கள் ஏதும் கைவசம் இல்லை. ஆனால் மளமளவென சொத்துக் குவிப்பில் ஈடுபட்டுள்ளார். வளசரவாக்கம் ஏரியாவில் காம்ப்ளெக்ஸ் ஒன்றைக்கட்டி முடித்துவிட்டாராம்.

**

சினிமா நடிகைகளோ ரசிகர் மன்றங்கள் என்றால் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் 'ஆலயம்', 'கோபி', 'செம்பருத்தி' தொடர்களில் நடித்த 'பூனைக்கண்' நடிகை புவனம் அரசியல்வாதிகள் ஸ்டைலில் தனது பிறந்த நாளை ரசிகர்களுடன் சேர்ந்து கொண்டாடி வருகிறாராம். அரசியலுக்கு வரும் ஆசையும் அம்மணிக்கு இருக்கிறதாம். அதற்கு அச்சாரம் தான் இந்த ரசிகர்களின் அரவணைப்பாம்.

**

இளைய தளபதிக்கு கிராமத்து டைரக்டரின் படங்களில் நடிப்பதற்கு ஆசையாம். 'லவ்' படத்தில் அந்த வாய்ப்பு வந்த போது சந்தோஷமாக ஏற்றுக் கொண்டாராம். ஆனால் படத்தில் தன்னை விட டைரக்டரின் வாரிசிற்கு முக்கியத்துவம் என்றதும் மெல்ல கழன்று கொண்டு விட்டாராம்.

**

வில்வித்தை நடிகரின் அடுத்தகுறி உலக அழகியான தத்துப்பிள்ளை தானாம். அரசாண்ட படத்தின் தொடக்க விழாவில் அம்மணியின் நெற்றியில் திலகமிட்டதிலிருந்தே நடிகர் மனப்பால் குடிக்க ஆரம்பித்துவிட்டாராம். இந்த உயரமான கிளி வில்வித்தை நடிகரின் வலையில் சிக்குமா..?

**

முன்னாள் முதல்வர் அம்மாவின் சேனல் விருத்திக்காக கோயில் கட்டிய 'பூ' நடிகை முழுமூச்சுடன் பணியாற்றி வருகிறார். சமீபத்தில் போயஸ் கார்டன் சென்று அம்மாவுடன் கலந்தாலோசனை செய்திருக்கிறார். இதனால் சேனல் முழு தும் 'பூ' நடிகையின் புராணம் பாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சூரியனின் பெயர் கொண்ட சேனலில் அம்மணியின் படங்கள் இருட்டடிப்புச் செய்யப் படுகின்றன.

**



# திரை மறைவில்

ஜூன், ஜூலை என்ற மாதங்களின் பெயரைக் கொண்டு உருவான படத்தின் நாயகியும் நாயகனும் நிஜத்திலும் நெருக்க மாகிவிட்டார்களாம். படம் வெளிவந்ததோ இல்லையோ அம்மணி வாழ்க்கையில் செட்டிலாகப் போகிறார்.

**

மார்க்கண்டேய நடிகருக்கும் அவரது வாரிசுக்கும் இடையில் மனத்தாங்கல் ஏற்பட்டுள்ளதாம்.

# ரூபெல்லா தடுப்பூசி அவசியம் தவறினால் விளைவு மோசம்

கே: எனக்கு வயது18(பெண்) இளம் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் MMR எனப்படும் ஒரு தடுப்பூசி போடவேண்டும் என்று சொல்கிறார்கள் என்னுடன் படிக்கும் பல பிள்ளைகளுக்கு இந்த MMR எனப்படும் தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது. ஆனால் எனக்கு இது போடப் படவில்லை. இதைப் போட்டுக் கொள்ளவேண்டியது அவசியமா? ஏன் இந்தத் தடுப்பூசிக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது?

ப: MMR எனப்படும் இந்தத் தடுப்பு ஊசி சின்னமுத்து, கூகைக்கட்டு, ரூபெல்லா எனப்படும் ஜேமன் சின்னமுத்து ஆகிய நோய்கள் ஏற்படுவதை தடுக்கும். (MMR தடுப்புசி =MUMPS, MEASLES, RUBELLA) பெண்கள் கருத்தரிக்கும் காலத்தில் ஜேர்மன் சின்னமுத்து (RUBELLA) எனப்படும் நோய் ஏற்பட்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குப் பார்வைக்குறைவு இருதயநோய், புத்திக்குறைவு, காதுகேட்பதில் குறைபாடு போன்ற பாரதூரமான விளைவுகள் ஏற்படக்கூடும். அத்துடன் சிலசமயம் குழந்தை வயிற்றிலே இறந்து விடவும் கூடும்.MMR எனப்படும் தடுப்பூசி பிற்காலத்தில் இவர்கள் தாயாகும் பொழுது பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதைத் தடுப்பதுடன் சின்னமுத்து, கூகைக்கட்டு போன்ற நோய்களிருந்தும் பாதுகாக்கிறது. எனவே ஒரு வயது கடந்த எல்லாப்பிள்ளைகளுக்கும் MMR என்ற தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள வேண்டும். ஒன்பது மாதத்தில் சின்னமுத்துக்கான தடுப்புசி கொடுக்கப்பட்டிருந்தால் அவர்களுக்குMMR தடுப்பூசி கொடுப்பதற்குப்பதிலாக MR தடுப்பூசி கொடுத்தால் போதுமானது. இது கூகைக் கட்டையும் ஜேமன் சின்ன முத்துவையும் தடுக்கும். இது மூன்று வயதில் கொடுக்கப்பட வேண்டும். 10 வயது கடந்த இளம் பெண்களுக்கு ஜேமன் சின்னமுத்தைத்தடுக்கும் Rubella தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். சிறுவயதில் MMR தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு இந்த Rubella தடுப்பூசி போடவேண்டியது அவசிய மில்லை. உங்களுக்கு MMR தடுப்பூசி போடப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தீர்கள். எனவே நீங்கள் Rubella தடுப்பூசி போடவேண்டியது அவசியமாகும்.

கே: எனக்கு 36 வயது (பெண்) கடந்த மூன்று வருடங்களாகக் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்தி வருகின்றேன். கடந்த மூன்று மாதங்களாக உடம்பு உளைவு இருந்ததால் வைத்தியர் ஒருவரிடம் காட்டினேன். அப்போது செய்யப்பட்ட பரிசோதனைகளில் எனது இரத்தத்தில் கொலஸ்ற்ரோலின் அளவு அதிகம் என்பது தெரியவந்தது. அதற்காக இப்பொழுது மருந்து பாவித்து வருகிறேன். இந்த மருந்துகளுடன் கருத்தடை மாத்திரை களைச் சேர்த்துப் பாவிப்பது பாதுகாப் பானதா? கருத்தடை மாத்திரைகள் பாவிப்பதால் பக்க விளைவுகள் ஏற்படமாட்டாதா?

ப: இரத்தத்தில் கொலஸ்ற்ரோலின் அளவு அதிகம் உள்ளவர்களும் உயர் குருதி அழுத்தம் உள்ளவர்களும் 35 வயது கடந்தவர்களும் கருத்தடை மாத்திரைகளைப் பாவிப்பதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. நீங்கள் வேறு கருத்தடை முறைகளைக் கையாள்வதே நல்லது.கருத்தடை மாத்திரைகளைப் பாவிப்பவர்களுக்கு பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டு அவை உடல்நிறை அதிகரித்தல், உயர்குருதி அழுத்தம், உடலுறவில் நாட்டம் குறைதல், தலையிடி, இரத்தத்தில் கொலஸ்ற்ரோலின் அளவு அதிகரித்தல், உடலில் இரத்தம் கட்டிபடுதல் போன்றனவாகும். Migraine எனப்படும் தலையிடி உள்ளவர்களும் மன நோய் (depression) உள்ளவர்களும் வலிப்பு நோய்க்கு மருந்து பாவிப்பவர்களும் கருத்தடை மாத்திரைகளைப் பாவிப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் 35 வயது கடந்தவராக இருப்பதுடன் உங்கள் கொலஸ்ற்ரோலின் அளவும் அதிகமாக இருப்பதால் நீங்கள் கருத்தடை மாத்திரைகள் பாவிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 36/2, பிரெட்றிகா வீதி,
> கொழும்பு — 06.

> கண் பார்வை குறைவா? குணப்படுத்த மருந்து கிடையாது. 'கொன்ராக்ற் லென்ஸ்' நிவாரணி

கே: எனக்கு 24 வயது (ஆண்). எனக்கு 15 வயதில் இருந்து short sight (துரப்பார்வைக் குறைவு) இருந்து வருகிறது. அப்போதிலிருந்து கண்ணாடி பாவித்து வருகிறேன்.ஒரு கண் ணுக்கு —10 என்ற வலு வும் மற்றக் கண்ணுக்கு —9.5 என்ற வலுவும் உள்ள கண்ணா டியை பாவித்து வருகிறேன். இதனால் கண்ணாடி மொத்தமாக இருக்கிறது. (வலு கூடியதால்). நான் மொத்தமான பிளாஸ்டிக் கண்ணாடி அணிவதால் எல்லோரும் என்னைப் பகிடி செய்கிறார்கள். இதனை தாங்கிக்கொள்வது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஏதாவது மருந்து மூலம் கண்பார்வையை சரிப்படுத்த முடியுமா? இல்லாவிட்டால் வேறு ஏதாவது சிகிச்சை மூலம் மெல்லிய கண்ணாடி போடக் கூடியதாகச் செய்ய முடியுமா? இதற்கான உங்கள் ஆலோசனையை எதிர்பார்கிறேன்.

ப: உங்களுடைய short sight ஐ சரிப்படுத்துவதற்கு நீங்கள் வலு கூடிய கண்ணாடியைப் பாவிக்க வேண்டி இருக்கிறது. வலுக் கூடிய கண்ணாடிகள் மொத்தமானவை. இந்தப் பார்வைக் குறைபாட்டை மருந்துகள் மூலம் குணப்படுத்த முடியாது. உங்களுக்கு மொத்தமான கண்ணாடியை அணிவது பிரச்சினையாக இருந்தால் நீங்கள் கொன்ராக்ற் லென்ஸ் என்று சொல்லப்படுகின்ற கண் இமைக்குள்ளேயே பொருத்தக்கூடிய கண்ணாடிகளைப் பாவிக்கலாம். இதை நீங்கள் அணிந்திருக்கும் பொழுது, நீங்கள் இதை அணிந்திருப்பது பிறருக்குத் தெரியாது. நீங்கள் ஒரு கண் வைத்திய நிபுணரைச் சந்தித்து அவரின் அலோசனைப்படி இதனை பயன்படுத்தி வரலாம்.

> இரத்தத்தில் கொலஸ்ற்றோல், உயர் குருதி அழுத்தம் உள்ள 35 வயதுக்கு மேற்பட்டோருக்கு கருத்தடை மாத்திரைகள் வேண்டாம்

கே: எனது வயது 36 (பெண்). எனது இரத்த இனம் B+ எனது கணவரின் இரத்த இனம் A+ ஆனால் எமக்குப் பிறந்திருக்கும் மகனின் இரத்த இனம் O+ ஆக இருக்கிறது. இது ஒரு சாத்தியமான நிகழ்வா? இல்லையா யின் தவறு எங்கே நடந்திருக்கக் கூடும். இரத்தப்பரிசோதனையில் ஏதாவது தவறு நடந்திருக்க முடியுமா?

ப: பெற்றோர்களில் ஒருவர் A+ இரத்தவகை உடையவராகவும் மற்றவர் B+ இரத்தவகை உடையவராகவும் இருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தையின் இரத்த வகை A+ ஆகவோ B+ ஆகவோ AB+ ஆகவோ அல்லது O+ ஆகவோ இருக்கமுடியும். எனவே உங்களுடைய விடயத்தில் எந்த விதமான தவறும் நடந்திருக்க இடமில்லை.

பின்வரும் அட்டவணை மூலம் எந்த எந்த இரத்தவகை உள்ள பெற்றோர்களுக்கு எந்த எந்த இரத்தவகை உள்ள குழந்தைகள் பிறக்கலாம் என அறிந்து கொள்ளுங்கள்.

| பெற்றோர் | குழந்தைகளுக்கு இருக்கக் கூடிய குருதி வகைகள் |
|---|---|
| A x B | A, B, AB, O |
| O x O | O |
| A x A | A, O |
| B x B | B, O |
| AB x O | A, B |
| A x O | A, O |
| B x O | B, O |
| A x AB | AB, A |
| B x AB | B, AB |

நீதிமன்றங்களில் நடைபெறும் சில வழக்குகளில் ஒரு பிள்ளை யாருடை யது என்பதில் சந்தேகம் ஏற்பட்டால் அதைத் தீர்த்துக் கொள்ள மேற்குறிப் பிட்ட முறை சிலசமயம் உதவியாக இருக்கிறது.

# ராசி பலன்

**21.10.2001 முதல் 27.10.2001 வரை**

**பொ.சந்திரன்.**

### மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

செவ்வாய், சூரியன், ராகு, கேது போன்ற கிரகங்களால் நன்மையுண்டு. எடுத்த காரியம் எத்தடைவரினும் செய்து முடிக்கலாம். பணத் தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். வீடு, வாகனங்களால் செலவு வரலாம். மன அமைதி இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில்துறையில் போதிய முன்னேற்றம் இருக்காது.

### இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2

குரு, புதன், சுக்கிரன், செவ்வாய், கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். நினைத்த காரியத்தை இலகுவில் செய்து முடிக்கலாம். வீடு, வாகனங்கள் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில் துறை முன்னேறும். நண்பர்களால் பணம் விரயமாகலாம். தெய்வ அருள்கிட்டும்.

### மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய் ஆகிய கிரகங்களால் நன்மையுண்டு. பணம் தட்டுப் படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த செயலை இலகுவில் வெற்றிகரமாகச் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் ஆரோக்கியம் நன்று. பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் சில தடைகள் வரினும் முன்னேற்றம் இருக்கும். நண்பர்களால் சில பிரச்சினை வரவாய்ப்பு உண்டு.

### கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

சூரியன், சனி, ராகு, கேது ஆகிய கிரகங்களால் நன்மை உண்டாகும். புதனால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க கால தாமதமாகும். பிரயாண வாய்ப்புண்டு. தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில் துறை சிறப்படையும். நண்பர்கள் விசுவாசமாக இருக்க மாட்டார்கள்.

### சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1

புதன், சந்திரன், குரு போன்ற கிரகங்களால் நன்மை உண்டாகும். சூரியன், செவ்வாய், சனி, ராகு ஆகிய கிரகங்களால் மத்திம பலனை எதிர் பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்த லாம். நினைத்த செயலைச் செய்து முடிப்பீர்கள். தேக ஆரோக் கியம் நன்றாக இருக்கும். தொழில்துறையில் சில தடைகள் வரவாய்ப்புண்டு.

### கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

புதன், சுக்கிரன், சனி போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். குரு, ராகு போன்ற கிரகங்களால் மத்திம பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும், கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்காது. எடுத்த கருமத்தை இலகுவில் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணவாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் சிறப்புண்டு.

### துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

சூரியன், குரு, ராகு, கேது போன்ற கிரகங்களால் நன்மை உண்டாகும். புதனால் மத்திம பலனை எதிர் பார்க்கலாம். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த கருமத்தை கால தாமதமாகச் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில்துறையில் சில பின்னடைவு வரலாம்.

### விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை

செவ்வாய், புதன், சுக்கிரன் போன்ற கிரகங்களால் நன்மையுண்டாகும். சூரியன், ராகு போன்ற கிரகங்களால் மத்திமபலனை எதிர்பார்க்கலாம். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த செயலைச் சிரமப்பட்டே செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் சிறப்படையும்.

### தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.

குரு, புதன், சுக்கிரன், சூரியன் ஆகிய கிரகங்களால் நன்மையுண்டு. சனியால் மத்திம பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி குறையலாம். எடுத்த செயலைச் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்புண்டு, பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கிம் சிறிது பாதிக்கலாம். தொழில் முன்னேற்றம் உண்டு. தெய்வ அருள் கிட்டும்.

### மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.

புதன், சுக்கிரன், சூரியன், ராகு போன்ற கிரகங்களால் நன்மையுண்டு. செவ்வாய், கேது போன்ற கிரகங்களால் மட்டுப்படுத்தப்பட்ட பலனை எதிர்பார்க்கலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். மன அமைதி இருக்கும். வீடு, வாகனங்களால் லாபம் இருக்கும். தேக ஆரோக்கியம் நன்று. தொழில்துறையில் மெதுவான முன்னேற்றம் இருக்கும்.

### கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

குரு, சூரியன், கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாயால் ஓர் அளவு நன்மை உண்டு. பணம் இருக்கும், கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமத்தை இலகுவில் செய்து முடிக்கலாம். திருமண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தேக ஆரோக்கியம் உண்டு. தொழில்துறை முன்னேறும். தெய்வ அனுக்கிரகம் கிட்டும்.

### மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

புதன், சுக்கிரன், சனியால் நன்மையுண்டு. குரு, கேது, செவ்வாய் போன்ற கிரகங்களால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமங்கள் தாமதமானாலும் நிறைவேறும். வீடு, வாகனங்கள் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் சிறு பிரச்சினை வந்தாலும் முன்னேற்றம் உண்டு. பெரியோரின் ஆசீர்வாதம் கிடைக்கும்.

# அத்துமீறிய சுதந்திரமா பெண்கள் கோருவது?



பெண்களுக்கு உள்ள பிரச்சினை குறித்து பேசினால் போதும், ''ஓ... நீங்கள் என்ன பெண்ணியம் பேசுகிறீர்களா?'' என்று கேட்கிறார்கள்.

பெண்ணியம் என்றால் என்ன? பெண்நிலைவாதிகள் யார்? போன்ற கேள்விகளுக்குச் சரியான பதில் கூறுவது கடினம். பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினை ஒன்றைத் தீர்க்க ஒருவர் முற்பட்டால் அவருக்கு பெண்நிலைவாதி என்று முத்திரை குத்தி அவரை சமூகத்திலிருந்து பிரித்துப் பார்ப்பது தவறு.

பெண்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களின் வாழ்க்கைக்கு வளம் சேர்க்க விரும்பும் சில பெண்களை சமுதாயம் தவறாகப் பார்க்கிறது.

பெண்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்களை எமது சமூகம் பல்வேறு கோணங்களில் பார்க்கிறது.

பெண்கள் தொடர்பான அமைப்புகள் உண்மையில் பெண்களுக்கான அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றனவா? முன்பை விட பெண்களின் கல்வி மட்டம் தற்பொழுது உயர்ந்திருக்கிறது. அவர்களின் சிந்தனை, செயற்பாடுகள் என்பன உயர்ந்திருக்கின்றன. இவ்வாறு சமூகவியல் ஆய்வாளர்கள் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இதற்கு நேர்மாறான கருத்துக்களும் எம்மிடையே இருக்கத்தான் செய்கின்றன. 'பெண்கள் அமைப்பு' என்றாலே சிலருக்கு அலர்ஜி. பெண்கள் அமைப்புகள் கேட்பது அத்துமீறிய சுதந்திரம். இதனால் சமூகம் சீர்கெட்டுப் போகும். இவ்வாறு சீறி எழுகிறார்கள் எம்மவரில் சிலர்.

''பெண்களுக்கென்று அரசாங்கம் தனியாகப் பணம் ஒதுக்க வேண்டிய அவசியமில்லை. ஆண் — பெண் சமம் என்றால் ஏன் பெண்களுக்குத் தனியாகப் பணம்? சமூகத் தேவைகளுக்காக அரசாங்கம் பணம் ஒதுக்கட்டும். அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வது அவரவர் கைகளில் இருக்கிற கெட்டித்தனம்.'' என்பது இவர்களுடைய வாதம்—

இக்கருத்துக்களுடன் உடன்படாதவர்கள், ''பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். அவர்களின் மேம்பாட்டிற்காக விசேட ஒதுக்கீடுகள் செய்யப்படுவது அவசியம்'' என்று கூறுகிறார்கள்.

கலை, இலக்கியப் படைப்புகளிலும் இந்த முரண்பாடுகள் காணப்படுகின்றன.

கலை இலக்கியப் படைப்பு ஒன்று படைப்பாளியின் பெயர் இல்லாமல் முன் வைக்கப்பட்டால் அதன் படைப்பாளி ஆணா, பெண்ணா என்று அறிய முடியுமா? அப்படியே அறிந்து விட்டாலும் படைப்பாளி ஒரு பெண் என்பதால் அவருக்கு விசேட சலுகைகள் கொடுக்க வேண்டுமா? போன்ற வினாக்கள் இன்று எழுப்பப்படுகின்றன.

பெயரற்ற ஒரு படைப்பின் படைப்பாளி ஆணா, பெண்ணா என்று அறிய 'முடியும்' என்பவர்களும் அறிய 'முடியாது' என்பவர்களும் உள்ளனர்.

ஆனால், படைப்பாளி பெண் என்ற காரணத்திற்காக விசேட சலுகைகள் தேவையில்லை. எமது படைப்புகளைக் கலைக்கண்ணோடு பாருங்கள் அது போதும் என இவர்கள் வாதிடுகின்றார்கள்.

பெண்கள் பல விதமான இன்னல்களுக்கு மத்தியில் கலை, இலக்கியங்களைப் படைத்தளிக்கிறார்கள்.

ஆண்கள் அப்படியல்ல தமக்குத் தேவையானவற்றை உடனடியாகவே நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

நல்ல இலக்கியப் படைப்புகளை நான் படைக்க வேண்டும் என்றால் 'எனக்கு ஒரு மனைவி வேண்டும்' (I want a wife) என்ற ஆங்கிலக் கவிதையை நினைவு கூருகிறார்கள். (இக் கவிதையை எழுதியவர் ஒரு பெண் கவிஞர்)

இவ்வாறு பலவகையான முரண்பாடுகள் பெண்கள் தொடர்பாகக் காணப்படுகின்றன. இவற்றை மீறிப் பெண்கள் தமக்குத் தேவையானவற்றை மற்றும் தாம் நேசிக்கும் சுதந்திரத்தைத் தேடிப் போக வேண்டியுள்ளது.

பெண்ணியம் சரியா, தவறா எனப் பட்டிமன்றம் நடத்த நேரம் இல்லை. பெண்கள் கற்களைப் போல ஒரே இடத்தில் இறுகி நிற்கக் கூடாது. நதி போல ஓடினால் தான் தேடல் அதிகரிக்கும். நதி பாயும் போது கற்பாறைகளில் மோதுகிறது. அப்போது அந்த நீர் சுத்தமாக்கப்படுகிறது.




# திருமணம் என்ற கூட்டணி

''என் கணவரின் பிறந்த நாளில் அவருக்குப் பிடித்தமான உணவுகளைச் சமைத்துக் கொடுத்தேன். அவரை ஸ்மார்ட்டாகக் காட்டக் கூடிய ஷேர்ட் வாங்கிக் கொடுத்தேன். எனது பிறந்த நாளைத்தான் அவர் மறந்தே போய் விட்டார்.

இவ்வாறு பல மனைவிமார் புலம்புவது உண்டு. திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான கூட்டணி. அதில் ஒருவர் பிறந்த நாட்களையும், திருமணத் திகதியையும் நினைவு வைத்திருக்கிறார். மற்றவர் மறந்து போகிறார்.



இருவரும் ஒரே மாதிரி இருந்து விட்டால் சிலவேளை சுவாரஷ்யம் இல்லாமல் போய் விடும். ஒருவர் தனியாக இருந்து பரிபூரணம் அடைய முடியும் என்றால் இன்னொருவருடன் இணையத் தேவையில்லை.

இதனால் தான் திருமணம் ஒரு கூட்டணி என்று கூறப்படுகிறது. ஒருவரிடம் இல்லாத திறமை அல்லது சாதுரியம் மற்றவரிடம் இருக்கிறது. இருவரும் ஒருவர் மற்றவரின் குறைகளை உணர்ந்து, அனுசரித்து, உடன்பட்டு வாழ வேண்டும். அதுவே குடும்ப வாழ்க்கை எனப்படுகிறது.

ஆணோ அல்லது பெண்ணோ தானாகவே குழந்தையை உருவாக்கிக் கொள்ள முடியும் என்றால் இருவரும் இணையத் தேவையில்லை.

இப்படித்தான் ஏனைய விடயங்களும்.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் பிறப்பிலேயே சில தகைமைகளும் தகைமையின்மைகளும் உள்ளன. அனைத்து அம்சங்களும் பொருந்திய ஒரு பூரண மனிதனை உலகிலே நாம் காண முடியாது.

சில சந்தர்ப்பங்களில் மனைவிமாரும் விசேட தினங்களை மறந்து போகிறார்கள். இதற்காகக் கணவன் — மனைவி சண்டை போடவா முடியும்?

இவை எல்லாம் சின்னச் சின்னப் பிரச்சினைகள்.

சிலர் அசட்டுத்தனமாக எதையும் மறப்பதில்லை. அது அவர்களின் சுபாவம்.

விசேட தினங்களை மறந்தாலும் எதிர் பாராமல் பரிசு கொடுப்பவர்கள் இருக்கிறார்கள். மற்றவர்களின் குணங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளுங்கள்!

சொர்க்கம் எப்போதும் நமது கைகளில் தான் இருக்கிறது.

# மாப்பிள்ளை பிடித்திருக்கிறதா பெண்ணே?



இளம் பெண் இருக்கும் வீடு பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தால் ஏன் என்று கேட்க வேண்டாம். இன்று அவளை பெண் பார்க்க வருகிறார்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

வீட்டை 'ஆர்கிடெக்ட்' போல அளவெடுப்பார் மாப்பிள்ளையின் அம்மா.

இரண்டு படுக்கை அறைகளுடன் நடுத்தர வீடு. சமீபத்தில் வெள்ளையடிக்காத சுவர்கள், பழைய அலுமாரி, வீட்டைக் கவர்ச்சியாகக் காட்ட இரண்டு சாடிப் பூக்கள். இவ்வாறு பெண்வீடு காட்சி தரும்.

பெண்ணைப் பார்க்கலாமா? மாப்பிள்ளையின் மூத்த சகோதரி கேட்பார்.

பட்டுச்சேலை உடுத்திப் பொட்டும் பூவுமாக கலாசாரப்படி குறிப்பிட்ட பெண் வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு கண்டிப்பாக மாப்பிள்ளை வீட்டாரிடம் இருக்கும்.

ஏற்கனவே பதினொரு பேர் வந்து போயிருப்பார்கள். வந்திருப்பது பன்னிரண்டாவது மாப்பிள்ளையாக இருப்பார்.

இந்த வரனாவது கைகூட வேண்டும். அப்பெண்ணின் திருமண ஆசைக்கு அல்ல.

அப்பாவுக்குப் பாரம் குறைய வேண்டும். தங்கைக்கு வழி திறக்க வேண்டும் என்பதற்காக!

பெண்ணின் கூந்தல் நீளத்தை அளப்பார் மாப்பிள்ளையின் அம்மா. பற்களின் அமைப்பை ஆராய்வார் அக்கா.

இரு பாதங்களையும் தடவிப் பார்ப்பார்கள். பெண்ணை நிற்க வைத்து மாப்பிள்ளைக்கு ஏற்ற உயரமா என்று அளவு எடுப்பார்கள். உன் சம்பளம் என்ன? நிரந்தர வேலையா? சமைக்கத் தெரியுமா? பணிவுடன் பண்பாக இருப்பாயா? இத்தகைய வினாக்கள் காதைத்துளைக்கும்.

சாதகமான பதில்களை எதிர்பார்த்து நேரடிப் பரீட்சை நிறைவு பெறும். அதன் பின்னர் மற்ற விடயங்கள் பற்றிப் பேச ஆரம்பிப்பார்கள்.

உனக்கு மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறதா என்று யாரும் கேட்க மாட்டார்கள். மாப்பிள்ளைக்கு பெண் பொருத்தமா என்று பார்ப்பார்கள். ஆனால் பெண்ணுக்கு மாப்பிள்ளை பொருத்தமா என்று பார்க்கப் பலர் மறந்து போகிறார்கள்.

# வீடு கட்டப் போகிறீர்களா? சிந்தித்துச் செயற்படுங்கள்

திருமணம் செய்து பார்; வீட்டைக் கட்டிப் பார், என்பார்கள். சிறுகச் சிறுகச் சேமித்த பணத்தில் பார்த்துப் பார்த்து வீடு கட்டுகிறோம்.

அந்த வீட்டின் குளியலறையும் மலசலகூடமும் முறையாக அமைக்கப்படல் வேண்டும் அல்லவா?

- குளியலறைக்கும் மலசலகூடத்திற்கும் சிலர் கடுமையான நிறங்களில் டைல்ஸ் போடுகிறார்கள். இவை அசுத்தங்களை மறைத்து சுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கக் கூடியன. எனவே இளநிற 'டைல்ஸ்' பொருத்தமானது. அதே நிறத்தில் ஏனைய உபகரணங்களையும் பொருத்தலாம்.
- குளியலறைக்கு 'மாபிள்கள்' பொருத்தமற்றவை. அவை இலகுவில் அழுக்காகி விடுகின்றன. ஈரப்பசை அதிக நேரம் தேக்கி வைக்கக் கூடியவை. எனவே 'செரமிக் டைல்ஸ்' தான் பொருத்தமானவை.
- குளியல் அறைச் சுவர்களுக்கு முழுமையாக 'டைல்ஸ்' பதிக்க வேண்டும். அல்லது தண்ணீர் பட்டு சுவர்கள் பழுதடைந்துவிடுகின்றன.



- மலசல கூடங்களுக்கும் குளியல் அறைகளுக்கும் சூரிய ஒளியும் காற்றும் உட்புகுவது மிக அவசியம். எனவே கண்ணாடி வைத்த சாய்வான யன்னல்களை அமைப்பது பொருத்தமாக இருக்கும்.

# படித்ததில் பிடித்தது

நீங்கள் இரவில் தூங்கும் போது பார்க்கமாட்டீர்கள் என்று கடிகாரம் இயங்காமல் இருப்பதில்லை. அது தன் கடமையைச் செய்து கொண்டே இருக்கிறது.

அதே போலத் தான் நாமும் நம் வேலையில் ஈடுபாட்டுடன் இருக்க வேண்டும். யார் பார்க்கிறார்கள், யார் இருக்கிறார்கள் என்று பார்த்து மற்றவர்களுக்குக் காட்டுவதற்காக எந்த ஒரு வேலையையும் செய்யத் தேவையில்லை.

எப்போதும் மனச்சாட்சிக்கு நேர்மையாக எமது கடமையைச் செய்ய வேண்டும்.

* * *

ஒவ்வொரு மனிதனும் நாற்பது வயதுக்கு மேல்தான் கடமையை உணர்கிறான். குடும்பம், மனைவி, குழந்தைகள் ஆகிய அனைத்து விடயங்கள் மீதும் அன்பும் விசுவாசமும் கொள்கிறான்.

வாழ்க்கையில் தனக்குத் துணையிருப்பவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்த ஆரம்பிக்கிறான். இதைத் தான் நம் முன்னோர்கள் ''நாற்பது வயதில் நாய்க் குணம்'' என்று கூறினார்கள்!

# சீரழிவும் அபிவிருத்தியும் ஆசிரியர் கைகளில்!

## திருந்தாவிட்டால் துரோகம் என்கிறார் ஆறுமுகம்

சமுதாய மறுமலர்ச்சிக்காக சேவையாற்ற வேண்டிய ஆசிரியர்கள் சமுதாய சீரழிவுக்கு உடந்தையாக இருப்பது பெரும் வேதனைக்குரிய விடயம். இவர்கள் தங்களைத் திருத்திக் கொள்ளா விட்டால் அது சமுதாயத்துக்குச் செய்யும் பெரும் துரோகம் ஆகும்.

இப்படி ஆறுமுகம் தொண்டமான் எச்சரிக்கை செய்தார்.

நுவரெலியா சினிசிட்டா அரங்கில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்ந்தினார்.

''மலையக கல்வி, கலாசார அபிவிருத்திக்காகச் சேவையாற்றிய அதிபர்களையும் ஆசிரியர்களையும் இன்று பாராட்டிப் பரிசு வழங்குகின்றோம். பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றோம். இந்த ஆசிரியர்களையும் அதிபர்களையும் பார்த்து நாம் பெருமைப்படுகின்றோம்.

''ஆசிரியர் தொழில் என்பது தனிப்பட்ட சம்பளத்துக்காக மட்டும் செய்யும் தொழில் அல்ல. சமுதாய வளர்ச்சிக்காக சுய நலமற்ற வகையில் ஆற்றும் ஒரு சேவை. இதனால் தான் மாதா, பிதா, குரு என்று கடவுளுக்கும் முன் ஒரு இடத்தில் குறிப்பிடுகிறோம்.

''இவ்வளவு பெருமைமிக்க ஆசிரியர் தொழிலை



மாணவிகளின் கலை நிகழ்ச்சி

இழிவுபடுத்தும் வகையில் சில ஆசிரியர்கள் செயல்படுவது வேதனைக்குரியது.



நுவரெலியா சினிசிட்டா அரங்கில் ஆறுமுகம் உரை நிகழ்த்துகிறார்

''நம்மவர்களுக்கு சேவையாற்ற நம்மவர்களை ஆசிரியராக்கினால் பயன் எதுவும் இல்லை. இவர்கள் என்ன செய்தார்கள்? தம்மையும் வளர்த்துக் கொள்ளவில்லை. தமது சமுதாயத்தையும் வளர்க்கவில்லை.

ஆசிரியர் தொழில் கிடைத்தவுடன் உயர் படிப்பை மறந்து விடுகின்றனர். ஆடம்பர வாழ்க்கையை எதிர்பார்க்க ஆரம்பித்து விடுகின்றனர். சில ஆசிரியர்கள் தம்மை இந்திய வம்சாவளியினர் என்றோ மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்றோ அடையாளம் காட்டிக் கொள்ளவும் வெட்கப்படுகின்றனர்.

''இப்படியானவர்களால் தான் இன்று மலையகக் கல்வியில் சீரழிவு ஏற்பட்டுள்ளது. உயர்வகுப்புகளுக்குப் படிப்பிக்கப் போதிய ஆசிரியர்கள் இல்லை. பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பும் இல்லை. எனவே எமது ஆசிரியர்கள் முன்னோடிகளாகவும், வழிகாட்டிகளாகவும் நடந்து கொள்ளவேண்டும்.''

இப்படிக் கூறினார் ஆறுமுகம் தொண்டமான்.

நுவரெலியா மாவட்டத்தில் சிறந்த சேவையாற்றிய அதிபர்களுக்கும். ஒய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் ஆறுமுகம் தொண்டமான் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விழாவுக்கு மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் தலைமை வகித்தார். அங்கு பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# கணினிக் கல்விக்கு கதவடைப்பு

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் கணினிப் பயிற்சி பெறுவதையும் உயர்கல்வி பெறுவதையும் தோட்ட அதிகாரிகள் விரும்புவதில்லைப் போலும். இதனாலேயே 15 வருடங்களுக்கு மேலாகப் பாடசாலைக்கு வழங்கி வந்த மின்சாரத் தொடர்பை தோட்டநிர்வாகம் துண்டித்து விட்டது. இதனை ஆட்சேபித்து தொழிலாளர்கள் போராட்டம் ஆரம்பித்துள்ளனர்.

மஸ்கெலியா பிரவுன்ஸ்விக் தோட்டத்தில் அமைந்துள்ளது புளும்பீல்ட் தமிழ் மகா வித்தியாலயம்.

ஆறுமுகம் தொண்டமான் இப்பாடசாலைக்கு பல லட்சம் ரூபா பெறுமதியான கணினி இயந்திரங்களையும் தொழில் பயிற்சி பெறுவதற்கான உபகரணங்களையும் வழங்கி இருந்தார்.

அத்துடன் ஆறுமுகம் தொண்டமானும் மத்திய மாகாண சபைத் தமிழ்க் கல்வி அமைச்சர் இராதாகிருஷ்ணனும் சமீபத்தில் புதிய கட்டடங்களையும் ஆய்வு கூடங்களையும் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தனர்.

இவை திறந்து வைக்கப்பட்டு இரண்டு வாரங்களில் தோட்ட நிர்வாகம் பாடசாலைக்கு வழங்கி வந்த மின்சாரத் தொடர்பை துண்டித்து விட்டது.

மேற்படி பாடசாலைக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் காணியில் உள்ள தேயிலைக் கொழுந்தைத் தோட்ட நிர்வாகமே பறித்து வருகிறது. இதற்கு மாற்றீடாகவே மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

இப்பாடசாலையில் 1,050 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். ஜி.சீ.ஈ. சாதாரண வகுப்பு வரை இங்கு வகுப்புகள் நடைபெறுகின்றன. இங்கு இப்பிரதேச தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டுமே கல்வி கற்கின்றனர். தொழிலாளர்களின் பிள்ளைகள் உயர்கல்வி பெறுவது தோட்ட நிர்வாகத்துக்கு விருப்பமில்லை என்றும் அதனாலேயே மின்சார வசதிகளைத் துண்டித்து விட்டது என்றும் தோட்டத் தொழிலாளர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

தோட்ட நிர்வாகத்தின் இந்த அடாவடித் தனத்தை ஆட்சேபித்தும் பாடசாலை காணியில் பறிக்கப்படும் தேயிலைக்கான பணத்தை பாடசாலைக்கே வழங்க வேண்டும் எனக் கோரியும் தொழிலாளர்கள் போராட்டம் ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பாக மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, அமைச்சின் மூலமாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

**மலையகக் கண்ணோட்டம்**
இரா. புத்திரசிகாமணி

# டேஸ்ட் கடை தணிகாசலம்

தோட்டத்துக் கோயில்கள் எல்லாம் களைகட்ட ஆரம்பித்து விட்டன. சனங்கள் நவராத்திரிப் பூஜைகளில் மும்முரமாகி விட்டனர். இந்தப் பத்து நாள் திருவிழாவில் தணிகாசலத் தின் கடலை, வடை, பலகாரங்களுக்கும் இஞ்சித் தேத்தண்ணிக்கும் ஏகப்பட்ட கிராக்கி. இதனால் தேவையான சாமான்களை வாங்க கடைக்குக் கிளம்பினார் தணிகாசலம். சாமான்களை எல்லாம் வாங்கி மூட்டை கட்டி வைத்து விட்டு குமாரசாமியின் சுருட்டுக் கடைக்குப் போய் வெற்றிலைக் கூறு ஒன்றை எடுத்துப் பிரித்தார்.

"என்னாங்க குமாரசாமி அண்ணே வரவர வெத்திலைக் கூறு மெலிஞ்சிப் போகுது. பாக்குத் துண்டுகள் கூட குறைஞ்சி இருக்கு"

'என்ன தணிகாசலம் அண்ணே செய்ய. ஒங்களுக்கு தெரியாத விஷயமா? வெத்திலை வெல தங்கம் வெலக்கி விக்குது. பாக்கு வெல மரத்த விட உசரமா போச்சி''

இந்த நேரத்தில் கொழும்பில் இருந்து வந்த பஸ் ஹோல்டிங் பிலேசில் நின்றது. பயணிகள் ஒருவர் பின் ஒருவராக இறங்கினர்.

கடைசியாக வாட்டசாட்டமான இளம் பெண் ஒருத்தி இறங்கினாள். கையில் ஒரு சொப்பிங் பேக். அதில் சில பழைய துணிகள். படிகளில் இறங்கும் போது இறங்க முடியாமல் தடுமாறினாள். கடைசிப் படியில் இறங்கும் போது கால் இடறி விழப்பார்த்தாள். என்றாலும் கடை வாசலில் நின்ற தணிகாசலம் அந்தப் பிள்ளையை தரையில் விழவிடாமல் கைத் தாங்கலாகப் பிடித்து இறக்கிவிட்டார்.

மெதுவாகக் கையைப் பிடித்து குமாரசாமியின் சுருட்டுக் கடை பெஞ்சில் உட்கார வைத்தார். அந்தப் பிள்ளை பேச முடியாமல் தடுமாறியது. தணிகாசலம் பக்கத்து நானா கடைக்குப் போய் சோடா ஒன்றை வாங்கி வந்து குடிக்கக் கொடுத்தார்.

''யார் அம்மா நீ, இப்படி கால் கை எல்லாம் சூட்டுக் காயமா இருக்கு. கொழும்புல இருந்து வாரீங்களா? கையில பேக் ஒன்னும் காணோமே!''

''என்னங்க அண்ணே என்ன அடையாளம் தெரியலியா? நான்தான் கந்தசாமியோட மவ ராசாத்தி''

''அடப்பாவிப் பொண்ணே இந்த கசிப்பு கந்தனோட மவளா நீ. செக்க செவேல்னு வெள்ளகவுன போட்டுக் கிட்டு ஸ்கூலுக்கு போய் கிட்டு இருந்தியே அந்த ராசாத்தியா''

''ஆமாங்க அண்ணே அந்த ராசாத்தியேதான்''

"என்ன புள்ள இப்புடி ஆயிட்ட அடையாளமே காண முடியல இந்த கந்தன் ஒன்ன எங்கயோ பெரிய படிப்பு படிக்க வைக்கிறேன்னு இல்ல சொல்லிக்கிட்டு இருக்கான்.''

''நீங்க ஒரு பக்கம், பெரிய படிப்பாவது மண்ணாங்கட்டியாவது, சோதனை எழுதப் போர நேரம் என்ன சோதனை கூட எழுத விடாம கொழும்புக்கு அனுப்பி வைச்சிரிச்சி.''

''என்ன ராசாத்தி சொல்லுற. சோதனை எழுத விடாம செஞ்சிப்புட்டானா? நம்ம வாத்தியாரு கூட அடிக்கடி சொல்லுவாறு இந்த ராசாத்தி கெட்டிக்காரி. படிச்சி நல்லா வருவான்னு.''

"எல்லாத்தையும் தான் எங்க அப்பன் நாசமாக்கிப் புடிச்சே"

"ஒன்னுமே வெளங்கல தாயி கொஞ்சம் வெவரமா சொல்லு"

''ஆமாங்க தணி அண்ணே அன்னக்கி ஒரு நாள் இரவு 12 மணி இருக்கும். பொலிஸ்காரங்க வந்து எங்கவூட்ட சோதிச்சி கசிப்பு பெரல் எல்லாம் எடுத்திட்டாங்க. எங்க அப்பனையும் அடிஅடின்னு அடிச்சி ஜீப்புல ஏத்திக்கிட்டுப் பொயிட்டாங்க

''யார் யாரையோ கூப்பிட்டோம் ஒருத்தரும் கூட வரல்ல. என்ன செய்ய நானும் எங்க ஆத்தாவும் லாந்தரை எடுத்துக் கிட்டு தனிய பொலிஸுக்குப் போனோம்.''

''அட அநியாயமே இது எப்ப நடத்திச்சி''

''அங்க போயி பாத்தா எங்க அப்பாவ தலைகீழா கட்டி தொங்க விட்டிருந்தாங்க''

''அப்படி தலைகீழா தொங்கப் போட இந்த கந்தன் என்ன கொலையா செஞ்சிப்புட்டான்''

''என்ன அண்ணே மெதுவா சொல்லுறீங்க. எங்க அப்பனோட கசிப்பு எத்தனை பொம்பளங்க வூட்ட தாலிய அறுக்க வச்சிருக்கு இது யாருக்குத் தான் தெரியாது''

''சரி சரி ஆத்திரப்படாத தாயி. நடந்ததை சொல்லு.''

''எங்க அப்பன இந்த கோலத்துல பாத்த எங்க ஆத்தா வாயிலயும் வயித்துலயும் அடிக்கக் கிச்சி.'' அந்த நேரம் வந்த இன்ஸ்பெக்டர் எங்கள காம்பிரா உள்ளுக்கு கூப்பிட்டார். நீங்க ரெண்டு பேரும் யாரு? எதுக்கு வந்தீங்கன்னு கேட்டார்.

''அந்த இன்ஸ்பெக்டர் கேள்வி மேல கேள்வி கேட்டான். வாய்தான் கேள்வி கேட்டுக்கிட்டு இருந்திச்சே தவிர அவன் கண்ணுங்க உச்சி மொதல் உள் ளங்கால்வரை ஏம் மேலயே மேஞ்சிக்கிட்டு இருந்திச்சி. எனக்கு பெரிய வெக்கமா போச்சி''

''இது நல்ல கேவலம்



கெட்டபொலப்பாப் போச்சி, அப்புறம் என்ன நடத்திச்சி''

''ஒடனே பக்கத்துல இருந்த பொலிஸ்காரன கூப்பிட்டு எங்க அப்பன அவுத்து உடச் சொன்னாரு.'' எங்க அப்பன் எங்களப் பார்த்து ஒன்னு அழுதுரிச்சி''

''அப்புறம்''

''எங்க அப்பன பார்த்து ஏ கந்தசாமி இம்புட்டு அழகான பொம்பள புள்ளய எல்லாம் வச்சிக்கிட்டு ஏண்டா இந்த சின்னத்தனமாக வேல செய்யிர ஒனக்கு நான் ஒதவி செய்யிறன். நீ எனக்கு ஒரு ஒதவி செய்ய வேணும்னு இன்ஸ்பெக்டர் எங்க அப்பன்கிட்ட கேட்டாரு.''

''என்னடா இது புதுக் கதையா இருக்கு அப்படி என்ன ஒதவி கேட்டாரு இன்ஸ்பெக்டர்''

''கொழும்புல இருந்து எங்க தங்கச்சியும் அவரு மாப்பிளயும் வந்திருக்காங்க. ஊட்டுல எங்க அம்மா மட்டும் தனியா இருக்காங்க அவங்க கூட இருக்க ஒரு பிள்ளை வேணும். ஒரு நல்ல புள்ளயா பாரு எண்டு கேட்டாரு''

''சேர் ஒங்களுக்கு செய்யாத ஒதவியா இதோ இங்க நிக்கிறாளே இது எம்மவ. அதையே அனுப்பி வைக்கிறேன்னு'' எங்க அப்பன் சொல்லிப்புட்டாரு

''எங்க அம்மாவுக்கு ஒரே கோவம், என்னா மனுசன் ஒனக்கு புத்தி கெட்டுப் போச்சா? பள்ளிக் கூடம் போற புள்ளைய பங்களா வேலைக்கு அனுப்ப போரியான்னு சத்தம் போட்டாங்க''

''அதுக்கு ஒங்க அப்பன் என்ன சொன்னான்?''

''போடி பைத்தியக்காரி. இன்ஸ்பெக்டரு எவ்வளவு பெரிய ஆளு நாமலும் நல்ல ஒதவிய பெத்துக்கலாம், என்னாடி பெரியபடிப்பு பெரிய கலெக்டரராவா வரப் போறா? மூடிக் கிட்டு கம்முனு இருன்னு வாயை அடக்கிப் புடிச்சி.

''எங்க அம்மா பாவம், அப்பனோட அடிக்கு பயந்து வாய மூடிக்கிச்சி.''

''என்ன தாயி நீ ஓடிவந்து ஏங்கிட்ட ஒரு பேச்சி சொல்லி இருக்கலாம் இல்ல''

"எங்க அண்ணே நேரம் இருந்திச்சி. அந்த இன்ஸ் பெக்டர் ஒடனே எங்க அப்பன வழக்கு ஒன்றும் இல்லாம, புடிச்ச சாராயத்தையும் அதுக் கிட்டயே கொடுத்து, கையில ஆயிரம் ரூபாவும் கொடுத்தாரு''

''என்னா தாயி நீ சொல்லுறத கேட்டு எனக்கு தலை சுத்து வரும் போல இருக்கு''

''அதோட மட்டும் இல்லிங்க, அந்த இன்ஸ்பெக்டர் அவரோட சொந்த கார்லயே எங்கள வீட்டில கொண்டு வந்து உட்டதோட, என்னோட துணிமணி எல்லாம் பேக்குல போட்டு என்னையும் கூட்டிக்கிட்டுபோய்ட்டாரு.''

"ராவோடராவா இவ்வளவு அநியாயம் நடந்து இருக்கே தாயி"

''இன்னும் கேளுங்க அண்ணே, அந்த இன்ஸ்பெக்டர் எங்க அப்பன கூப்பிட்டு ஏய் கந்தசாமி இனி நீ யாருக்கும் பயப்படாத. ஒவூட்டு யாவரத்த பாரு. மாதம் மாதம் என்னையும் கவனிக்கக்கன்னு தைரியம் சொல்லி அனுப்பிட்டாரு.''

''இந்த தைரியத்துல தான் இந்த கந்தன் இந்த ஆட்டம் போடுறான். தன்னோட தேவைக்காக பெத்த புள்ளயவே அடவு வச்சிப்புட்டானே பாவி. அங்க கொழும்புல என்ன தாயி நடத்திச்சி?''

"போன ஒரு கிழமை என்ன நல்லா பாத்தாங்க. ஒரு நாள் இந்த இன்ஸ்பெக்டர் அவுங்க அம்மாவ பாக்க வந்தான். அப்பதான் அந்த அநியாயம் நடந்தது. ராவு நான் படுத்திருந்த காம்புராவுக்கு வந்து சேட்டை உட்டான். நான் கொய்யோ முறையோன்னு கத்தி சத்தம் போட்டேன்''

''ஊட்டு ஆளுங்க என்ன செஞ்சாங்க''?

''ஓடிவந்து என்னை கட்டிப் போட்டு அடிச்சாங்க. இப்படியே ஒவ்வொரு கிழமையும் நடக்கும்''

''இதுக்குத்தான் ஒங்க அப்பன் ஒன்ன அங்க அனுப்பி வெச்சானா? வெக்கங் கெட்ட நாயி. இதை எல்லாம் ஒங்க அப்பனுக்கு சொல்லலியா''

''எப்படி அண்ணே சொல்ல ஒரு கடுதாசி, பேப்பர், பேனா கூட கிடைக்கல''

"அடப்பாவிங்களா இவ்வளவு கொடுமைபடுத்திணங்களா?

''போன கிழமை அவன் வந்தப்ப தண்ணி போட்டுட்டு என்ன கண்ணுமண்ணு தெரியாம அடிச்சிப்புட்டான். அவுங்க தங்கச்சிக்காரி நெருப்புக் கொள்ளியில கால், கை, முதுகு எல்லாம் சுட்டுப்புட்டா''

''என்ன தாயி கொடுமை''

''அன்னைக்கு ராத்திரி எல்லாரும் தூங்கின பொறவு ஒருத்தருக்கும் தெரியாம ஓடி வந்திட்டேன்.''

''சரி சரி கவலய உடு. அந்த இன்ஸ்பெக்டர் மேல குத்தம் இல்ல. எல்லாத்துக்கும் ஒங்க அப்பன் தான் காரணம். அவனை செருப்பால அடிக்கனும்.''

''வந்தது வந்துட்ட வா ஊட்டுக்குப் போவோம்'' எனக் கூறிய தணிகாசலம் ராசாத்தியையும் கூட்டிக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பினார்.

— இராசிகா

# வாக்குறுதி தந்தீர்கள் நிறைவேறவில்லையே

## புத்தளம் மக்கள் மன்றம் பேரியலுக்கு கடிதம்


பேரியல்

ஏற்கனவே வாக்குறுதி அளித்ததுக்கிணங்க புத்தளம் தள வைத்தியசாலையின் தேவைகளை நிறைவு செய்துதாருங்கள். இப்படி புத்தளம் மக்கள் மன்றம், கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, கிராமிய வீடமைப்பு, மகளிர் விவகார அமைச்சர் பேரியல் அஷ்ரப்புக்கு கடிதம் அனுப்பி உள்ளது.

''புத்தளம் தள வைத்திய சாலைக்கு புதிய மருத்துவ பரிசோதனை ஆய்வு கூடம், மகப்பேற்று அறை என்பன அமைத்தல்'' என்ற தலைப்பில் மக்கள் மன்ற இணைச் செயலாளரான எஸ்.ஆர்.எம். முஹ்சி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

4ஆம் திகதி தாங்கள் புத்தளம் தள வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள குறை நிறைகளை நேரில் கண்டறிந்து கொண்டதுக்காக எமது மன்றம் நன்றி தெரிவிக்கிறது.

அந்த விஜயத்தின் போது வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் தாங்கள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இருந்தீர்கள். அந்த கலந்துரையாடலின் போது தள வைத்திய சாலையில் நிலவும் இரண்டு பிரதான குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருவதாக தெரிவித்திருந்தீர்கள். அவையாவன:—

1. புதிய மருத்துவப் பரிசோதனை ஆய்வு கூடம் ஒன்றை அமைத்தல்.
2. மேலதிகமான மகப்பேற்று அறை ஒன்றை அமைத்தல்.

இப்பிரதேசத்தில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் மருத்துவ தேவைகளுக்காக அவசியமாகத் தேவைப்படும் இவ்விரு தேவைகளையும் நிறைவேற்றத் தேவைப்படும் நிதியை ஒதுக்கி இப்பணியை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுங்கள்.''

இப்படி கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

— ஏ.எஸ்.புல்கி

# விளையாட்டு மைதானம் புது மெருகு பெறுகிறது

புத்தளம் நகர சபைக்குச் சொந்தமான பொது விளையாட்டு மைதானத்தின் முதல் கட்ட அபிவிருத்தி வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மைதானம் புற்கள் பதிக்கப்பட்டு அழகாகக் காட்சி தருகிறது.

முதல்கட்ட வேலைக்காக சுமார் மூன்று லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

வடமேல் மாகாண போக்குவரத்து, பெருந்தெருக்கள் அமைச்சு ஒன்றரை இலட்சம் ரூபாவையும் புத்தளம் நகர சபை ஒன்றரை இலட்சம் ரூபாவையும் இதற்கென ஒதுக்கீடு செய்திருந்தன.

முதற்கட்ட அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதையடுத்து வெகு விரைவில் மைதானம் திறந்து வைக்கப்படுமென நகரபிதா என்.எம். நஸ்மி தெரிவித்தார்.

# 25 கோடி ரூபா செலவில் புத்தளம் நகர் அபிவிருத்தி

புத்தளம் நகரம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட உள்ளது.

கடந்த 27 ஆம் திகதி இது தொடர்பான அங்குரார்ப்பண வைபவம் இடம் பெற்றது.

இந்த அபிவிருத்தித் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 25 கோடி ரூபா வழங்கியுள்ளது. இத் தொகையில் 20 சத வீதம் கடனாகவும் 80 சத வீதம் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் நகரபிதா என்.எம்.நஸ்மி, மாகாண அமைச்சர் எம்.எச்.எம். நவவி ஆகியோரின் அழைப்பை ஏற்று வடமேல் மாகாண முதலமைச்சர் எஸ்.பீ. நாவின்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அபிவிருத்திப் பணிகளை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

முதற் கட்ட வேலையாக புத்தளம் நகர பஸ் நிலையம் புனரமைப்புச் செய்யப்படும். அத்துடன் இங்கு வர்த்தக நிலையங்களும் நிறுவப்படும்.

நகரின் பிரதான சாக்கடைக் கால்வாயான ''மலேரியா கால்வாய்'' நவீன மயப்படுத்தப்படும். சுமார் நாலரை கிலோ மீட்டர் தூரமான இக்கால்வாயில் ஏனைய சிறு சாக்கடைக் கால்வாய்கள் இணைக்கப்படும்.

மேலும் ஏனைய சாக்கடைக்கால்வாய்களும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

புத்தளம் நகர பொது விளையாட்டு மைதானம் சகல வசதிகளும் கொண்ட விளையாட்டு மைதானமாக மாற்றி அமைக்கப்படும்.

நகரின் மத்தியில் நவீன வசதிகளுடன் கூடிய நான்கு மலசல கூடங்கள் நிறுவப்படும்.

இந்த அபிவிருத்திப் பணிகள் எதிர்வரும் 2005 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும்.

முதல்வர் நாவின்ன புத்தளம் தளவைத்தியசாலைக்கு விஜயம் செய்து அதனை சுற்றிப் பார்வையிட்டார்.

பின்பு ஆஸ்பத்திரியின் உடனடித் தேவைகளுக்காக 30 இலட்சம் ரூபா நிதியை உடனடியாக ஒதுக்கீடு செய்து கொடுத்தார்.

# பொலிஸ் குடும்பங்களுக்கு வெளியேற்ற உத்தரவு

புத்தளம் நகரில் முன்பு மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம் இயங்கி வந்த கட்டடத்தில் பொலிஸ் நிலையங்களில் சேவையாற்றுவோரின் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

21 வருடங்களுக்கு முன்பு பெருமளவு குடும்பங்கள் இங்கு வசித்தன. கடந்த 10 வருடங்களாக 16 குடும்பங்கள் மாத்திரமே நிரந்தரமாக வசித்து வருகின்றன.

இங்கு வசிப்போர் புத்தளம் பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களில் சேவைபுரியும் கான்ஸ்டபிள்களினதும் பொலிஸ் அதிகாரிகளினதும் குடும்பங்கள்.

எனினும் அண்மையில் புத்தளம் மாவட்ட செயலாளர் ரவி ஜயலத் திசநாயக்காவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதமொன்று மேற்படி குடும்பங்களின் அடி வயிற்றை கலக்கியுள்ளது.

இரு மாத காலத்துக்குள் வீடுகளை விட்டு வெளியேறுமாறு இவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

தமது பெயரில் உறுதி எதுவும் இல்லாத போதிலும் அப்போதைய அரசினால் வழங்கப்பட்ட இந்த வீடுகளில் பல இலட்சம் ரூபாய்களைக் கொட்டி தாம் திருத்த வேலைகளைச் செய்திருப்பதாகப் பலரும் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மாகாண அமைச்சர் எம்.எச்.எம். நவவி வடமேல் மாகாண முதலமைச்சர் எஸ்.பீ. நாவின்ன ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

# உலகமே தூற்றிய சர்வாதிகாரி! அவன் உள்ளத்திலும் கனிவு

சில ஆட்சியாளர்கள் மக்கள் மனங்களில் மட்டுமல்லாமல், சரித்திர ஏட்டிலும் பதியப்பட்டவர்களாகத் திகழ்ந்துள்ளனர். அதற்குக்காரணம், அவர்கள் தங்கள் நாட்டை ஆட்சி செய்த விதம் — நடந்து கொண்ட முறை என்பனவாகும்.

இந்த வகையில், உகண்டா நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்த சர்வாதிகாரி இடி அமீனை உலகமக்கள் அவ்வளவு விரைவில் மறந்திருக்க மாட்டார்கள்.

உகண்டா நாடு இடி அமீன் வசமாகிய போது நாடெங்கும் கோலாகலமாகத் திருவிழாக்களும், பாராட்டுக் கூட்டங்களும் நடைபெற்றன. அமீன் அப்போது மக்கள் மனதைக் கவரப் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டான்.

பெண்கள் மீது வெறி கொண்டவன் இடி அமீன். அவனின் சர்வாதிகாரத்திற்கு ஓர் உதாரணம்... அழகிய பெண் ஆடுவதுபோல அசைந்தாடிச் சென்றது அந்தக்கார். பளபளத்த சிவப்பு வண்ணத்தில் கறுப்புப்பட்டையில் உருண்டோடிடும் பவளமாய் தெருவில் வழுக்கிக் கொண்டு சென்றது.

அந்த அழகிய மெர்ஸிடஸ் ஸ்போர்ட்ஸ் காருக்கு உரிமையாளர் மைக்கல் காக்வா. தொழிலுறவு நீதிமன்றத் தலைவர். அந்தக்கார் மிகவும் நவீனமானது. தொலைக்காட்சி அமைப்பு உட்பட மேலும் பல புதுப்புது வசதிகளால் தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு நகரில் பவனி வந்தது.

கண்ணும் கருத்துமாய் அந்தக் காரைப் பாதுகாத்து வந்தார் காக்வா. பிறர் அதைப் பார்த்து ஏக்கப்பெருமூச்சு விடும்போது அவர் உள்ளம் பெருமிதத்தால் விம்மும். இன்னொரு அழகிய சமாசாரத்தையும் காக்வா தன் கண்ணேபோல் பாதுகாத்து வந்தார். அவர்தான் ஹெலன் ஓக்வாங்.

காக்வாவின் அழகிய காரைப் போலவே, ஹெலன் ஓக்வாங் என்ற இந்தப் பேரழகியும் பலர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவள். காக்வாவுடன் ஏதேனும் விருந்துக்கோ அல்லது கூட்டத்திற்கோ போகும்போது அவளுடைய இடையை அணைத்தபடி செல்லும் கை தனக்குரியதாக இருக்கக் கூடாதா என்று ஏங்கியவர்கள் ஏராளம். எந்த உடையிலுமே பளிச்சென்று இருப்பாள் ஹெலன். எந்த உடையுமே அவளுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும்.

''புறப்படலாமா ஹெலன்?'' என்று கேட்டார் காக்வா. ''இதோ தயார்'' என்று கூறிய ஹெலன் உடனே புறப்பட்டாள். அவர்கள் தொழிலுறவு சம்பந்தப்பட்ட ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

கூட்டம் ஆரம்பித்தாகி விட்டது. சம்பிரதாய முறைப்படி ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொண்ட பின்னர் மதுக்கோப்பைகளை ஆளுக்கு ஒன்றாகக் கையில் ஏந்திக் கொண்டார்கள்.

இன்னும் சிறிது நேரத்தில் கூட்டத் தலைவரை மேடைக்கு வரவழைத்து சிறிது நேரம் பேசச் சொல்வார்கள்; பிறகு விரும்பியவர்கள் மேடைக்கு வந்து தத்தமது கருத்துக்களைக் கூறலாம். சிற்றுண்டி முடிந்த பிறகு, கூட்டத்துச் செயலாளர் மேடைக்கு வந்தார். ''இப்போது தலைவர் அவர்களை மேடைக்கு வரும்படி அழைக் கிறேன்,'' என்றார்.

''இதோ வந்து விட்டேன்'' என்ற இடிகுரல் கேட்டது. வாசல் பக்கத்திலிருந்து வேகமாக நுழைந்த இடி அமீன், மேடைமீது ஏறி தலைவருக்குரிய நாற்காலியில் அமர்ந்தான். உடன் வந்த இராணுவ அதிகாரியிடம் மேடையில் இருந்த பிற நாற்காலிகளை எடுத்துக்கீழே போட்டுக் கொண்டு அமருமாறு பணித்தான். இடி அமீனுக்கு அவசரமாக மது வழங்கப்பட்டது.


இடி அமீன்

''சரி, தலைவர் உட்கார்ந்தாகி விட்டது'' என்று கூட்டச் செயலாளரைப் பார்த்துக் கூறிய அமீன், ''நீங்கள் எல்லோரும் மேடைக்குக் கீழே நாற்காலியில் உட்காரலாம்; நான் தலைவர்; அதனால் நான் மட்டும் தான் மேடையில் உட்காருவேன். நான் பேசுவேன். நீங்களெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்'' என்று மேடையில் அமர்ந்திருந்தவர்களிடம் கூறினான்.

யாருக்கும் எதுவும் பேசத்தோன்றவில்லை. ஏனெனில் அமீனை எதிர்த்துப் பேசும் அளவிற்கு ஒருவருக்கும் தைரியம் இருக்கவில்லை. இடி அமீனின் பார்வை ஒவ்வொரு பெண்கள் மீதாகத் தாவியது, ஒவ்வொன்றாக அலசியது, ஆராய்ந்தது, ரசித்தது. அடுத்து சிறப்பான அழகைத் தேடியது... ஓரிடத்தில் நின்றது. நிலைகுத்தி நின்றது.

ஹெலன்! அவளைப் பார்த்தவன், பார்த்தபடியே இருந்தான். ஹெலன் நெளிந்தாள்; அவளைவிட காக்வா புழுவாகத்துடித்தார். ஏதோ விபரீதம் நிகழப்போகிறது என்று நினைத்தார். ஆனால் இடி அமீனுடைய பார்வைபட்டு, ஹெலன் வாழ்வு சீரழியப் போகிறது என்பதை அவர் கொஞ்சமும் கூட எதிர்பார்க்கவில்லை.

சட்டென்று மனதில் ஒரு எண்ணம் உதயமாக, கூட்டத்து செயலாளரைப் பார்த்து காக்வா சமிக்ஞை செய்தார். அதைப்புரிந்து கொண்ட செயலாளர், என்ன வந்தாலும் வரட்டும் என்று மேடைமீது ஏறினார். 'இராணுவத்தினர் — இடி அமீன் தவிர வேறு எவரும் மேடையில் இருக்கக் கூடாது' என்றனர்.

அந்தச்சிறு குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு காக்வாவும், ஹெலனும் அங்கி ருந்து மெல்ல நழுவினார்கள். இடி அமீன் ஹெலனைத் தேடினான். அவனுடைய கழுகுக்கண் பார்வையிலிருந்து யாராலும் தப்ப முடியாது. ஹெலன் மட்டும் விதி விலக்கா என்ன? வாசலை நோக்கி ஓடிக் கொண்டிருந்த காக்வாவையும், ஹெலனையும் சுட்டிக் காட்டி இடி அமீன் கத்தினான். ''நிறுத்துங்கள் அவர்களை; எனக்கு அவள் வேண்டும்!'' திடீரென்று சில்லிட்ட பயத்தால் உறைந்து போன ஹெலன் தடுமாறினாள். அந்தச் சந்தர்ப்பத்தில் அவள் தன் பின்னால் வேகமாக ஓடிவருவாள் என்று நினைத்து காக்வா முன்னே ஓடித் தன் காரில் ஏறினார்.

காரை 'ஸ்டார்ட்' செய்து திரும்பிப் பார்த்தால், ஹெலன் இராணுவ வீரர்களின் கைகளில் சிக்குண்டிருந்தாள். குரூரச் சிரிப்புடன் இடி அமீன் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான். அதைக் காணப் பொறுக்காத காக்வா தன் காரை அவர்களை நோக்கி சீறிப்பாயச் செய்தார். அதற்குள் இராணுவ வீரன் ஒருவனுடைய குண்டு அவர் மண்டையில் பாய்ந் தது. அப்படியே அவர் ஸ்டியரிங் மீது சாய, கார் ஒரு மரத்துடன் மோதி நின்றது.

இராணுத்தினர் வேட்டை நாய்போல அந்தக் காரை நோக்கி ஓடினார்கள். அழகிய அந்தக் கார் சின்னாபின்னமாகிக் கிடந்தது. ''இவனுக்கு இங்கேயே தகனம் நடக்கட்டும்'' என்று உறுமினான் அமீன். மெர்ஸிடஸ் கார் தன் நாயகன் காக்வாவுடன் ஒரே சிதையில் தீக்கிரையாகியது. ஹெலன் அமீன் வசமானாள்.

அன்றிரவோடு அமீனுக்கு ஹெலனுடைய உடல் வெறுத்து விட்டது. இரவு பூராவும் தன்னுடைய வக்கிரமான ஆசையால் அவளைக் குற்றுயிரும், குறை உயிருமாக ஆக்கினான் அமீன்.

ஆனாலும் அவனுடைய உள்ளத்திலும் ஒரு மூலையில் அன்பு என்று ஒன்று தோன்றியிருக்கும் போலும்! அவளை பாரிஸிலுள்ள உகண்டா தூதராலயத்தில் உகண்டா பிரதிநிதியாக வேலையில் அமர்த்தினான். அவன் பிடியில் சிக்கி மாளாமல் மீண்ட அதிஷ்டத்திற்குள்ளான ஹெலன் பாரிஸுக்கு தப்பியோடி தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டாள்.

இறுதியாக இடி அமீனின் கடைசிக் காலம் எப்படி அமைந்தது என்பதை ஆராய்வோம்; உலக நாடுகள் எல்லாவற்றையும் பகைத்துக் கொண்டாயிற்று; தனக்கு உதவி புரிந்த நாடுகளின் வெறுப்பையும் சம்பாதித்தாயிற்று. தன்னுடைய குரூர சந்தோஷத்திற்காக, அற்ப உள்ளக் கிளர்ச்சிக்காக பிறர் வேதனையைக் கண்டு ரசிக்கும் மனோபாவத்திற்காக நெருங்கியவர்கள் எல்லோரையும் விரோதித்துக் கொண்டாயிற்று.

இடி அமீன் கிட்டத்தட்ட தனியனானான். உள்நாட்டுக் குழப்பங்களுக்கும், அங்கு அவனுக்கு ஏற்பட்டுள்ள விரோதங்களுக்கும் குறைவே இல்லை. அவன் கொன்றது போக எஞ்சியிருந்த அனைவரும் ஒட்டுமொத்தமாக அவனைத் தூற்றத் தொடங்கினார்கள். இனிமேல் தனது பலத்தை பிரயோகிக்க முடியாத நிலையில் காட்டுக்குள் ஓடி ஒளிந்தான். இருப்பினும் அவனது முடிவு ஓர் புரியாத புதிராகவே இன்னமும் உள்ளது.

—ரமேஷ்காந்த்ஜெயசீலன்

# கிழக்குப் பல்கலையில் ஒழுக்கக் கேடுகள்!

## சில மாணவர்கள், இளம் விரிவுரையாளர்களால் களங்கம்

கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு இழுக்குத் தேடித் தரும் ஒழுக்கக் கேடான சம்பவங்கள் அங்கே நடைபெற்று வருகின்றன.

பட்டதாரி மாணவர்கள் மட்டத்திலும் இளம் விரிவுரையாளர்கள் மட்டத்திலும் இழிவான செயல்கள் நடைபெறுவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழகத்தின் இளவயது விரிவுரையாளர் ஒருவர் அங்கே கல்வி கற்கும் மாணவிகளுக்கு ஆபாசப் படங்களைக் காட்டி வருகிறார்.

பரீட்சை வினாக்களை முன்கூட்டியே மாணவிகளுக்கு வழங்க முன்வருகிறார். அதற்குக் கைமாறாக அவர்களை உடல் உறவுக்கு அழைக்கிறார்.

மற்றும் பல




பல்கலைக்கழகத்துக்கு முன்னால் உள்ள பெயர்ப்பலகை

வழிகளிலும் அந்த இளம் விரிவுரையாளர் மாணவிகளுடன் முறைகேடாக நடந்துகொள்கிறார்.

இப்படி அந்த விரிவுரையாளர் மீது புகார்.

பல்கலைக்கழக நிர்வாகம் புகார் கிடைத்ததும் அதுபற்றி ஆராய்ந்தது. விரிவுரையாளரை விசாரணை செய்து அவர் உண்மையில் குற்றவாளி என்று காணப்பட்டால் அவருக்குத் தகுந்த தண்டனை வழங்குவது என்று முடிவு செய்தது. காரியத்தில் இறங்கியது.

அதில் ஆச்சரியம் என்னவென்றால் விரிவுரையாளர் மீதான விசாரணை முடுக்கிவிடப்பட்டதும் அவர் பல்கலைக்கழகத்துக்கு வருவதை நிறுத்திவிட்டார். அவரை எங்கும் காணவில்லை. அவர் தலைமறைவானார் என்று ஒரு சிலரும் அவர் கடத்திச் செல்லப்பட்டுவிட்டார் என்று வேறு சிலரும் கூறுகிறார்கள்.

மொத்தத்தில் அந்த விரிவுரையாளர் மீது விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் இருக்கிறது பல்கலைக்கழக நிர்வாகம்.

இனி, விரிவுரையாளரை மிஞ்சிவிட்ட ஒரு மாணவனின் கதை.

சம்பந்தப்பட்ட மாணவன் பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்பவர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் உதவி விரிவுரையாளர் ஒருவர் சில மாணவர்களுக்கு விடுதியில் விருந்து வைத்தார்.

விருந்தின்போது ஒரு மாணவனிடம் இருந்த சிகரெட் தீர்ந்துபோய்விட்டது. அந்த மாணவன் விடுதியின் பின் பகுதியில் உள்ள மதில் பக்கம் சென்றார். மதிலில் இருந்த ஒரு துவாரத்தினூடாகச் சிறுமி ஒருத்தியை அழைத்தார். பணத்தைக் கொடுத்து சிகரெட் வாங்கி வரும்படி கேட்டுக்கொண்டார்.

சிறுமி சிகரெட் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தபோது மதுபோதையில் இருந்த மாணவன் சிறுமியின் கையைப் பற்றிப் பிடித்து முத்தமிட்டார்.

இன்னும் ஏதேதோ செய்ய முனைந்தார். பயம் அந்தச் சிட்டு திமிறிக் கொண்டு ஓடிவிட்டது.

போதை தலைக்கேற மாணவன் மதில் ஏறிக் குதித்து வெளியே சென்றார். கிராமத்து வீதிகளில் வலம் வந்தார்.

நள்ளிரவில் ஓர் ஓலைக் குடிசையினுள்ளே புகுந்தார். 25 வயது இளம் பெண் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டார். அவருடைய கையைப் பிடித்து மாணவன் இழுத்தார்.

அந்தப் பெண் ஒரு கர்ப்பிணி. திடுக்குற்று எழுந்து கூச்சல்போட்டார். கணவன் வெளியே தொழிலுக்குச் சென்றுவிட்டதால் கர்ப்பிணிப் பெண்ணுடன் துணைக்கு அவரது தோழி இருந்தார். அவரும் விழித்து எழுந்துவிட்டார்.

நிலைமை மோசமாகவே மாணவன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்.

மாணவனைப் பற்றிய புகார் இது.

கர்ப்பிணிப் பெண்ணின் கணவன் வந்து நிலைமையை அறிந்ததும் பல்கலைக்கழகம் சென்று சம்பவம் பற்றி முறைப்பாடு செய்தார்.

முறைப்பாடு செய்ததை அடுத்து பல்கலைக்கழகத்துடன் சம்பந்தமில்லாத சிலர் ஒரு வாகனத்தில் வந்து கர்ப்பிணிப் பெண்ணையும் கணவனையும் மிரட்டினர்.

விளைவு...,.?

கணவன் முறைப்பாட்டை மீளப்பெற்றுவிட்டார். அதனால் பல்கலைக்கழகம் முறைப்படி விசாரணை நடத்துவதற்கு முகாந்திரம் இல்லாமல் போய்விட்டது.

அந்த நிலையில் மட்டக்களப்பில் உள்ள சில பெண்கள் இயக்கங்கள் இந்த விஷயத்தில் தீவிர அக்கறை காட்டின. பல்கலைக்கழக நிரந்தர விரிவுரையாளர்கள் சிலர் இணைந்து முறைப்பாடு செய்தனர். அதை அடுத்து பல்கலைக்கழகம் முறையாக விசாரணை நடத்தி, குற்றச்சாட்டுக்கள் சிலவற்றில் மாணவனைக் குற்றவாளி எனக் கண்டது. அதனால் அந்த மாணவனை அந்தக் கணத்திலிருந்தே ஒரு வருட காலத்துக்கு, பல்கலைக்கழகத்திலிருந்து நிறுத்தி வைத்துத் தண்டனை விதித்தது.

இன்னொரு மாணவன் சிறிது காலத்துக்கு முன்னர் மூக்குமுட்டக் குடித்துவிட்டு இன்னொரு மாணவனுடன் தகராறுக்குப் போய் அந்த மாணவனைத் தாறுமாறாகத் தாக்கிவிட்டார்.

அவரையும் பல்கலைக்கழகம் தண்டித்தது.

இவற்றிலிருந்து பல்கலைக்கழகத்தின் நல்ல பெயரையும் மதிப்பையும் பாதுகாத்துக்கொள்வதில் பல்கலைக்கழக நிர்வாகம் உறுதியாக இருக்கிறது என்பது புலனாகிறது.

அதற்கு மாணவர்களும் விரிவுரையாளர்களும் பல்கலைக்கழகத்தில் உள்ள அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்!

1,250 மாணவர்களும் (எல்லோரும் இளைஞர்கள்) இளம் விரிவுரையாளர்கள் உட்பட 175 போதனாசிரியர்களும் இருக்கும் இடத்தில் பருவக் கோளாறுகள் காரணமாகச் சில தவறுகள் ஏற்படுவது சகஜம் என்று சமாதானம் கூறுபவர்களும் இருக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களுக்கு அரிதாகக் கிடைத்த இரண்டாவது பல்கலைக்கழகம் கிழக்குப் பல்கலைக்கழகம். கிழக்கின் முதலாவது பல்கலைக்கழகம் என்ற பெருமைக்கும் உரியது.

அந்தப் பல்கலைக்கழகத்துக்கு ஒரு சில மாணவர்களினாலும் விரிவுரையாளர்களினாலும் களங்கம் ஏற்படுவதை அனுமதிக்க முடியுமா?

ஏதோ ஒரு மாணவனால் அல்லது ஒரே ஒரு விரிவுரையாளரால் பல்கலைக்கழகத்துக்கு ஏற்படும் இழுக்கு அந்த ஒரு மாணவனையோ அல்லது விரிவுரையாளரையோ மட்டும் பாதிப்பது அல்ல. எல்லோருக்குமே அது தலைக்குனிவை ஏற்படுத்துகிறது.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் பற்றி பல்கலைக்கழகம் அமைந்துள்ள வந்தாறுமூலைக் கிராம மக்களுக்குப் பொதுவாகவே மிகுந்த நல்லெண்ணம் உண்டு.

வந்தாறுமூலையில் மட்டுமல்லாமல் அயல் கிராமங்களிலும் சிறுவர்களுக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி போதித்து வருகிறார்கள். பாடசாலை உபகரணங்களை வழங்குவதற்குப் பண உதவியும் செய்து வருகிறார்கள்.

கிராமங்களில் நடைபெறும் மரணச் சடங்குகளுக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் போகிறார்கள். அந்திமக்கிரியைகளுக்குப் பண உதவியும் செய்கிறார்கள்.

மொத்தத்தில் கிழக்குப் பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்கள் கிராம மக்களின் இன்ப துன்பங்களில் பங்குகொள்கிறார்கள்.

அவர்களில் ஒரு சிலர்தான் தடுமாறித் திசை மாறிப் போகிறார்கள், தம்மைத் தாழ்த்தித் தாம் கல்வி கற்கும் பல்கலைக்கழகத்துக்குத் தீராத வடுவை ஏற்படுத்தி விடுகிறார்கள்.



பல்கலைக்கழக முன் மதிலில் இப்படி வாசகங்கள்

இந்த வக்கிர புத்தி படைத்தவர்களுக்குச் சக மாணவர்கள் துணை போவதும் — அவர்கள் செய்யும் தகாத காரியங்களை மாணவ சமுதாய ஒற்றுமை என்ற பெயரால் வலிந்து நியாயப்படுத்த முனைவதும் —

அவர்களுக்காகப் போராட நினைப்பதும் முறை பரகமாட்டா மாறாகக் குளிக்கச் சென்று சேறு பூசுபவர்கள் போல உயர் கல்விக்காகப் பல்கலைக்கழகம் சென்று அங்கே தம்மைத் தாழ்த்திக் கொள்பவர்களைத் தாழ்ந்து போகவிடாது கைகொடுத்துத் தூக்கிவிடவேண்டும்.

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்ச்சிகளை நடத்தி அகிலமெங்கும் உள்ள தமிழ் நெஞ்சங்களின் உணர்வலைகளைத் தட்டி எழுப்பி அவர்களுக்கு தமிழார்வத்தையும் சுய நிர்ணய உரிமை வேட்கையையும் சுதந்திரத் தாகத்தையும் ஏற்படுத்தி வெற்றி கண்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு இது பெரிய காரியமா?

மாணவர்களின் முயற்சிக்குப் பெற்றோரும் மற்றோரும் ஒத்துழைத்தால் நம் பல்கலைக்கழக மாணவர்கள் எல்லோருமே மணியானவர்களாகத் திகழ்வார்கள். பல்கலைக்கழக நிர்வாகங்களின் பணி சுலபமாகும். உயர் கல்வி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் களங்கம் ஏதும் இல்லாமல் வெகு உயர்ந்த நிலையை அடையும் என்பது திண்ணம்.

— நிராஜ் டேவிட்

### யாழ் பல்கலை பட்டமளிப்பு

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு யாழ் பல்கலைக் கழகம் "முதுகலைமாணி" கௌரவப்பட்டம் வழங்க முன்வந்தது பற்றி வாசகர்களிடமிருந்து நிறையக் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அடுத்த வாரத்திலிருந்து கடிதங்கள் பிரசுரிக்கப்படும்.

# பெற்றோர் பலர் விசாரணையில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இளைஞர்கள் இணைந்து வருவது தொடர்பாக படையினர் பல பெற்றோரை விசாரணைக்கு உட்படுத்தி இருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்துகொண்ட இளைஞர்களின் பெற்றோரை முகாமிற்கு வருமாறு படையினர் அறிவித்ததைத் தொடர்ந்து முகாமுக்கு சென்ற பெற்றோரைப் படையினர் விசாரணைக்கு உட்படுத்தி உள்ளனர். சில பெற்றோர் படையினரால் தாக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக செஞ்சிலுவை சர்வதேச குழு, மனித உரிமைகள் அமைப்புக்கள் போன்றவற்றில் முறையிட பெற்றோர் அஞ்சுகின்றனர் என்று கூறப்படுகிறது.

படையினரின் அச்சுறுத்தலுக்குள்ளான சில குடும்பங்கள் வீடு வாசல்களை விட்டு வெளியேறி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை படையினர் மற்றுமொரு துண்டுப்பிரசுரம் ஒன்றை மட்டக்களப்பில் வெளியிட்டுள்ளனர். "அப்பாவித் தமிழ் மக்களினது உயிர், உடைமைகளுக்கு, ஒருபோதும் எம்மால் எதுவித சேதங்களும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே எமது நோக்கம் ஆகும்.

"இதுபோன்ற அறிவித்தல்கள் பல தடவைகள் எங்களால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எமது நோக்கம் மக்களைப் பாதுகாப்பதே ஆகும்" இப்படி அந்த துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

— சத்துருக்கன்



மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை சமீபத்தில் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் முத்தமிழ் விழா நடத்தியது. மலர் வெளியீட்டின்போது பிரதேச செயலர் க. கதிர்காமநாதன், அரசாங்க அதிபர் சி. சண்முகத்துக்கு முதலாவது பிரதியை வழங்குகிறார்.

படம்: கல்லடி ஜெயா

# சமுர்த்தி முத்திரைகளை மீளவழங்கக் கோரிக்கை

மட்டக்களப்பு ஓட்டமாவடிப் பிரதேசத்தில் இடைநிறுத்தப்பட்ட சமுர்த்தி முத்திரைகளை மீள வழங்குமாறு பிறைந்துறைச் சேனை நூரிய்யா ஜும்ஆ பள்ளிவாயல் வாழைச்சேனை முகைதீன் ஜும்ஆ மஸ்ஜித் நம்பிக்கையாளர் சபை என்பன ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி உள்ளன.

அரசு 20 சதவீதமான சமுர்த்தி முத்திரைகளை மீளப்பெறுமாறு அறிவித்தது.

ஆனால் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமக்கு பிடிக்காத சிலரிடமே முத்திரைகளை மீளப் பெற்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது சம்பந்தமாக சமுர்த்தி முகாமையாளர் மாவட்ட சமுர்த்தி ஆணையாளருக்கு அறிவித்து முத்திரைகளை மீளவழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால் இன்னும் முத்திரை வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

## பாடசாலைகள் அபிவிருத்தி

ஏறாவூர் பற்று பிரதேசத்தில் போர் சூழலால் பாதிக்கப்பட்ட ஆறு பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய "வேல்ட் விசன்" நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கரடியன்கேணி சிங்காரத்தோப்பு மகாவித்தியாலயம், சித்தாண்டி விநாயகர் கிராமம், அலைமகள் வித்தியாலயம், மயிலவட்டவான் அ.த.க. பாடசாலை, காயான்குடா கண்ணகி வித்தியாலயம், பலாச்சோலை விபுலானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பதினைந்து வருடங்களின் பின் இந்தப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. முதல் கட்டமாக பாடசாலைக்கு சுற்றுவேலி அமைக்கவும் மாணவர் ஆசிரியர்களுக்கான தளவாடங்களை வழங்கவும் வேல்ட் விசன் தீர்மானித்துள்ளது.

## மர்மப் பெண் 16 கதை: மாஸ்டர் சிவலிங்கம் தீபன்







## சிறுவர் கைவண்ணம்



ஆ. ரவிக்குமார், கிளிநொச்சி



ஜெ. சங்கீதா, தரம் — 09, பாண்டியன்குளம் ம/வி.

### அணில்

அணிலே அணிலே!
செல்ல அணிலே!
இளமை துள்ளும் அணிலே!
மாம்பழம் கொத்தும் அணிலே!
கிளைவிட்டு கிளை தாவும்
மன ஆற்றல் கொண்ட அணிலே
மனிதர்களிடம் மாட்டிடாமல்
மறைந்து விடும் அணிலே!
சிறுவர் சிறுமியர் மனதைச்
சிலிர்த்திட வைக்கும் அணிலே!

வீ. யோகேஸ்வரி,
தரம் — 7, ம/மா/று/வ
அனிக் த.வி, உடப்புசலாவ.

### சிந்தனைக்கு

"கொடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை"

"காலத்தால் பெய்யாது உலகில் வாழும் உயிர்களைக் கெடுப்பது மழை, அப்படி கெட்டவற்றைப் பெய்து வாழச் செய்வதும் மழையே ஆகும்."

பா. புகழ்யா,
கிங்ஸ்ரன் சர்வதேசப் பாடசாலை.




ஷாமிலா

### நான் ஒரு ஆசிரியரானால்

"இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள்" இந்தக் குழந்தைகளுக்கு அன்பைச் சொரிந்து அறிவைப் புகட்டி பக்குவப்படுத்தி பாரிய சுமைகளைச் சுமக்கக் கூடிய இரு தலைவர்களான அவர்களை மாற்றுவது ஆசிரியனே.

நானும் ஒரு ஆசிரியரானால் பிள்ளைகளுக்கு அன்புவார்த்தை கூறி அரவணைப்பேன். விகடப் பேச்சின் மூலமாகவும், விநோதக் கதைகள், கவிதைகள் மூலமாகவும் அறிவை விருத்தியடையச் செய்வேன். விளையாட்டு மூலமும் கல்வியைப் புகட்டுவேன். மாணவர்கள் ஆசிரியர்களை தெய்வமெனப் போற்றப் பழக்குவேன். கல்வி என்பது கசப்பானதல்ல இனிப்புடையது என்பதை உணர்த்துவேன். கல்வியினால் வரும் இன்பத்தை எடுத்துச் சொல்வேன். எல்லாச் செல்வத்திலும் உணர்ந்த செல்வம் இது என்பதை அவர்கள் உணருவார்கள். ஆர்வமுடன் கற்பார்கள். அறிவைப் பெருக்கிக் கொள் வார்கள். அதன் பிறகே அரசனாகவோ அமைச்சனாகவோ, வைத்தியராகவோ, அதிகாரியாகவோ வருவார்கள். எத் தொழிலுக்கும் அத்திவாரம் இடுபவர்கள் ஆசிரியர்களே.

சோபநிதி பெருமான்,
தரம் — 11, மு / மல்லாவி மத்திய கல்லூரி.

## மூளையைக் குடைந்த மூளைகள்



எரிக் கன்டேல்



உலகின் மிகச்சிறந்த பரிசாக நோபல் பரிசு ஆண்டு தோறும் உலக அளவில் சாதனை புரிபவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் 2000 ஆண்டு விஞ்ஞானத்திற்கான நோபல் பரிசு மூன்று நாடுகளைச் சேர்ந்த மூன்று விஞ்ஞானிகளுக்கு சேர்த்து வழங்கப்பட்டது. இது வரலாற்றில் பதியத்தக்க நிகழ்வானது. பலர் ஏற்கனவே மூளையை ஆராய்ந்து கருத் துக்களைக் கூறிருந் தாலும் இவர்களது ஆராய்ச்சி மிகவும் நுண்ணியது.



டொக்டர் போல்

இந்த மூவரும் மூளையின் வெவ்வேறு பாகங்களை ஆராய்ந்து புதியவகைத் தகவல் களைத் தெரிவித்திருக் கின்றனர்.

மூளையை ஆராய்ந்த இவர்களது மூளையை உலகமே பாராட்டியிருக்கிறது.

மூளைக்குள் ஊடுருவும் மிகவும் நுண் ணிய நரம்புக் கலங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து அதன் முக்கியத்துவத் தையும் கூறியிருந் தார்கள்.

சரி மூளையை ஆராய்ந்த இந்த மூளை சாலி கள் யாரெனப் பார்ப்போமா?



1.டொக்டர் போல் கிறீன்கார்ட் தனக்கு நோபல்பரிசு கிடைக் குமா என்றே யோசித் துப் பார்க்காத 74 வயது சாதாரண மனிதர். நியூயோர்க் பல்கலைக்கழகத் தில் உயிரியல் பிரிவில் தொழில் புரிகிறார். மூளைக் கலங்களிற்கிடையே யான இரசாயன ஊடுருவலை ஆராய்ந்தார்.

2.டொக்டர் எரிக் கன்டேல்— 70 வயது. ஆஸ் திரியா நாட்டிலுள்ள வியன்னாவில் பிறந்து நியூயோர்க்கில் வாழ்ந்து வருபவர். நோபல் பரிசு கிடைக்கும் போது கொலம்பிய பல்கலைக் கழத்தில் விரிவுரையாளராக இருந்து கொண்டிருந்தார்.

3.டொக்டர் ஆர்விட் கார்ல்ஸன் —வயது 77. சுவீ டன் நாட்டைச் சேர்ந்தவர். சுவீடன் பல் கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணி புரிந்தவர். 1982 ஆம் ஆண்டிற்குப் பிறகு நோபல் பரிசை வென்ற சுவீடன் தேசத்தவர் என்ற பெருமையையும் பெறுகின்றார்.

டெல்லியில் உள்ள காமன்வெல்த் பெண்கள் கூட்டமைப்பு ஒவ்வொரு ஆண்டும் சாரிடி ஒயின் அண்ட் சீஸ் ஈவினிங் என்ற நிகழ்ச்சியை நடத்தி வருகிறது. இதில் இந்த அமைப்புக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பல்வேறு பொருட்கள் ஏலத்துக்கு விடப்படும். இந்த ஆண்டு ஏலத்தில் ஒரு கூடாரம் நாலாயிரம் ரூபாவிற்கு ஏலம் போனது.

*மரக்கிளையோடு பிறந் தவன் மண்ணில் சிறந்த ஓட்டக்காரன் அவன் யார்?
மான்.
*காட்டிலும் மேட்டிலும் முளைக்காத பனை என்ன பனை?
கற்பனை.

எஸ். ரூபராணி,
ஆண்டு —08,
திரியாய்.

## பனிக்கட்டிகள் உருகுவது பென்குயினுக்கு வருத்தம்!!



பென் குயின் என்ற பறவை கள் பனிப் பிரதேசத்தில் வாழ் பவை. பறக்க முடியாத இவை நீந்தவும் நடக்கவும் கூடியவை. இவற்றின் சில இயல்புகளைக் கொண்டு அரசபென்குயின், எம்பரர் பென்குயின் என்று வகைப் படுத்தியுள்ளனர்.

மனிதன் வாழமுடியாத அத் லாந்திக் பிரதேசத்திலேயே பென்குயின்கள் அதிகம் வாழ்கின்றன.மனிதனினதோ வேறு பிராணிகளினதோ தொந்தரவில்லாமல் சுதந்திரமாக வாழ்ந்து வந்தன பென்குயின்கள்.

ஆனால் இப்போது பூமியின் வெப்ப நிலை உயர்ந்து வருவதனால் அத்லாந் திக் பிரதேசத் திலுள்ள பனிப்பாறைகள் உருகிக் கொண்டிருக்கின்றன. அதனால் பென்குயின் களும் சில சிரமங்களை எதிர்நோக்குகின்றன வாம்.

### வெற்றிக்குச் சில....

*உன்னையே நீ நம்பத் தொடங்கி விட்டால் உலகில் வாழக் கற்றுக் கொண்டு விட்டாய் என்று பொருள்.
*வெறும்வளர்ச்சி மனிதனை உருவாக்குவதில்லை சிந்தனை தான் மனிதனை உருவாக்குகின்றது.
*பொறுமையோடு இடைவிடாமல் முயற்சி செய் வெற்றிமகுடம் உனக்குச் சூட்டப் படும்.
*கடுமையான உழைப்பைத் தவிர வெற்றியை அடையும் இரகசியம் வேறு இல்லை.
*ஒவ்வொரு தோல்வியும் வெற்றிக்கு ஒரு படி.
*வாழ்க்கையின் வெற்றியே போராட்டத்தில் தான் இருக்கிறது.
*இன்பமே வாழ்வின் இலட்சியம்.
*நம்பிக்கையே வாழ்வு:—வாழ்வே நம்பிக்கை.
*ஒருவருக் கொருவர் புரிந்து கொண்டு அன்பை வளர்க்கும் போது பல பிரச்சினைகளுக்கு இடமிருக்காது.
*எவரை வேண்டுமானாலும் ஐயுறலாம். ஆனால் உன்னையே நீ ஐயுறக் கூடாது.

இ. கபில், தரம் — 8,
யா / வட்டு மத்திய கல்லூரி.

### சார்க் நாடுகளும் தலைநகரமும்

| | |
|---|---|
| 01.இலங்கை | கொழும்பு |
| 02.இந்தியா | புதுடில்லி |
| 03.பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் |
| 04.பங்களாதேஷ் | டாக்கா |
| 05.நேபாளம் | காட்மண்டு |
| 06.பூட்டான் | திம்பு |
| 07.மாலை தீவு | மாலே. |

S.சசி, ஆண்டு — 13, தி / கிளிவெட்டி ம.வி.

### தமிழ் மொழியின் சிறப்பு

பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வளர்ந்து உலகெல்லாம் புகழ் பரப்பி நிற்கும் மொழிதான் எங்கள் தமிழ் மொழி.

முன்னர் எவ்வாறு சிறந்து விளங்கியதோ, அவ்வாறே இன்றும் சிறப்புற்று விளங்குகின்றது தமிழ் மொழி. சங்ககாலந்தொட்டு பல சான்றோர் களினாலும் பேணிப் பாதுகாக்கப்பட்ட மொழி தமிழ்மொழி. ஆகவே தான், தமிழ் மொழி இன்றும் அழியாமல் நிலைத்து நிற்கின்றது.

தமிழுக்காகப் பிறந்த புரட்சிக் கவி பாரதிதாசன் தமிழ்மேல் கொண்ட மோகத்தால் தமிழை, தன் உயிரை யும் விட மேலாக நேசித்தார்.

"தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று தமிழ்மொழியை சிறப்பித்து வாழ்த்துகின்றார். தமிழ் அன்னைக்கு விழா எடுக்கும் போது, தமிழை உலகறிய எடுத்துக் காட்டியவர்களைக் கௌர விக்கும் விழாவாகவும் இது கொண்டாடப்படுகின்றது. தமிழுக்காகப் பாடுபட்ட பெரியோர் களுள் பாரதிதாசன், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், "முத்தமிழ் வித்தகர்" சுவாமி விபுலானந்தர், புலோலியூர் சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

அரியகுமார் யசிகரன், (தரம் 10, யா / ஆழியவளை, சி.சி.த.க. வித்தியாலயம்.

உலகிலேயே மிகப் பெரிய புத்தகக் கண்காட்சி பிராங்பர்ட் நகரில் நடக்கிறது. இதில் 4 லட்சம் புத்தகங்கள் இடம் பெறுகின்றன.

எல்லாவித சமூக விஷயங்கள் பற்றிய புத்தகங்களும் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

## மிகப்பழைய டைனோசர் கண்டுபிடிப்பு



உலகிலேயே மிகச் சிறிய டைனோசரின் எலும்புக் கூட்டை அமெரிக்க — ஆர்ஜெண்டினா விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆர்ஜெண்டினாவில் ஆன் டிஸ் மலையடிவாரக்காட்டுப் பகுதியில் இந்த டைனோசர் கிடைத்துள்ளது.

இப்போது கண்டு பிடிக்கப் பட்டுள்ள டைனோசரின் நீளம் 102 cm இதன் எடை 11kg ஆகும். 4 கால்களைக் கொண்ட இந்த மிருகம் இருபத்தியிரண்டரைக் கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

ஆர்ஜெண்டினாவில் சான்யுவான் நகரிலுள்ள நஷனல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆப்ரெடோ மோனெட்டா என்னும் தொல் பொருள் நிபுணரும், அமெரிக்க நிபுணர் பால் செரேனோவும் கூட்டாக இணைந்து இந்த டைனோசரைக் கண்டு பிடித்தனர்.

இந்த டைனோசர் "யோரப்டர்" என்னும் வகையைச் சேர்ந்தது. உலகின் முதலாவது டைனோசரை அடுத்து 50 லட்சம் அல்லது 1 கோடி ஆண்டு களுக்குப் பிறகு இந்த வகை டைனோசர் வாழ்ந்திருக் கக் கூடும் என்று விஞ் ஞானிகள் நம்புகிறார்கள். இதன்பிறகு மேலும் பதினாறரைக் கோடி ஆண்டு காலத் துக்கு டைனோசர்கள் பூமியில் வாழ்ந்தன. சுமார் ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்புதான் அவை அடியோடு அழிந்து போயிருக் கின்றன என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

கு.ருத்ரநாத், தரம் — 08,
யா / இந்துக் கல்லூரி.

# ஒரு நாள் போட்டிகளின் போது 25 கோடி டொலர் சூதாட்டம்

## ஐ.சி.சி. தலைவர் கூறுகிறார்

ஒவ்வொரு ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் போதும் 25 கோடி டொலர் சூதாட்டம் நடைபெறுகிறது. இவ்வாறு சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவர் மல்கம் கிறே கூறியுள்ளார்.

ஐ.சி.சியின் புதிய சின்னத்தை வெளியிடும் வைபவம் கடந்த 10ஆம் திகதி லோர்ட்ஸில் நடைபெற்றது. இவ்வைபவத்தின்போது செய்தியாளர்களிடம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


மல்கம் கிறே

''இதே அளவு தொகை டெஸ்ட் போட்டிகள் தொடர்பாகவும் பந்தயம் கட்டப்படுகிறது. ஐ.சி.சியின் ஊழல் ஒழிப்புக் குழுவின் விசாரணைகளில் இருந்து இது தெரிய வருகிறது. இவ்வாறு மல்கம் கிறே கூறினார்.

ஊழல்கள் காரணமாக அனுசரணையாளர்களைப் பெறுவதில் பாதிப்பு ஏற்பட்டதா என அவரிடம் வினவப்பட்டது.

''நிச்சயமாக ஆம். 16 மாதங்களுக்கு முன் சூதாட்டம் அம்பலமாகியபோது மிகவும் சிக்கலாக இருந்தது.'' இவ்வாறு கிறே கூறினார்.

''இதேவேளை தொடர்ந்தும் சூதாட்டம் நடைபெறுகிறது. கிரிக்கெட் வீரர்களை மோசடிக்ளில் ஈடுபடுத்தியோர் தொடர்ந்தும் இயங்குகின்றனர். நாம் அதைத் தோற்கடித்துவிட்டோம் எனக் கூற முடியாதுள்ளது. எனினும் அதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவுள்ளோம்.

வீரர்கள், நடுவர்கள், அதிகாரிகள் ஆகியோர் எவ்வித சந்தேகத்திற்கும் உரியவர்கள் அல்லர் என்பதை உறுதிப்படுத்தக்கூடியதாக அது அமையும்.

பொய்பேசுவதை இனம் காண்பதற்காக பயன்படுத்தப்படும் 'லை டிடெக்டர்' எனும் கருவி மூலமான சோதனைக்கு வீரர்கள், நடுவர்கள், அதிகாரிகள் ஆகியோர் உட்படுத்தப்பட வேண்டும்.' இவ்வாறு தம்மை இனம் காட்ட விரும்பாத தேசிய அணித் தலைவர் ஒருவர் கூறியுள்ளார். இவ்வாறு சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட் கூறியுள்ளார்.

ஒருநாள் போட்டிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்பதை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் மல்கம் கிறே கூறினார்.

''இதேவேளை ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தப்படுவதால் பாகிஸ்தானில் நடைபெறவிருந்த பல கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதனால் பாகிஸ்தானில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள போட்டிகளை வேறு நாடுகளில் நடத்துவதற்கும் ஆலோசிக்கப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாகவும் லைடிடெக்டர் கருவி சோதனை நடத்துவது தொடர்பாகவும் அடுத்த வாரம் நடைபெறவுள்ள ஐ.சி.சி மாநாட்டில் முடிவெடுக்கப்படும். இவ்வாறு மல்கம் கிறே தெரிவித்துள்ளார்.

## இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கான ஊதியம்:

# டெஸ்ட் போட்டிக்கு ரூ. 54,000 ஒரு நாள் போட்டிக்கு ரூ. 45,000

''சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வீரர்களுக்குத் தலா 54,000 ரூபா வழங்கப்படுகிறது.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களுக்குத் தலா 500 அமெரிக்க டொலர்களுக்குச் சமமான தொகை (45,000 ரூபா) வழங்கப்படுகிறது.''

இவ்வாறு பிரதம மந்திரி ரத்ன சிறி விக்ரமநாயக்கா கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதில் அளிக்கும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.


இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் சனத்

''தற்போது கிரிக்கெட் தேர்வுக் குழுவில் ரி.பீ. கேல்கமுவ தலைமையில் நான்கு உறுப்பினர்கள் உள்ளனர். இந்த உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை. வெளிமாவட்டங்களில் போட்டி நடக்கும் போது அவர்களுக்கு உணவு, தங்குமிடம் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

தொடர்ச்சியாக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவர் என கருதப்படும் 13 வீராகளுடன் மாத்திரம் கிரிக்கெட் சபை ஒப்பந்தமொன்றைச் செய் துள்ளது.

கிரிக்கெட் வீரர்களுக்கான கொடுப்பனவுகளுக்கு வருமான வரிவிலக்கு இல்லை.'' இவ்வாறு பிரதமர் கூறியுள்ளார்.

# கூடுதல் வருமானம் பெறும் ஆஸி. வீரராகிறார் தோர்ப்

ஒலிம்பிக் நீச்சல் சம்பியனான இயன் தோர்ப் அவுஸ்ரேலியாவின் ஆகக் கூடுதலான வருமானம் பெறும் வீரர் என்ற இலக்கை நோக்கி முன்னேறி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கோல்ப் வீரரான கிரேக் நோர்மன் தற்போது கூடுதலான வருமானம் பெறுகின்ற ஆஸி விளையாட்டு வீரராக உள்ளார்.


இயன் தோர்ப்

ஆனால் தோர்ப் 50லட்சம் டொலர் பெறுமதியான மூன்று வர்த்தக ஒப்பந்தங்களில் கைெயழுத்திட்டுள்ளதாக தோர்பின் முகாமையாளர் கடந்த வாரம் அறிவித்துள்ளார்.

18வயதான இயன் தோர்ப் ஜப்பானிய தொலைக்காட்சி நிறுவனமொன்றுடன் 3வருட ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளார்.

அடிடாஸ் நிறுவனத்துடன் விளம்பர நிகழ்ச்சிகளில் பங்கேற்பது தொடர்பாக ஐந்து ஆண்டுகளுக்கான ஒப்பந்தமொன்றையும் அவர் செய்துள்ளார்.

இவற்றின் மூலம் அமெரிக்காவின் கோல்ப் வீரர் டைகர் வூட்ஸ், கூடைப் பந்தாட்ட வீரர் மைக்கல் ஜோர்டான் ஆகியோரின் வருமானத்துக்கு நெருக்கமாக இயன் தோர்ப்பின் வருமானமும் உயர்ந்துள்ளது.

கெலஃப்னி இன்டர்நெஷனல் நிறுவனத்தின் தயாரிப்புகளுக்கும் விளம்பர மொடலாக பணியாற்றவுள்ளார் தோர்ப்.

ஒக்டோபர் 6ஆம் திகதி தனது 19ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினார். கடந்த சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்றார். அப்போது அவருக்கு வயது 17 மட்டுமே.

இவ்வருடம் ஜப்பானின் புகோகா நகரில் நடைபெற்ற உலக நீச்சல் போட்டிகளில் 6 தங்கப்பதக்கங்களையும் அவர் பெற்றார்.

தற்போது அவுஸ்திரேலியாவின் ஆகக்கூடுதலான வருமானம் பெறும் விளையாட்டு வீரரான கிரேக் நோர்மன் உலகின் முன்னாள் முதல் நிலை வீரர் ஆவார்.

1993ஆம் ஆண்டிற்குப் பின்னர் முக்கிய போட்டிகள் எதிலும் அவர் பெற வில்லை.

2000ஆம் ஆண்டில் 26.3 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவர் வருமானமாகப் பெற்றுள்ளார் என மதிப்பிடப்படுகிறது. இவற்றில் அரைவாசிக்கும் மேற்பட்டவை ஒப்பந்தங்கள் மூலமாக கிடைத்தவையாகும். இவ்வாறு அவுஸ்திரேலியப் பத்திரிகையொன்று தெரிவிக்கிறது.

## 2006 உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள்:

# ஐந்து இடங்கள் வேண்டும் ஆசிய சம்மேளனம் கோரிக்கை

''2006ஆம் ஆண்டு உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளுக்கு ஆசிய கண்டத்திலிருந்து 5 நாடுகள் நேரடியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.'' இவ்வாறு சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்திடம் ஆசிய கால்பந்தாட்டக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

கடந்த 10ஆம் திகதி ஆசிய கால்பந்தாட்டக் கூட்டமைப்பின் புதிய சின்னம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இவ்வைபவத்தில் உரையாற்றும்போதே அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் பீட்டர் வேலப்பன் மேற்கண்டவாறு கூறினார்.

''கால்பந்தாட்டம் ஒரு விளையாட்டு எனும் நிலையிலிருந்து ஒரு தொழிற்துறையாக பரிணாமம் பெற்றுள்ள புதிய ஆயிரமாம் ஆண்டில் நாம் காலடி வைத்துள்ளோம்.

ஆசியாவில் 3.2 பில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இது உலக சனத்தொகையில் 60 சதவீதமாகும்.

ஒரு கூட்டமைப்பு என்ற வகையில் சர்வதேச அரங்கில் ஒரு முக்கியமான பாத்திரத்தை நாம் வகிக்கிறோம்.

2006ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளின் இறுதிச் சுற்றுக்கு ஆசியா விலிருந்து நேரடியாக 5 நாடுகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று கோரும் போராட்டத்தை ஆசிய சம்மேளனம் தொடர்ந்து மேற்கொள்ளும்.'' இவ்வாறு பீட்டர் வேலப்பன் கூறினார்.

தற்போது உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளுக்கு ஆசியாவிலிருந்து 4 நாடுகளே நேரடியாகத் தெரிவு செய்யப்படுகின்றன. 5ஆவது அணி ஐரோப்பிய நாடுகளுடன் போட்டியிட்டு வெற்றியீட்டுவதன் மூலம் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது.

''போட்டிகளில் அனுமதிக்கப்படும் நாடுகளின் எண்ணிக்கைப் பற்றிய பிரச்சினைக்கு சர்வதேச சம்மேளனம் தீர்வு காணாவிட்டால் 2002ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளைப் பகிஷ்கரிப்போம்.'' இவ்வாறு 1999 ஆம் ஆண்டில் ஆசிய கூட்டமைப்பு எச்சரித்தது. எனினும் இப்போராட்டம் தொடரப்படவில்லை.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# ஸ்ரீவ் வோவுக்கு இம்ரான் ஆதரவு

அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ்வோவுக்குத் தற்போது 36 வயது. அடிக்கடி காயங்கள் உபாதைகளுக்கும் உட்படுகிறார். இதனால் அவர் ஓய்வுபெற்றுவிட வேண்டுமென சிலர் கூறுகின்றனர்.


இம்ரான்

ஆனால் முன்னாள் பாகிஸ்தான் அணித் தலைவரான இம்ரான் கான் ஸ்ரீவ்வோவுக்குஆதரவு தெரிவித்துள்ளார்.

''இன்றைய கிரிக்கெட் உலகில் சிறந்த அணித்தலைவராக ஸ்ரீவ் வோ உள்ளார். அவுஸ்திரேலிய அணியின் மறுமலர்ச்சிக்குக் காரணமானவர் ஸ்ரீவ் வோ. நான் ஒரு அவுஸ்திரேலியராக இருந்தால் அவருக்கு இயலுமான காலம்வரை விளையாடுமாறு கோருவேன்.

சிறந்த மனோதிடம் மிக்க, ஒழுக்கமுள்ள வீரர் அவர். இன்னும் பல வருடங்கள் அவர் விளையாட முடியும் என நான் நம்புகிறேன். இவ்வாறு இம்ரான் கான் கூறியுள்ளார்.

ஸ்ரீவ்வோ தசைப்பிடிப்பு காரணமாக இங்கிலாந்துடனான நான்காவது டெஸ்ட் போட்டியில் விளையாடவில்லை. அத்துடன் அண்மையில் ஆரம்பமான அவுஸ்திரேலிய முதல்தர போட்டிகளிலும் அவர் பங்குபற்றவில்லை. இதனால் 36 வயதான ஸ்ரீவ் வோ ஓய்வுபெறும் காலம் நெருங்குகிறது என பலர் கூறுகின்றனர்.

தலைசிறந்த சகலதுறை கிரிக்கெட் வீரர்களில் ஒருவரான இம்ரான், தமது 39 ஆவது வயதுவரை அவர் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

# நான்கு நாடுகளுக்குத் தண்டனை!

வயது அடிப்படையிலான கால்பந்தாட்டப் போட்டிகளில் கூடிய வயதுடைய வீரர்களை அணியில் சேர்த்து விளையாடியமைக்காக 5 ஆசிய நாடுகள் தண்டிக்கப்பட்டுள்ளன.

தாய்லாந்து, நேபாளம், ஓமான், ஈரான், பங்களாதேஷ் ஆகியனவே இந்நாடுகளாகும்.

கடந்த வருடம் நடைபெற்ற 16 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டியில் கூடிய வயதுடைய வீரர்களை இந்நாடுகள் தமது அணியில் சேர்த்திருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அணிக்கும் தலா 10,000 டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்தவருடம் நடைபெறவுள்ள 17 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டியில் பங்குபற்றவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற போட்டிகளில் 5 நாடுகளைச் சேர்ந்த 13 வீரர்கள் கூடிய வயதுடைய வீரர்கள். அவர்களுக்கு 2 வருடம் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவ்வணிகளின் முகாமையாளர்களுக்கு ஒருவருடம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆசிய கால்பந்தாட்டக் கூட்டமைப்பினால் இத்தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் இவ்வமைப்பு வெளியிட்ட அறிக்கையொன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

''வயது கூடிய வீரர்களை இனம்காண்பதற்கு எக்ஸ்ரே பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனினும் ஆசிய கால்பந்தாட்டக் கூட்டமைப்பினால் விதிக்கப்பட்ட இத்தண்டனை அமுல்படுத்தப்படும்.'' இவ்வாறு கோலாலம்பூரில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடொன்றின் பின்னர் ஆசிய கால்பந்தாட்டக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பீட்டர் வேலப்பன் அறிவித்தார்.

# சாவ் விளையாட்டு விழா மார்ச்-இறுதியில் ஆரம்பம்

10ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை அடுத்தவருடம் மார்ச் 30 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 8ம் திகதி வரை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.'' இவ்வாறு இலங்கை ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

''போட்டிகளில் பங்குபற்றும் நாடுகளில் ஒலிம்பிக் குழு அதிகாரிகளுடன் ஒரு நாள் மாநாடொன்றை பாகிஸ்தான் அதிகாரிகள் நடத்தினர்.

இந்தியாவைத் தவிர்ந்த ஏனைய நாடுகளின் உயர் அதிகாரிகள் இதில் பங்குபற்றினர். எனினும் இந்தியாவுக்கும் புதிய திகதி பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் அதிகாரிகள் போட்டிக்கான ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

இதே வேளை இந்தியா இப்போட்டிகளில் பங்குபற்றுமா என்பது தொடர்ந்தும் சந்தேகத்திற்கிடமாகவே உள்ளது.

இந்திய ஒலிம்பிக் குழுத் தலைவர் சுரேஷ் கல்மாடி பாக். ஒலிம்பிக் குழுவினரையும் போட்டி ஏற்பாட்டாளர்களையும் சந்திக்கவிருந்தார். எனினும் அவர் இக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

இந்திய - பாகிஸ்தானிய விளையாட்டுத் துறை உறவு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பல கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதில்லை என இந்தியா தீர்மானித்தால் அது ஆச்சரியத்திற்குரியதல்ல என்று கருதப்படுகிறது.'' இவ்வாறு ஹேமசிறி பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இப்போட்டி ஒக்டோபர் 6 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்தது. அமெரிக்கா-ஆப்கானிஸ்தான் மோதல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

# கலாசார விழுமியங்களுக்கு ஓர் அச்சுறுத்தல்




அண்மைக்காலத்தில் திருமலை திரையரங்குகளை தரக்குறைவான படங்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

இவை சமூக, கலாசார விழுமியங்களுக்கு ஓர் அச்சுறுத்தல் என்று ஆதங்கம் தெரிவிக்கப்படுகிறது.

இன்று வடக்கு, கிழக்கு பகுதிகள் மட்டுமன்றி நாடு முழுவதுமே நிம்மதி இழந்து தவிக்கிறது. இந்தக் காலகட்டத்தில் ஒவ்வொருவரின் மனதிலும் ஏற்பட்டிருக்கும் காயங்களை ஆற்றுவதற்கு இத் திரைப்படங்கள் உதவுமா என்ற கேள்வியும் எழுகிறது.

திரைப்படம் மனித சமூகத்துக்கு வழிகாட்டும் ஓர் ஊடகமே. இதுவே மனித சமுதாயத்தின் தேவையும். இதனை ஒரு சில திரைப்படங்கள் நிறைவு செய்கின்றன. ஆனால் வெளிவரும் திரைப்படங்களில் அநேகமானவை தரம் குறைந்தவை. ஆபாசமானவை. குழந்தை குட்டிகளுடன் குடும்பமாகச் சென்று பார்க்க முடியாதவை.

வயது வந்தோருக்கான ஆபாசத் திரைப்படங்கள் தேவையா என்று குடும்பப் பொறுப்புள்ள பெற்றோர் மனக் கிலேசம் அடைகின்றனர்.

வீதிகளில் இந்தப் படங்களின் விளம்பரங்களைப் பார்த்தாலே கண் கூசுகிறது என்கிறார் ஒரு முதியவர்.

இவ்வாறான தரம் குறைந்த சினிமாப் படங்கள் தருவிக்கப்படுவதை அரசு தடைசெய்ய வேண்டும் என்று சமீபத்தில் யாழ். மாநகரசபை தீர்மானம் நிறைவேற்றி இருந்தது.

எனவே திருமலையிலும் இப்படியான திரைப்படங்களுக்கு எதிராக குரல் கொடுக் கப்பட வேண்டும் என்கின்றனர் சமூக நலன் விரும்பிகள்.

பல்வேறு பிரச்சினைகளின் விளிம்பில் நின்று கொண்டிருக்கும் இளம் சமூகத்தினரிடையே இவ்வாறான படங்கள் நல்ல சிந்தனைகளையோ அல்லது நல்ல உளப்பாங்கையோ வளர்க்கப் போவதில்லை. சமூகத்துக்கு நன்மை தராத இத்தகைய தரம் குறைந்த படங்கள் தடுக்கப்பட வேண்டும்.

—சுஜா

# சேவையில் இணைக்க கோரிக்கை

வடக்கு – கிழக்கு மாகாண அரசாங்க பொது (சிற்) ஊழியர் சங்கம், வடக்கு கிழக்கு மாகாணத்தில் சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றுவோரை நிரந்தரமாக்கக்கோரி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல சுகாதார தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என சமீபத்தில் மட்டக்களப்பில் நடைபெற்ற இந்த சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

''தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனம் போல சுகாதார தொண்டர்களுக்கும் அவர்களது அடிப்படை கல்வித் தகைமை, சேவைக்காலம் என்பவற்றை கருத்திற் கொண்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்.

''பல வருடகாலமாக எந்தவித வேதனமும் இன்றி ஒரு தொண்டராக சேவையாற்றிவரும் இவர்களுக்கான நிரந்தர நியமனங்களை கூடிய விரைவில் மனிதாபிமான அடிப்படையில் வழங்க வேண்டும்'',

இவ்வாறு சங்கத்தின் செயலாளரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

— எஸ். எஸ். ஆர்.

# பித்தன் பதில்கள்

ரமணன், கொடிகாமம்.
கே : இப்போதெல்லாம் கண்டதும் காதல் கொண்டு விடுகிறார்களே!
ப : காதல் மட்டுமல்ல, விவாகரத்தும் கண்ட கண்டபடிதான் நடக்கிறது.

வசந்தன், யாழ்ப்பாணம்.
கே : திருமணம் முடித்தாலும் பெண்கள் பின்னால் சுற்றும் ஆண்கள் பற்றி...!
ப : ஆண்கள் வண்டுக்கு ஒப்பிடப்படுவதைத் தவறாக அர்த்தம் புரிந்து கொண்டுள்ளவர்கள்.



சுமதி, கொழும்பு.
கே : யாகத்தையும் தொண்டர்களின் தியாகத்தையும் நம்பிய ஜெயலலிதா இப்போது என்ன செய்கிறார்?
ப : பெக்கேலின் வாதத்தை நம்பிக் கொண்டிருக்கிறார்.

சுந்தரலிங்கம், வவுனியா.
கே : மனைவியைக் காதலிக்கலாமா?
ப : யார் மனைவியை என்று சொல்லவில்லையே!

உமாகாந்தன், மொனறாகலை.
கே : கமலின் 'ஆளவந்தான்' படத்தின் சில காட்சிகளைப் பார்த்தேன். மொட்டைக் கமல் அசத்துகிறாரே!
ப : ஆமாம். நடிப்பிற்காகத் தன்னை வருத்திக் கொள்வதில் கமல் சாதனையாளர்தான்.

பலராமன், ரக்குவானை.
கே : அழகான பெண்கள் ஆபத்தானவர்களா!
ப : அழகிருக்கும் இடத்தில் ஆபத்தும் இருக்கும் என்பதே உண்மை.

உஷாகிரன், அம்பலாங்கொடை.
கே : உண்மையைச் சொல்லுங்கள் பித்தரே! நீங்கள் மனைவிக்குப் பயந்தவர் தானே?
ப : மனைவியை அனுசரித்தால்தானே மனை களை கட்டும்.

ரமேஷ், களுதாவளை.
கே : கவர்ச்சியின் எல்லையைத் தாண்டிய தற்போதைய நடிகை யார்?
ப : கும்... கும் மும்தாஜ்தான்.

றமீதா, முறக்கொட்டாஞ்சேனை.
கே : மாணவிகளையே பலாத்காரம் செய்யும் ஆசிரியர்கள் பற்றி...!
ப : ஆசான் வடிவில் திரியும் ஆசாமிகள்.

ப்ரியநிலா, புத்தளம்.
கே : தாய்ப்பால் கொடுத்து வளர்த்த தாயைத் தாரம் வந்ததும் பாரமாக நினைப்பதேன் பித்தனே!
ப : தாலி என்ற லைசென்ஸ் தாரத்திற்குக் கிடைத்து விடுவதனால் அவள் ஓட்டுநரும் ஆகிவிடுகிறாள்.

தேவிகா, இணுவில்.
கே : பித்தா! காதலியைக் கூட கைவிடுமளவுக்கு சீதனப் பேயாய் அலையும் ஆடவர் குறித்து.
ப : எனக்கு சேரவேண்டியதைச் சீதனமாய் தாவெனக் கேட்பதும் பெண்கள் தான். என் மகனுக்கு இவ்வளவு சீதனம் வேண்டும் என்று கேட்பதும் பெண்கள் தான்.

எஸ்.எஸ். நாதன், வெள்ளவத்தை.
கே : பித்தன் ஐயா! நம் நாட்டில் விலைவாசி இன்னும் அதிகரிக்குமா?
ப : சீட்டுக் குலுக்கிச் சரிபார்க்க வேண்டிய கேள்வி இது! ஆனால், இரண்டு துண்டுச் சீட்டுக்களிலும் 'ஆம்' என்று எழுத வேண்டியது அவசியம்.



ஐங்கரன், பருத்தித்துறை.
கே : காதலிக்கத் தெரியாத பெண்ணுக்கும் காதலிக்கத் தெரியாத ஆணுக்கும் இடையில் வாழ்கை எப்படி இருக்கும்.
ப : தாமரையிலைத் தண்ணீர் போல இருக்கும்.

ரஜிதா, பருத்தித்துறை.
கே : வீட்டுக்குப் பயந்து காதலியை கைவிடும் ஆண்கள் பற்றி.
ப : பெருச்சாளிக்குப் பயந்து பிடித்த எலியை விடும் பூனை போன்றவர்கள்.

ஷஞ்சயா, மல்வானை.
கே : குண்டாக இருந்தால் குற்றமா பித்தனே?
ப : பின்னால் கஷ்டப்பட வேண்டி வரும்.



கூ. நிரபராதி, முள்ளியவளை.
கே : பித்தனே! எலியின் தலையாக இருப்பது, சிங்கத்தின் வாலாக இருப்பது இதில் எது நல்லது?
ப : எலியின் தலையாக இருப்பதில் ஆபத்து அதிகம். பொறியில் மாட்டினால் அம்போ! சிங்கத்தின் வாலாக இருப்பதில் எதுவிதப் பெருமையும் இல்லை. எப்போதும் பின்னால் தொங்க வேண்டி வந்துவிடும்! புலியின் மீசையாக இருக்க முயற்சித்துப் பாருங்கள்.

திருமதி முஷாஃபிர், காலி.
கே : சமையலில் உதவி செய்வது ஆணுக்கு இழுக்கு என்கிறார் எனது கணவர். பித்தா வழி கூறும்!
ப : இரண்டு நாள் ஸ்ட்ரைக் செய்து பாரும் தானாக வழிக்கு வருவார்.

றிஸ்மத், கண்டி.
கே : நடிகைகளுக்கு அரசியல் தேவையா?
ப : கவர்ச்சியினால் வாழ்க்கையின் முற்பகுதியை ஓட்டி விடுவார்கள். பிற்பகுதி வாழ்க்கையை ஓட்ட வழி வேண்டுமே!

ச. வசீகரன், நீர்கொழும்பு.
கே : ஜனநாயகத்தின் பலவீனம் எது?
ப : 'மக்கள் மாற்றத்தை விரும்புவது' – இது இரண்டுக்கும் பொருந்தும்.

கே. ஜெகன், மட்டக்குளி.
கே : இந்த முறை தீபாவளிக்கு ரஜினி படம் இல்லை. எதிர்வரும் தீபாவளிக்காவது ரசிகர்களுக்கு ரஜினி விருந்து கொடுப்பாரா?
ப : அவர் பாணியில் சொல்வதானால் வரலாம். வராமலும் விடலாம்.

ஜெயந்தன், இணுவில்.
கே : எனது அபிமான நடிகர் அஜித்குமார் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?
ப : வெள்ளையும், சுள்ளையுமாக இருப்பவர் வேடங்களை மாற்றி வெளுத்துக் கட்டுகிறார். சைவமாய் அசைவமாய் ஆங்காங்கே தொட்டுக் கொள்வதிலும் வெளுத்துக் கட்டுகிறாராமே.

அருள்மொழிவர்மன், கொடிகாமம்.
கே : எந்தச் சந்தர்ப்பத்தில் பித்தனே மனைவியானவள் தன் கணவனை விவாகரத்துச் செய்ய நினைப்பாள்?
ப : ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ கணவன் நிர்ப்பந்திக்கும் போது!

சசி, கொக்குவில்.
கே : வடிவேலு அதிகம் கூச்சல் போடுகிறாரே ஏன்?
ப : ஒருவன் ஒருவனை உதைப்பதை வேடிக்கை பார்த்து சிரித்த கூட்டத்துக்கு கூச்சலிடுவதும் ஜோக்காகத் தான் தெரியும் என்ற நம்பிக்கை தான்.

எல். சதீஸ், வவுனியா.
கே : அழகிய பெண்களை 'டச்' பண்ண வழி ஒன்று சொல்லுங்களேன்!
ப : சினிமாக்களில் வரும் உத்தியான 'பாதையைக் கடக்கத் தவிக்கும் கூலிங் கிளாஸ் குருடன்' ஆக வேண்டியது தானே!



# வாசகர் இதயம் பேசுகிறது




வந்து விடு; சுடர் ஒளியே! நிஜமாய் நித்தம் நித்தம் வட புலத்தில் தொடர்கின்ற யுத்தத்தை சத்தமில்லாது தருகின்ற பத்திரிகை நீயே தான்! தமிழ் ஈழமதை செப்பனிட்டு வெற்றி கொள்ளும் தலைவனுக்கு பாரெங்கும் வெற்றி முழக்கமிட்டு மேற்குலகும் கைகுலுக்க சுடர் ஒளியே வந்து விடு!

கி. ராஜ்குமார், அட்டன்.

வாரா வாரம் சுடச்சுடச் செய்திகளை அள்ளித்தரும் சுடர் ஒளியே......! செப்டெம்பர் 30–2001 இல் வெளியான ''கவலையால் நிலைமாறும் அமெரிக்கா'' ஆப்கான் யுத்தம் உலக அழிவுக்கா? போன்ற செய்திகள் அற்புதம். வாழ்த்துக்கள் சுடர் ஒளிக்கே!

பாபு, செட்டிகுளம்.

வளர்ந்து புகழ் பரப்பும் சுடர் ஒளி மேலும் சிறப்புற வாழ்த்துக்கள். கடந்த வாரம் செப்டெம்பர் மாதத்தில் சிறப்புற்றவர்களைப் பற்றி அறியத்தந்து அசத்திவிட்டாய். மேலும் அதிகாரிகளின் பிற்போக்குத்தனத்தை தேரடி அரட்டை பளிச்சென்று கூறியது. அனைத்து அம்சங்களும் அட்டைப்படமும் (முன்பக்கம்) நன்றாகவே உள்ளன.

அளவை கலைக்கரன்; வவுனியா.

2001 செப்டெம்பர் 30 சுடர் ஒளியின் தலைப்பு சிறப்பு!

தினமும் வெளிவரவிருக்கும் சுடர் ஒளியை ஆவலுடன் எதிர்பார்ப்பதில் வாசகர்கள் வழிமேல் விழிவைக்கிறார்கள்!

அரசியல் அலசல்கள் அசத்திச் செல்கின்றன. ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தேர், தீர்த்தோற்சவ மலர் பக்திச் சுவையூட்டும் சிறப்பம்சம். கீதையின் அமுத வாக்கோடு கூடிய பகவானின் படம் மிகமிக அழகானது!

கவிதைப்புனலில் கறையான்கள் கருத்தாளம் மிக்கது! காலத்துக்கேற்ற கவிதை புறப்படு பெண்ணினமே! புதுமை படைக்கிறது! சுரண்டல் சுவீப் சுவையூட்டி நிற்கிறது!

அ. அரசரெத்தினம், சேனையூர்–06

உரிமையுடன் சுடர் ஒளிக்கு; சமீபத்திலேயே உன்னில் சங்கமமானவன் நான். நீ சுமந்து வருவனவற்றில் தேரடி அரட்டை, பித்தன் பதில்கள், மலையகக் கண்ணோட்டம் மற்றும் சூடான அரசியல் தகவல்கள் என்பன என்னைக் கவர்ந்தவைகளாகும். மற்றும் கவிதைப் புனல் தரும் கவிதைச் சமருக்கு ஒரு சபாஷ். வாழ்க சுடர் ஒளி.

த. பாலசுப்பிரமணியம், வெதமுல்லலையூர்.

ஒளிச் சுடரே.....திக்கெட்டும் நீயும் திங்களாய் ஒளிர்ந்து தித்திக்கும் சுவையுடன் எங்கெங்கும் வளர்ந்து பக்கங்கள் அனைத்திலும் இங்கிதம் சுமந்து, மக்களின் மனங்களில் மங்காமல் மிளிர்ந்து சொக்கவைக்கும் அளவில் சங்கங்கள் மலர்ந்து சாகாவரம் பெற்ற செங்கதிராய் ஒளிர வாழ்த்துகிறேன்.

து. பிரபாஹர், ஹப்புத்தளையூர்.

சுடச்சுடச் செய்திகளை உடனுக்குடன் தரும் சுடர் ஒளியே! ஒக்டோபர் 07–2001 இல் வெளியான ''புலிகளின் பதிலடி எங்கே'' என்ற செய்தி அசத்திவிட்டது.

கே. அஜித், செட்டிகுளம்.

பல்வேறு தடைகளையும் தாண்டி யாழ்மண்ணில் வாசகர்களின் கரங்களில் வாரா வாரம் தவழும் சுடர் ஒளியே! நீ சுமந்து வரும் தேரடி அரட்டை, ''கவிதைப்புனல்,'' மருத்துவ ஆலோசனை யாவும் விருப்புடன் நான் சுவைப்பவை. தொடரும் உன் சேவைகள் யாவும் எம்மண்ணிற்குப் புகழ் சமைப்பவை!!! வளரட்டும் உன் விதைப்புரை.....

க. நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

# கல்வி, கணினி தொழில்நுட்பக் கற்கைநெறி சிறப்பிதழ்

## வெளிநாட்டுக் கல்விக்கு உதவும் M.S.LANKA

இலங்கை வாழ் மாணவர்கள் மற்றும் தொழில்புரிவோருக்கு சுபீட்சத்தையும் வளமான எதிர்காலத்தையும் பெற்றுக் கொடுக்கின்றது M.S. Lanka நிறுவனம்.

பல்வேறுபட்ட துறைகளில் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்கள் வெளிநாடுகளில் உயர் கல்வி பெறுவதற்கு வழி செய்கிறது இந்த நிறுவனம்.

இந்த நிறுவனம் சிறந்த பயிற்சி, வழிகாட்டல் என்பனவற்றை மாணவர்களுக்கு வழங்குவதனால் இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் வெளிநாட்டுக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் தமது உயர்கல்வியை வெற்றிகரமாகத் தொடர முடியும்.

கல்விவசதி மாத்திரமன்றி பகுதிநேர தொழில் வாய்ப்புகள், தங்குமிட வசதி மற்றும் இதரவசதிகள் என்பனவும் இந்த நிறுவனத்தினால் மாணவர்களுக்கு மேலதிக சலுகைகளாக வழங்கப்படுகின்றன.

அத்துடன் இந்நிறுவனம் உயர் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சைப்பிரஸ், இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், கனடா, ரஷ்யா, நியூசிலாந்து மற்றும் நோர்வே ஆகிய நாடுகளில் அனைத்து துறைகளிலும் உயர் கல்வி கற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட நாடுகளில் தகவல் தொழில்நுட்பம், முகாமைத்துவம், வங்கியியல், சந்தைப்படுத்தல், நிதியியல் எலக்ரோனிக் மீடியா, ஹோட்டல் முகாமைத்துவம், பொறியியல், மருத்துவம் எனப் பல்வேறு துறைகளில் குறைந்த கட்டணத்தில் புலமைப் பரிசில் அடிப்படையில் மாணவர்கள் உயர்கல்வியைக் கற்க முடியும்.

தேவைகள், ஆலோசனைகள், மேலதிக விவரங்கள் என்பனவற்றை நாடுபவர்கள் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரை நேரடியாக அணுக முடியும். அல்லது 24 மணிநேரமும் சேவையில் உள்ள 077—672084 அல்லது 077—374314 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி, தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.


STUDY IN
LONDON, USA, CYPRUS, NEW ZEALAND

- SCHILLER INTERNATIONAL UNIVERSITY (LONDON CITY COLLEGE)
- UNIVERSITY OF HERTFORDSHIRE
- UNIVERSITY OF GLAMORGAN

INTAKE JAN 2002
REGISTRATION
NOW ON
(FROM 01 OCTORBER 2001)

CYPRUS
Guaranteed Visa Transfer Opportunities to UK & USA University

COURSES AVAILABLE (UK, USA & CYPRUS)

*Business Administration (BBA, MBA., Phd)
*Computer Science (Bsc, Msc)
*Hotel Management
*Marketing
*Management Information System
*Banking & Finance
*Information Systems
*Secretarial Studies
*Nursing Courses
*Engineering Courses
*Shipping Courses ETC

WHAT SPECIAL SERVICES FOR STUDENTS..

*Minimum Down Payment (UK 500f - USA 1000$)
*Free Counselling
*Air Ticket at Discount Rate (Up to 30%)
*Part Time Job Guaranteed

*New Zealand Permenent Residence Visa Colleboration with "Good will Service Limited" New Zealand "General Skill & Family Categories"*

*Our Visiting Consultant from - New Zealand - Very Soon For Appoinment Contact Our Office*



M.S.LANKA (Licence No.: 1745)
RECRUITMENT & TRAVELS (PVT) LTD
379 2/2, 2nd Floor, Galle Road, Wellawatte, Colombo - 06.
( Opposite to Delmen Hospital & National Trust Bank)
Tel :074-513442, 074-517836, 074-518928.
Fax:074-518928.
Mobile:077- 672084, 077-374314.
E-mail:mslanka@visual.lk




## நவீன உலகுக்கு அழைக்கும் RIBS

இன்றைய உலகில் கணினிக் கற்கைகளும், ஆங்கிலமொழிக் கற்கைகளும் வியாபார விஞ்ஞானக் கற்கைகளும் ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமானவையாகத் திகழ்கின்றன.

தரமான இக்கற்கை நெறிகளை வழங்குவதன் மூலம் உங்களை நவீன உலகிற்கு அழைத்துச் செல்வதில் 2 — 1/2 எட்வேட் ஒழுங்கை, கொழும்பு — 03 இல் அமைந்துள்ள Retina Institute of Business Studies பெருமை அடைகிறது. தனது அர்ப்பணிப்புள்ள, வினைத்திறனுள்ள சேவையினால் குறுகிய காலத்தில் பெருமளவு மக்களை நவீன உலகினுள் அழைத்துச் செல்வதில் RIBS பெரும் பங்காற்றி வருகிறது.

ஒவ்வொரு கற்கை நெறியின் முடிவிலும் உலக தரத்தினாலான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் RIBS நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.

வெவ்வேறு வயதினருக்கும், வெவ்வேறு தரத்தினருக்கும் ஏற்றவகையில் ஒவ்வொரு கற்கை நெறியும் அவ்வத் துறைசார் வல்லுநர்களால் மிகவும் நுணுக்கமாகவும், வினைத்திறனாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சிறுவர்களுக்கான கணினிக் கற்கைகள், MS Office - 2000, இணையப் பக்க வடிவமைப்பு, கணினிக் கல்வி டிப்ளோமாவிசுவல்பேசிக்மொழி, வன்பொருள் பொறியியல் டிப்புளோமா, மென் பொருள் பொறியியல் டிப்புளோமா, மின் அஞ்சல் பயிற்சிகள் என RIBS வழங்கும் கணினி சார் கற்கைகள் விரிவடைகின்றன.

## வீட்டில் இருந்தபடியே ஆங்கிலம் கற்பதற்கு அரிய வாய்ப்பு

ஆங்கிலம் அத்தியாவசியமாக உள்ள இந்நவீன உலகில் நேரத்தை மிச்சப்படுத்தி, தபால் மூலம் ஆங்கிலம் கற்கக் கூடிய அரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறார்கள் Distent Education Service நிறுவனத்தினர்.

குறுகிய காலத்துள் ஆங்கில மொழி அறிவை வளர்க்கும் இவர்களது பாடத்திட்டம் மூன்று வகையாகத் தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

* ஆரம்ப டிப்ளோமா — 6 மாதப் பயிற்சி (ஆங்கில அறிவு குறைந்தோருக்கு)
* டிப்ளோமா — 6 மாதகாலம் (க.பொ.த.) (சா.த) ஆங்கில அறிவு கொண்டோருக்கு)
* உயர் டிப்ளோமா — 8 மாத காலம் (க.பொ.த. (உ.த) ஆங்கில அறிவுக்குச் சமன்.

போதனா முறைகள் பிரிட்டிஷ் கவுன்சில் முன்னைநாள் ஆங்கில அத்தியட்சகர் பிரெட் ஒஷன்லன், யுனிசெப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரேமதாஸ உடகம ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

இப்பாட நெறிகள் மிகவும் எளிய முறையில் மாணவர்கள் புரிந்து கொள்ளும் விதமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆங்கில அறிவைச் சரியாகப் பெற்றுக்கொள்ள முடியாத, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ளவர்களுக்கும் சந்தர்ப்பமளிப்பதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

பாடநெறியினை முழுமையாகப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு தரம் வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கக் கூடியதாக இருக்கும் என நிறுவனம் தெரிவிக்கின்றது.

இது சம்பந்தமாக மேலும் விவரங்களை அறிய விரும்புபவர்கள் இலவசக் கை நூலுக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யும் தரத்தைக் குறிப்பிடத் தவறவேண்டாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Mr. A.B.C. De Silva
Director of Education (English),
Distent Educations Service,
22 D, Station Lane, Nugegoda.
Tel : 856769


ஆங்கிலம் கற்கச் சுலபமான வழி


சர்வதேச மொழியாம் ஆங்கிலத்தை வீட்டிலிருந்து கொண்டே திறம்படக்கற்க அரியதோர் சந்தர்ப்பம்!
தொழில் வாய்ப்புப் பெற ஆங்கிலம் அத்தியாவசிய தேவை
வெளிநாட்டில் தொழில் தேடுவோர்க்கு ஓர் வரப்பிரசாதம்!

தபால் மூலம் சிறந்த ஆங்கிலம் கற்பிக்கும் ஒரேயொரு நிறுவனம்!

பாடத்திட்டம் மூன்று தரத்திலானது:

1) ஆரம்ப டிப்ளோமா- ஆறு மாதம்-ஆங்கில அறிவு குறைந்தோருக்கு
2) டிப்ளோமா - ஆறு மாதம்- க.பொ.த (சா/த)அறிவு உள்ளோருக்கு
3) உயர் டிப்ளோமா - எட்டுமாதம் - க.பொ.த (உ/த) ஆங்கிலத்துக்குச் சமன்.

சமீப காலத்தில் 10,000 க்கும் அதிகமான மாணவர்கள் தேர்ச்சியடைந்து, சான்றிதழ்களைப் பெற்று நன்மை அடைந்துள்ளனர்.
தேர்ச்சிபெற்ற, அனுபவம் வாய்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட பாடநெறி!




மேலதிக விவரங்கட்கு :
தபால் மூலமோ, தொலைபேசி மூலமோ

A.B.C De Silva
(Director-English)
Distant Education Service
22D, Station Lane, Nugegoda T.P: 856769

# கல்வி, கணினி தொழில்நுட்பக் கற்கைநெறி சிறப்பிதழ்


## HARROW INTERNATIONAL COLLEGE

**SEPARATE SECTIONS FOR BOYS & GIRLS**

- ☺ Provides Education for London O/L
- ☺ Computer Education from UK to O/L
- ☺ Qualified and Experienced Teaching Staff
- ☺ Good Results at past exams
- ☺ Run by an Experienced Educationist

**ENROL NOW FOR AN EDUCATION WITH COMPUTER TECHNOLOGY**

**HARROW INTERNATIONAL COLLEGE**

**No. 9, Rajasinghe Road, Wellawatte.**

**Tel/Fax: 556972**


## முன்னணியில் BIOS

பயோஸ் BIOS நிறுவனம் கணினிக் கல்வியூட்டும் ஒரு முன்னணி நிறுவனம். புதியவர்களுக்கும், மேலதிக அறிவைப் பெறவிரும்புபவர்களுக்கும் அதிபிந்திய கணினித் தொழில் நுட்பத்தையும், கற்றலுக்கேற்ற சூழலையும் இது தருகிறது.

மாணவர்களுக்கு இணைய வலையமைப்பில் நடைமுறைப்பயிற்சி, இலவச கருத்தரங்குகள், குளிரூட்டப்பட்ட அறைகள், தவணை முறையில் கட்டணங்களைச் செலுத்தும் வாய்ப்பு, 100 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள், சிறுவர்களுக்கும், பாடசாலையை விட்டு வெளியேறும் இளவயதினருக்கும் ஏற்ற பாடநெறிகள், மற்றும் பாடநெறிகளின் முடிவில் அத்தாட்சிப் பத்திரம் வழங்கல் ஆகியவை சிறப்பு அம்சங்கள் ஆகும்.

M.S. office, Photo shop, Corel Draw, Auto Cad and Lotus, Software Engineering, Hardware Engineering, Java, Visual Basic, Windows NT, e-commerce a+, Network +, MCP, MCSD, OCP என்பனவும் கற்பிக்கப்படுகின்றன.

மாளிகாவத்தையில் ராஜபொக்குண மாவத்தையில் பிரதீபா மண்டபத்திற்கு எதிராக BIOS Computer Systems நிறுவனம் அமைந்துள்ளது.

விவரங்களுக்கு மாளிகாவத்தை அலுவலகத்துடன் நேரடியாகவும் 543663 இலக்க தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

## HARROWவில் இருபாலாருக்கும் தனித்தனி பிரிவுகள்

லண்டன் பல்கலைக்கழகத்தின் சாதாரண பொதுத் தராதரப் பரீட்சையை (London GCE O/L Exam) மையமாக வைத்து வெள்ளவத்தை ஹறோ (Harrow) சர்வதேசக் கல்லூரி பாடத்திட்டங்களை வகுத்துள்ளது. நாம் உபயோகிக்கும் பாடப்புத்தகங்களும், பெரும்பாலும் இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்டவையே.

இம்முறை மே மாதம் நடந்த பரீட்சையில் எல்லா மாணவர்களும் சிறந்த முறையில் சித்தியடைந்தார்கள். ஒரு மாணவன் 3 பாடங்களில் அதி விசேஷ சித்தி பெற்றார்.

மிகவும் திறமை வாய்ந்த, வெளிநாடுகளில் கற்பித்த அனுபவமுள்ள, தகைமை சார்ந்த ஆசிரியர் குழு மாணவர்களின் கல்வியில் மிகவும் அக்கறையுடன் செயல்படுகின்றது.

எல்லா மாணவர்களுக்கும் 'வகுப்பு' வாசிகசாலை வசதிகள் (Classlibrary) இருப்பதுடன், நிறைய நூல்களைக் கொண்ட ஒரு வாசிகசாலையும் இருக்கிறது.

மேலும், மாணவர்களின் கணினிக் கல்வி வளர்ச்சிக்கு (Computer Education) பாடசாலைக் கட்டத்திலேயே தனிப்பட்ட ஒரு கணினி நிலையம் (Computer Institute) அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூட நேரங்களில் மாணவர்களும் / மாணவிகளும் KG வகுப்பிலிருந்து O/L வகுப்பு வரையில் கணினிப் பயிற்சி பெறக்கூடிய வசதியும் உண்டு.

கணினிப் பகுதியில் பின்னேரங்களிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. மொறட்டுவ, கொழும்பு பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் வந்து வகுப்புகளை நடத்துகின்றனர். ஏனைய கணினி நிலையங்களை விட நாம் அறவிடும் தொகை, மிகக் குறைவாகவே உள்ளது.

கொழும்பு சாஹிராக் கல்லூரி அதிபரும், முன்னாள் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளரும், சவூதி அரேபியாவில், தனியார் சர்வதேச கல்வி நிறுவனமான (International Islamic Accdemy) என்ற கல்வி ஸ்தாபனத்தை நடத்தியவருமான அனுபவமுள்ள ஒரு கல்விமானாலேயே இக்கல்வி நிலையம் நடத்தப்படுகிறது.


***PRICES SLASHED BY 50% ON ALL COURSES @ BIOS.***

But no reduction in the Course Contents or the Quality of Teaching


| Course | Old Price | New Price |
|---|---|---|
| Diploma in MS Office | 5000/= | 2500/= |
| Diploma in Computer Applications (DCA) | 7000/= | 3500/= |
| Visual Basic | 5000/= | 2500/= |
| MCP (MCSE 2000 Track) | 9000/= | 4500/= |
| Oracle Part 1 | 15000/= | 7500/= |
| Oracle Part 2 | 10000/= | 5000/= |
| Diploma in Web Mastering | 15000/= | 7500/= |




*This special offer is valid only till 31st October 2001.*

Residential Computer Training Programmes at BIOS

FREE Accommodation in Colombo



A rare opportunity!!

for outstation students who wish to study at **BIOS** Computer Education Centre!!

- Introduced by BIOS Computer Systems for the benefit of outstation students.
- Resident students are offered additional practical hours free of charge.
- Accommodation is offered for any Training Programme except for the Kids Computer Courses.
- Enrolment is strictly on a first come first served basis.

**Inquire for more details**

**BIOS Computer Systems**

No 12, Rajapokuna Mawatha, Maligawattha, Colombo - 10.

*(Near the Ruby Cinema)* TP: 543663, 541112

BIOS



# Planning to migrate Canada / Japan

*Learn French in 6 months and gainmore points at the interviews

*Learn Japaneeses in 6 months all 3 alpherbats by Awardwinning Lectures

**TOEFL**

Fully Airconditioned Environment

Students are restricted to 10

**A/L English for A/L Students**

**SPOKEN ENGLISH**

**For Elders, school Leavers & Jop Seekers**

- ★Use of Original latest cassettes and lessons on CD's
- ★Regular Handouts based on the latest materials
- ★More Enough exercises in listening comprehension and structure
- ★Handson training in our modern computer Lab for Answering TOEFL
- ★ Qualified and Experienced Teachers
- ★ Fully Equipped and Air Conditioned Class Rooms
- ★ Computer Assisted Language Learning Facilities

**EXPRESS STREAM 1 MONTH ONLY**

**SOFTWARE ENGINEERING** | **DIPLOMA IN COMPUTER STUDIES**

**GRAPHIC DESIGNING** | **JAVA, C++ / OOP**

**ORACLE 8 i** | **VB 6.0 & SQL SERVER 2000**

**AUTO CAD 2000** | **WEB DESIGNING**

**MS OFFICE 2000** | **MILLENNIUM KIDS**

**FREE E-mail & Internet Training**

**For Further Details Contact :**

**RETINA INSTITUTE OF BUSINESS STUDIES**

RIBS **2-1/2, EDWARD LANE, COLOMBO - 03 TEL: 507781, 507782 FAX: 507781 E-mail : study@retina.lk**

# கிளிநொச்சி மண்ணில் இன்றும் எலும்புக் கூடுகள் அறுவடை!

## இதுவரை 68; காணாமல் போனோர் 184 பேர்



இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத கிளிநொச்சியிலிருந்து மிஸ்டர் க்றோவுக்கு கடிதம் ஒன்று வந்திருந்தது.

அழைப்புக் கடிதம் அது. மிஸ்டர் க்றோ கிளிநொச்சிக்கு ஒருமுறை சிறகடிக்க வேண்டும் என்று நெடுங்கேணியூரான் என்ற வாசகர் அழைப்பு விடுத்திருந்தார்.

கிளிநொச்சியில் அப்படி என்ன விசேஷம்?

நெடுங்கேணியூரான் அதை ஒளிக்காமல் மறைக்காமல் கடிதத்தில் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.


"மிஸ்டர் க்றோ! கிளிநொச்சியில் இன்று மண்வெட்டி விழும் இடங்கள் பலவற்றிலிருந்தும் எலும்புக்கூடுகள் மிதந்து கொண்டிருக்கின்றன. மிதி வெடிகளுக்கும் கண்ணி வெடிகளுக்கும் குறைவில்லை. விவரங்களை எழுதி இத்துடன் அனுப்புகிறேன். சுடர் ஒளியில் அவற்றைப் பிரசுரிக்கக் கோருகிறேன்.

விவரங்கள் சரியானவையா என்ற சந்தேகம் உங்களுக்கு ஏற்பட்டால் தயவு செய்து உடனே கிளிநொச்சிக்கு வாருங்கள். நடப்பதை நேரில் பாருங்கள். அப்புறம் நீங்களே உங்கள் பாணியில் எழுதிச் சுடர் ஒளியில் பிரசுரியுங்கள். உடனே பிரசுரிக்கிறீர்களா, அல்லது கிளிநொச்சிக்கு வருகிறீர்களா?

கடிதத்தின் இந்த வரிகளைப் படித்ததும் மிஸ்டர் க்றோ ஆழ்ந்த சிந்தனையுடன் சிறிது நேரம் ஒரக்கண் பார்வையில் இருந்தார்.

1996 ஜூலையிலிருந்து 1998 செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் கிளிநொச்சியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த இலங்கை இராணுவம் இலட்சக்கணக்கான கண்ணிவெடிகளையும் மிதி வெடிகளையும் விதைத்திருந்தது.




பொதுமக்களில் 234 பேர் படையினரால் பிடிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 184 பேர் காணாமல் போயிருந்தனர். இற்றைவரை 68 பேரின் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

கொக்கட்டிச் சோலையில் எரிக்கப்பட்டும்—

குமுதினிப் படகில் வெட்டிச் சிதைக்கப்பட்டும்—

வல்வெட்டித்துறையில் குண்டு வைத்துச் சிதறடிக்கப்பட்டும்—

ஒதிய மலையில் சுட்டெறியப்பட்டும்—

கிளாலியிலும் பூவரசங்குளத்திலும் வழி மறித்துச் சுடப்பட்டும்—

நவாலியிலும் நாகர்கோயிலிலும் குண்டு வீசி உடலைப் பிய்த்துப் "பீஸ் பீஸாக்கி"யும்—

செம்மணியில் உயிருடன் புதைக்கப்பட்டும்—

சுதந்திரபுரத்திலும் மந்துவிலிலும் வீடுகள் மீது தாக்குதல் தொடுத்தும் — அந்தந்தப் பிரதேச மக்கள் கொல்லப்பட்டார்கள்.

கிளிநொச்சியிலும் மக்கள் வெட்டியும், கொத்தியும், கழுத்தை நெரித்தும் சுட்டும் கொல்லப்பட்டு மண்ணில் புதைக்கப்பட்டார்கள்.

அவர்களின் எலும்புக்கூடுகள் இப்போதும் மிதந்து கொண்டு இருக்கின்றன.

கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றிய போது மக்கள் அங்கிருந்து பயந்து ஓடி விட்டார்கள். ஒருவரும் இருக்கவில்லை.

அயலில் இருந்த உருத்திரபுரம், பாரதிபுரம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம், விவேகானந்தபுரம், செல்வாநகர், ஆனந்தபுரம், திருவையாறு, கனகாம்பிகைக்குளம், ஜெயந்திநகர்?? 

அக்கராயன், வட்டக்கச்சி போன்ற

முதலான கிராமங்களுக்கே மக்கள் தப்பிச் சென்றார்கள்.

அப்படிச் சென்றவர்களில் ஏழை விவசாயிகளும் அன்றாடம் கூலித் தொழில் செய்து பிழைப்பவர்களுமே அதிகம் பேர்.

தொழிலைத் தொடர வழியில்லை. வருமானம் அறவே இல்லை. சத்ஜெய நடவடிக்கையால் இடம் பெயர்ந்தவர்களுக்கு அரச நிவாரணமும் பணமும் மறுக்கப்பட்டதால் ஒரு நேர உணவுகூடக் கிடைக்கவில்லை. எல்லோரும் பட்டினி.

இந்நிலையில் சொந்த வீடுகளுக்குச் சென்று ஏதாவது பொருள்களை எடுத்து வந்தாவது காலத்தை ஓட்டலாம் என்று போனவர்கள்தான் கொலையுண்டார்கள். மண்ணில் புதைக்கப்பட்டார்கள். எலும்புக் கூடுகளாக இப்போதும் எடுக்கப்பட்டு வருகிறார்கள்.

எலும்புக் கூடுகள் பற்றி நெஞ்சை உலுக்கும் சம்பவம் ஒன்று. எலும்புக் கூடுகள் பற்றித் தகவல் கிடைத்ததும் அவற்றைக் காணச் சென்ற போது ஓரிடத்தில் ஒரு வேலியில் மூன்று எலும்புக் கூடுகள் தொங்கிக் கொண்டு இருந்தன.

உயிர் தப்புவதற்காக அயல் கிராமத்துக்குச் சென்றவர்கள் வேறு வழியில்லாமல் தங்கள் வீடுகளிலிருந்து எதையாவது எடுத்துச் செல்லலாம் என்று வந்திருக்கிறார்கள்.

அப்போது காவல் கடமையில் இருந்த இராணுவத்தினர் சுட்ட போது தப்புவதற்காக மூவரும் வேலியைத் தாண்டி ஓடப்பார்த்திருக்கிறார்கள். அந்த வேளையில் குண்டுகள் அவர்களைத் துளைத்து விட்டன. அதனால் பிணமாகி வேலியில் தொங்கிக் கொண்டார்கள். நாளடைவில் சதை போய்விட்டது. எலும்புக் கூடுகள் மிஞ்சின. இப்படியும் சோரச் சம்பவங்கள்.

கிளிநொச்சியில் மக்கள் எலும்புக் கூடுகள் ஆக்கப்பட்டதோடு கதை முடியவில்லை.

அங்கே நகரம் முழுவதும் விதைக்கப்பட்ட கண்ணி வெடிகளும் மதிவெடிகளும் பயங்கரத்தை வளர்த்துக் கொண்டு இருக்கின்றன.

"போர் நடக்கும் போதை விட அதன் பின்னரான உயிரழிவு பன்மடங்காகும்" என்பது நவீன போர் மொழி. இது கிளிநொச்சியில் நிருபணமாகி வருகிறது.

எலும்புக் கூடுகளோடு கண்ணி வெடிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

வன்னியின் உணவுக் களஞ்சியமாக விளங்கிய கிளிநொச்சி மண்ணில் இன்று நெல்லுக்குப் பதிலாக எலும்புக் கூடுகளும் கண்ணி வெடிகளும் மிதிவெடிகளும்தான் பெருமளவில் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. என்ன பரிதாபம் இது!

மிஸ்டர் க்றோ வந்து பாருங்களேன். இந்த அவலத்தை இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல் உலகோர் அனைவரும் அறிந்து கொள்ள நீங்கள் தான் ஆவன செய்ய வேண்டும்.

இப்படி நெடுங்கேணியூரான் என்ற அந்த வாசகர் க்றோவுக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டார்.




மிஸ்டர் க்றோவுக்கு இதயம் கனத்தது, சூடாகப் பெருமூச்சு வந்தது. கிளிநொச்சிக்குச் சிறகடிப்பதைப் பிறகு வைத்துக் கொள்ளலாம். முதலில் விஷயத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்று துணிந்து விட்டார்.


விற்பனைக்கு

"HONDA" (ஹொண்டா) ஜெனரேட்டர்கள்

650 K
1000K
1200K
EBK 2000
EBK 2000S
EBK 2800
EBK 2800S



GENERAL EQUIPMENTS LTD
316, 400, Sri Sangaraja Mawatha, Colombo 10.
Tel : 327264, 343822-3, 345046, 430799
Fax : 434637


எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின் சுதந்திர உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளனின்

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



**அமரர் மயில்வாகனம் நிமலராஜன்**

| செய்தியாய் | செய்திக்காக |
| --- | --- |
| 05.06.1961 | 19.10.2000 |

உன் மரணம்
உலகின் நரம்புகளை அதிரவைத்தது.
வானலைகள் சோகம் இசைத்தன..
உன் குருதி உறைந்த
இம்மண்ணில் இருந்து
நாளை நீ உயிர்ப்பாய்
**உனது குரல் ஓங்கி ஒலிக்கட்டும்**

குடும்பத்தினர்

இப்பத்திரிகை கொழும்பு ... 2001 ஒக்டோபர் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.